

கொழும்புப் பல்கலைக்கழகம்
இலங்கை

ஆண்டறிக்கை
2017

எமது நோக்கு

“சமூக நலனுக்காக, மனித இயலாற்றலை அதிகரிக்கும் பொருட்டு கல்வி, ஆராய்ச்சி, பயனுரித்தாளர் ஈடுபாடு ஆகியவற்றில் ஓர் உலக வியாபகமிக்க உன்னத மையமாகத் திகழ்தல்”

எமது பணி

தொழிற்றுறையுடனும் சமூகத்துடனுமான கூட்டுழைப்பு, ஈடுபாடு என்பவற்றின்மூலம் அறிவைக் கண்டறிந்து பரப்புதலும் புத்தாக்கங்களை மேம்படுத்துதலும் பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயும் பல்கலைக்கழகத்துக்கு அப்பாலும் ஓர் பரந்த ஆய்வுக் கலாசாரத்தை ஊக்குவித்தலும் எமது பணிகளாகும்.

துணைவேந்தரின் செய்தி



2017ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வும் பெருமிதமும் அடைகிறேன்.

பல்கலைக்கழகமானது 2017ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை, கல்விசார், கல்விசாரா ஆளணிகட்கான ஊழியர் பற்றாக்குறை எனப் பல்வேறு இன்னல்கட்கு முகங்கொடுத்தபோதும் பல துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது.

ரைம்ஸ் உலக உயர்கல்விப் பல்கலைக்கழகங்கள் தரப்படுத்தல் 2016 – 2017 (The Times Higher Education World University Rankings 2016-2017) உலகின் முதல் 980 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கும் ஓரிடம் வழங்கியுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகட்கும் அவற்றுடன் தொடர்புபட்ட பிற செயற்பாடுகளுக்கும் பல்கலைக்கழகத்தில் சாதகமான சூழல் நிலவியிருந்தது. கல்விசார், அதனோடிணைந்த நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்குப் பன்னாட்டுப் பல்கலைக்கழகங்களுடனும் முகவராண்மைகளுடனும் அதிகளவிலான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

வருடாந்த ஆய்வரங்கானது 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதப் பிற்பகுதியில் பல்கலைக்கழக வளாகத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதோடு கல்வியாளர்களின் ஆய்வுக் கண்டடைவுகளைக் கொண்டுசேர்க்கும் முகமாக 2017ஆம் ஆண்டின் பிற்பாதியில் மேலும் சில மாநாடுகள் பீடங்களால் ஒழுங்கமைக்கப்பட்டன. பொதுப் பட்டமளிப்பு விழா, பட்டப்பின் கற்கைகளுக்கான பட்டமளிப்பு விழா என்பன 2017ஆம் ஆண்டு முறையே யூலை, திசெம்பர் மாதங்களில் கோலாகலமாக நடைபெற்றன.

இக்கல்விசார் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, மாணவர்கள், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள், விளையாட்டு, பட்டிமன்றம், கவின்கலை, பண்பாட்டு நிகழ்வுகள் முதலான பாடவிதானம் சாராத செயற்பாடுகள், சமுதாயம்சார் நீடிப்பு நிகழ்வுகள் என்பவற்றில் பெருமளவில் ஈடுபட்டனர். கொழும்புப் பல்கலைக்கழக வர்ணவிருதுகள் விழாவும் வெகு விமரிசையாக நடைபெற்றதோடு அதில் கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் பல விருதுகளையும் வெற்றிக் கிண்ணங்களையும் வென்றனர்.

ஆகவே 2017ஆம் ஆண்டினை விளைதிறன் மிக்கதொரு ஆண்டாக மாற்றியமைக்காக பேரவை, மூதவை, பதிவாளர், பொருளாளர், அனைத்துத் துறைத் தலைவர்கள், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் என அனைவருக்கும் இத்தருணத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதுநிலைப் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க
துணைவேந்தர்

ஜனவரி 2018

முனையம்சங்கள் - 2017

- ரைம்ஸ் உலக உயர்கல்விப் பல்கலைக்கழகங்கள் தரப்படுத்தல் 2016 – 2017 (The Times Higher Education World University Rankings 2016-2017) உலகின் முதல் 980 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கும் ஓரிடம் வழங்கியுள்ளது. உலகளாவிய பல்கலைக்கழக செயலாற்றுகை அட்டவணையே பல்கலைக்கழகங்களை அவற்றின் கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவுப் பரிமாற்றம், சர்வதேசத் தோற்றம் என்ற அனைத்துத் தலையாய பணிகளையும்கொண்டு உலகத்தரம்வாய்ந்த பல்கலைக்கழகங்களைத் தீர்மானிக்கின்றது.

- அவுஸ்ரேலியாவின் எடித் கோவான் பல்கலைக்கழக தலைவரும் துணைவேந்தருமான பேராசிரியர் ஸ்ரீவ் சப்மன், அவுஸ்ரேலியாவின் சர்வதேச மற்றும் எடித் கோவான் பல்கலைக்கழக பீடாதிபதியும் இணைப் பேராசிரியருமான ஹெலன் பொனவிற்றா ஆகியோர் 2017 ஜனவரி 24ஆம் திகதி கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தனர்.

- "நீண்டகாலச் சேவைக்கான விருதுகள் - 2016" நிகழ்வு 2017 ஜனவரி 17ஆம் திகதி கொழும்புப் பல்கலைக்கழக பட்டக்கற்கைகள் பீடக் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

- இலங்கைக்காகன அவுஸ்ரேலிய உயர் ஆணையர் மேதகு பிறைஸ் ஹச்செசன் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களை 2017 ஜனவரி 04ஆம் திகதி சந்தித்தார்.

- சீன மக்கள் குடியரசின் தூதுவர் எச்.ஈ.ஜி ஸியாங்லியாங் 2017 பெப்ரவரி 15ஆம் திகதி புதன்கிழமை BMICHஇல் *"One Belt, One Road – Sri lanka – China Relations"*என்ற தலைப்பில் 13ஆவது சுஜாதா ஜெயவர்தன நினைவுப் பேருரையாற்றினார்.

- இலங்கைக்காகன சீன மக்கள் குடியரசின் உயர் ஆணையர் மேதகு றியாஸ் ஹமிதுல்லா அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களை 2017 பெப்ரவரி 08ஆம் திகதி கொலிஜ் ஹவுஸில் சந்தித்தார். இச்சந்திப்பில் இரு நாடுகளுக்குமிடையில் கூட்டுழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்கும்பொருட்டு இருதரப்பிலும் நன்மைபயக்கக்கூடிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

- கொழும்புப் பல்கலைக்கழக சட்டப்பீடத்தின் 'சட்ட ஆய்வு அலகு' அங்குரார்ப்பண நிகழ்வு 2017 பெப்ரவரி 02ஆம் திகதி 'சிலோன் றூமில்' (Ceylon Room) நடைபெற்றது. கொழும்புப் பல்கலைக்கழக சட்ட ஆய்வு அலகானது நீதி அமைச்சின் பங்கீடுபாட்டுடன் இலங்கையில் சட்ட ஆய்வுகட்கான கூட்டு நிலையமாகும்.

- கொழும்புப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பொருளியற்றுறைப் பட்ட மாணவன் திரு. நவீன் 13ஆவது SAESM நிகழ்வில் சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான விருதை வென்றார். SAESM வரலாற்றிலேயே இலங்கையர் ஒருவர் சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான விருதை முதன்முறை வென்றார் என்ற ஒரு காரணத்துக்காகவே இலங்கைக்கு இது மிகச் சிறப்புமிக்க நிகழ்வாகவும் SAESMஇன் ஆகச் சிறந்த நிகழ்வுகளில் ஒன்றாகவும் விளங்குகிறது.

- அவுஸ்ரேலியாவின் டெகின் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆராய்ச்சிப் பீடாதிபதி பேராசிரியர் அபொன்சோ அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திகாநாயக்கா அவர்களை 2017 ஜனவரி 31ஆம் திகதி சந்தித்தார். இச் சந்திப்பில் இரண்டு பல்கலைக்கழகக் கல்வியாளர்களாலும் மேற்கொள்ளப்படும் கூட்டு ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி பேராசிரியர் அபொன்சோ தெளிவுபடுத்தினார்.

- கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களுக்கும் மிற்சுபிசி யுஎப்ஜே பவுண்டேஷனின் (Mitsubishi UFJ Foundations) முகாமைத்துவப் பணிப்பாளர் யோஷியாகி ஒஸாவா அவர்களுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று பாங் ஒவ் ரோக்கியோ (Bank of Tokyo) - மிற்சுபிசி யுஎப்ஜேவின் கொழும்பு அலுவலகத்தின் அதிகாரிகள் முன்னிலையில் கைச்சாத்தானது.

- கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் அறுவைச்சிகிச்சைத் துறையானது இளநிலை அறுவை மருத்துவர்களும் பட்டப்பின் அறுவை மருத்துவப் பயிலுநர்களும் தமது அறுவை மருத்துவத் திறன்களை விருத்திசெய்துகொள்ளும் பொருட்டு இந்தியாவின் மும்பையிலுள்ள வரையறுக்கப்பட்ட ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தொடங்கியது.

- பல்கலைக்கழகத்துடனும் இதர பங்கீடுபாட்டாளருடனும் இணைந்து ஆராய்ச்சியொன்றை வகுக்கும் நோக்கில் தைப்பே (Taipe) மருத்துவப் பல்கலைக்கழகத்திலிருந்து பேராளர் குழுவொன்று இலங்கைக்கு வருகைதந்தது.

- "உயர் கல்வியில் இலக்கமுறை வாய்ப்புகளைக் (Digital Oportunities) கைப்பற்றுதல்: கம்போடியாவிலும் இலங்கையிலும் தகவற் தொடர்பாடல் தொழினுட்பத்தினால் உந்தப்படும்

புத்தாக்கங்களுக்கான ஊழியர் இயலளவினைக் கட்டியெழுப்புதல்" என்ற தொனிப்பொருளில் யுனெஸ்கோ – ஷென்ஸ்ஹென் நம்பிக்கை நிதியச் சட்டகத்துள்வரும் ஷென்ஸ்ஹென் நகராட்சியின் அனுசரணையில் 2017 மார்ச் 15, 16ஆம் திகதிகளில் UCSC வளாகத்தில் நடைபெற்றது.

- சுங்சுன் சீனமருத்துவப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதியான திருவாட்டி ஹொங் ஜியாங் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களை 2017 மே 03ஆம் திகதி சந்தித்தார். உண்ணாட்டு மருத்துவத் துறையில் இரண்டு பல்கலைக்கழகங்களுக்குமிடையே சாத்தியமான கல்விசார் கூட்டுழைப்புகள் தொடர்பில் ஆராயும் நோக்கிலேயே அவரின் வருகை அமைந்திருந்தது.

- பட்டக்கற்கைகள் பீடமானது கல்வித் தலைமைத்துவத்துக்கான கோல்டன் குளோப் ரைகர்ஸ் விருதினை 2017 ஏப்ரல் 24 அன்று மலேசியாவின் கோலாலம்பூரிலுள்ள 'புல்மன் சிற்றி சென்ரர் ஹோட்டல் ரெசிடென்சஸ்' என்ற விடுதியில் பெற்றது.

- கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் ஜேர்மனியின் ஜஸ்ரஸ் லெய்பேக் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான நீண்டகால பங்கீடுபாட்டை வலுப்படுத்தும் வகையில் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களும் ஜஸ்ரஸ் லெய்பேக் பல்கலைக்கழக முதல்வர் ஜோய்பிராட்டோ முகர்ஜீ அவர்களும் இரண்டு பல்கலைக்கழகங்களுக்கம் இடையிலான கூட்டுறவு உடன்படிக்கையில் 2017 ஏப்ரல் 24 அன்று கைச்சாத்திட்டனர்.

- பன்னாட்டு பரிமாற்றத் திணைக்களத்தின் பணிப்பாளரும் சீனாவின் தியான்ஜின் பல்கலைக்கழகப் பன்னாட்டு மருத்துவக் கல்லூரியின் பீடாதிபதியுமான பேராசிரியர் பெங்லின் குவோ அவர்களும் தியான்ஜின் பன்னாட்டுச் சீனக் கல்லூரியின் பிரதி நிறைவேற்றுப் பீடாதிபதி சென் ஜிங்கோ அவர்களும் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களை 2017 மே 25 அன்று சந்தித்து இரண்டு நிறுவனங்களுக்குமிடையில் சாத்தியமான கூட்டுழைப்புகள்பற்றிக் கலந்துரையாடினர்.

- ஐக்கிய அமெரிக்காவின் வடகரோலினாப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர்கள் பேராசிரியர் ரஜி ரஞ்சிதன், பேராசிரியர் ஹிமாரா ஆகியோர் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களை 2016 மே 24 அன்று சந்தித்ததோடு இரண்டு நிறுவனங்களுக்குமிடையில் சாத்தியமான கூட்டுழைப்புகள்பற்றியும் கலந்துரையாடினர்.

- இந்தியாவின் டெல்லியிலுள்ள தெற்காசியப் பல்கலைக்கழக கணிதவியற் துறை, இந்தோனேசியாவின் பன்டங்கிலுள்ள தொழினுட்ப நிறுவகத்தின் கணிதவியல், இயற்கை விஞ்ஞானங்கள் பீடம் என்பவற்றுடன் இணைந்து கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பீடத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட கணினி மாதிரியாக்கமும் ஒப்புருவாக்கமும் தொடர்பான சர்வதேச மாநாடு 2017 மே 17-19 திகதிகளில் நடைபெற்றது. பல துறைகளில் கணினி மாதிரியாக்கமும் ஒப்புருவாக்கமும் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கும் அது தொடர்பான அறிவைப் பகிர்ந்துகொள்வதற்குமான ஒரு தளத்தை இம்மாநாடு உருவாக்கியது.

- கொழும்புப் பல்கலைக்கழக தொழினுட்பப் பீடத்துக்கான "சரசவி மீதுர" என்ற புதிய விடுதிக் கட்டடத்தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மே மாதம் 29ஆம் திகதி ஹோமாகம பிட்டப்பனவிலுள்ள மஹாஹென்வத்த எனும் இடத்தில் கௌரவ அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, கௌரவ இராஜாங்க அமைச்சர் மோகன் லால் கிரேரோ ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

- கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் தென்கொரியாவின் இஞ்சே பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான பங்கீடுபாட்டை நினைவுகூரும் வகையில் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களும் இஞ்சே பல்கலைக்கழக முதல்வர் இஞ்சூனே சா அவர்களும் இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் 2017 மே 29 அன்று கைச்சாத்திட்டனர்.

- ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் மேதகு முனிர் கியாசி அவர்கள் 2017 யூலை 6 அன்று கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்தார்.

- நேபாளத்தின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டாளர் திரு. கேதர் பிரசாத் ஆச்சார்யா தலைமையிலான பேராளர் குழுவொன்று கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களை யூன் 29 அன்று சந்தித்தது.

- சீனாவின் சொங்கிங்கிலுள்ள அரசியல் விஞ்ஞானம் மற்றும் சட்ட தென்மேற்குப் பல்கலைக்கழக முதல்வர் பேராசிரியர் பு ஸிற்றாங் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களை யூன் 9 அன்று கொலிஜ் கவுஸில் சந்தித்தார். இரண்டு பல்கலைக்கழகங்களுக்குமிடையில் தற்போது இருக்கின்ற கல்விசார் கூட்டுழைப்புகளை முறைப்படுத்துவதே இவ்வருகைக்கான நோக்கமாகும்.

- சுவிற்சலாந்தின் ஐமல்பிறீ பவுண்டேஷன் நிறுவனத்தின் இணைப் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி ஸ்ரெபனீ ஸ்சின்ட்லர் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்து கொழும்புப்

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களை 2017 யூலை 19 அன்று சந்தித்தார். இச் சந்திப்பின்போது பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களும் கலாநிதி ஸ்ரெபனீ ஸ்சின்ட்லர் அவர்களும் இரண்டு நிறுவனங்களுக்குமிடையில் தற்போது நடைபெற்றுவரும் இணைந்த ஆராய்ச்சிக் கூட்டுழைப்புத் தொடர்பில் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டதோடு நடைபெற்றுவரும் கருத்திட்டம் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

- கொழும்புப் பல்கலைக்கழக பொருளியற்பீடத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட தொடர்ச்சியான மூன்றாவது சுற்றுலாத் தலைவர்கள் உச்சிமாநாடும் பன்னாட்டு ஆராய்ச்சிக் கருத்தரங்கும் ஒக்ரோபர் 3, 4ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

- இந்தியாவின் நியூடெல்லியிலுள்ள போலந்து நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் திரு. பிரசேமிஸ்லோ கிரபவ்ஸ்கி அவர்கள் 2017 யூலை 10 அன்று கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்ததோடு கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களைச் சந்தித்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் போலந்திலுள்ள பல்கலைக்கழகங்களுக்குமிடையில் சாத்தியமான கல்விசார் கூட்டுழைப்புகளை ஆராய்வதே இச்சந்திப்பின் நோக்கமாகும்.

- கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா 2017 ஓகஸ்ட் 01, 02ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

- கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களும் சீனாவின் விஞ்ஞான, தொழினுட்ப தென் பல்கலைக்கழகத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி லு சுன் அவர்களும் 2017 ஓகஸ்ட் 8 அன்று சீனாவின் ஷென்ஸ்ஹெனிலுள்ள குறித்த பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது இரண்டு பல்கலைகக்கழகங்களுக்குமிடையேயான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டனர்.

- ஷன்டங் மாகாண மக்கள் அரசின் வெளி விவகார அலுவலகத்தின் பணிப்பாளரும் வெளிநாடுகளுடனான நட்புறவுக்கான ஷன்டொங் மக்கள் சங்கத்தின் தலைவருமான திரு. சியூ கிங்குவோ அவர்கள் தலைமையிலான பேராளர் குழுவொன்று 2017 ஓகஸ்ட் 03 அன்று கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்தது.

- முகாமைத்துவ, நிதி பீடத்தின் மேற்குச் சிறகுக் கட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு 2017 ஓகஸ்ட் 31 அன்று நடைபெற்றது.

- 2017 ஓகஸ்ட் 16, 17ஆம் திகதிகளில் மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடைபெற்ற 15ஆவது மருத்துவக் கல்லூரிகளுக்கிடையிலான உடலியல் வினாவிடைப் போட்டியில் பேரா. ஏ. ராமன் சலன்ஜ் விருதினை வென்றதன் மூலம் மருத்துவப் பீடமானது உலக சம்பியனானது.

- 'தகைசால் பேராசிரியர் இந்திராணி முனசிங்க பாராட்டு மலர்' வெளியீட்டு நிகழ்வு 2017 ஓகஸ்ட் 09 அன்று மாலை 3.00 மணியளவில் கொழும்புப் பல்கலைக்கழக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் தகைசால் பேராசிரியர் எஸ் பத்மநாதன் அவர்கள் இந்நிகழ்வில் சிறப்புரையாற்றினார்.

- ஜோர்ஜியாவின் செனட்சபை (ஐக்கிய அமெரிக்கா) சட்டசபையில் செனட்சபை உறுப்பினர்களால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தனது இருகட்சித் தீர்மானத்தின் மூலம் கொழும்பு மருத்துவப் பீடப் பட்டதாரியான பேராசிரியர். இந்திரன் இந்திரகிருஷ்ணன் அவர்களைக் கௌரவித்தது. ஜோர்ஜியாவின் செனட்சபை வரலாற்றில் எந்தவொரு மருத்துவரும் இத்தகைய சிறப்புமிக்க அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. பெருங்குடற் புற்றுநோய் மற்றும்பிற குடல்சார் நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதிலும் அவை தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குவதிலும் பேராசிரியர். இந்திரன் இந்திரகிருஷ்ணன் அவர்களின் ஈடு இணையற்ற உழைப்பிற்காகவே அவருக்கு இக்கௌரவம் கிடைத்தது. மருத்துவர் ஆளணிக்கான ஜோர்ஜியச் சபையில் பணியாற்றுவதற்காக ஆளுனரால் நியமிக்கப்பட்ட ஆசியாவைப் பூர்வீகமாகக் கொண்ட முதலாவது மருத்துவர் இவராவார்.

- ஐக்கிய இராச்சியத்தின் சௌத்தம்ப்ரன் பல்கலைக்கழகத் துணைத் தலைவர் (சர்வதேச) பேரா. கோலின் கிரான்ட் தலைமையிலான பேராளர் குழுவொன்று 2017 செப்ரெம்பர் 8 அன்று கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்ததோடு கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களைச் சந்தித்தது.

- வித்திய ஜோதி பேராசிரியர் வி.கே. சமரநாயக்க கேட்போர்கூடம் (UCSC) 2017 செப்ரெம்பர் 6ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

- கொழும்புப் பல்கலைக்கழக புள்ளிவிவரவியற் துறையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் 2017 ஒக்ரோபர் 2 அன்று பீட வளாகத்தில் நாட்டப்பட்டது.

- கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் 2017 செப்ரெம்பர் 19 அன்று துரிதப்படுத்தல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து அதுவும் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் உறுதிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்குகள் சங்கத்துக்கும் (ACCA) இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

- கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் மிற்சுபிசி யுஎப்ஜே பவுண்டேஷன் நிறுவனத்துக்குமிடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையின்கீழ் 5100 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான 17 புலமைப்பரிசில்கள் (மாணவர் ஒருவருக்கு தலா 300 அமெரிக்க டொலர்கள் படி) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தெரிவுசெய்யப்பட்ட 17 மாணவர்களுக்கு அவர்களின் கல்விசார் பெறுபேறுகளின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

- நிலையியற் குழுவின் உறுப்பினரும் யுனான் மாகாணக் குழுவின் ஒழுங்கமைப்புக் குழுவின் தலைவருமான திரு. லி ஸியோசன் அவர்களின் தலைமையிலான உயர் மட்டக் கல்வியாளர் குழுவொன்று 2017 செப்ரெம்பர் 18 அன்று கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்தது.

- வரையறுக்கப்பட்ட ஹேமாஸ் உற்பத்தி தனியார் நிறுவனமானது கொழும்புப் பல்கலைக்கழத்தின் விஞ்ஞான, தொழினுட்ப அலகுடன் இணைந்து நம்பிக்கையாகப் பயன்படுத்தக்கூடிய ஒட்டுந்தன்மையற்றதும் செயற்கையான பூச்சிகொல்லித் தன்மையற்றதுமான மொஸ்காட் (Mosguard) எனும் களிம்பு ஒன்றை அறிமுகப்படுத்தியது.

- ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியத்தின் (UNFPA) ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளராகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள திரு. பியோன் அன்டர்சன் அவர்கள் 2017 ஒக்ரோபர் 6ஆம் திகதி கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்தார்.

- இந்தியாவின் பா.ஜ.க கட்சியின் தேசியத் துணைத் தலைவர் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வினய் சஹஸ்ரபுத்தே அவர்கள் 2017 ஒக்ரோபர் 6 அன்று கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்ததோடு கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களையும் சந்தித்தார்.

- சுற்றுலாத் தலைவர்கள் உச்சிமாநாடும் சர்வதேச சுற்றுலா ஆராய்ச்சிக் கருத்தரங்கும் - 2017 என்ற நிகழ்வு பொருளியற்றுறையின் சுற்றுலாப் பொருளியல் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ பழைய மாணவர் சங்கத்துடனும் (AATEHM) சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சுடனும் இணைந்து கொழும்புப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் பொருளியற்றுறையினால் 2017 ஒக்ரோபர் 3, 4ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வானது ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமையத்தின் உலக சுற்றுலா தினத்தை ஒட்டி "அபிவிருத்திக்கான பேண்தகு சுற்றுலா இலங்கை நோக்கிய பயணம்" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றது. சுற்றுலாத் தலைவர்கள் உச்சிமாநாடு கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2017 ஒக்ரோபர் 4ஆம் திகதி வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

- சீனமக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டுத் தேசிய குழுவினதும் (சீன மக்கள் குடியரசின் ஓர் அரசியல் ஆலோசனைச் சபை) சீனா ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிறுவனத்தினதும் உறுப்பினரான மாண்புமிகு திரு. லியு ஸியாவோ பெங் அவர்களின் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று 2017 நவம்பர் 7 அன்று கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்தது.

- கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் பட்டமளிப்பு விழாவொன்று 2017 நவம்பர் 23, 24ஆம் திகதிகளில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.

- சர்வதேச விவகாரங்களுக்கான துணைத் தலைவர் பேராசிரியர் நற்றாலியா சையுல்கோவா சர்வதேச விவகாரங்களுக்கான பிரதித் துணைத் தலைவர் பேராசிரியர் எலனா எம். கோரொஸ்ஹுங்கினா, ரஸ்யாவின் மக்கள் நேயப் பல்கலைக்கழக மருத்துவ நிறுவகத்தின் துணைப் பீடாதிபதி பேராசிரியர் யு.எஸ். குஷ்சினா ஆகியோரைக் கொண்ட பேராளர் குழுவொன்று கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்ததோடு இரண்டு பல்கலைக்கழகங்களுக்குமிடையிலும் சாத்தியமான கூட்டுழைப்புகள் தொடர்பில் கலந்துரையாடும் பொருட்டு பேராசிரியர் லக்ஸ்மன் திசாநாயக்க அவர்களைச் சந்தித்தது.

- ருஷ்ய தூதரகத்தின் முதன்மைச் செயலாளரும் கொழும்பிலுள்ள ருஷ்ய நிலையத்தின் பணிப்பாளருமான திருவாட்டி ஆனஸ்ரேசியா கொக்லொவா, ருஷ்ய தூதரகத்தின் கலாசாரப் பிரிவின் கொழும்பிலுள்ள ருஷ்ய நிலையத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி திரு. புத்தப்பிரிய ராமநாயக்க ஆகியோரும் பேராளர் குழுவுடன் வருகைதந்தனர்.

- கொழும்புப் பல்கலைக்கழக வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கு 2017இன் அங்குரார்ப்பண நிகழ்வு 2017 நவம்பர் 15 அன்று நடைபெற்றது.

- தாய்வானின் தேசிய சுன் யற் சென் பல்கலைக்கழக தொடர்பாடற் பொறியியல் நிறுவகம் சர்வதேச விவகார அலுவலகத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான துணைத் தலைவர் பேரா. சிஹ்-வென் குவோ அவர்களின் தலைமையில் பதினெண்வர் அடங்கிய பேராளர் குழுவொன்று 2017 திசெம்பர் 05ஆம் திகதி கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்தது. இரண்டு பல்கலைக்கழகங்களுக்குமிடையிலும் சாத்தியமான கல்விசார் கூட்டுழைப்புகள் பற்றி ஆராய்வதே இவ்விஜயத்தின் நோக்கமாகும்.

- யுன்னான் பல்கலைக்கழகமானது குடித்தொகையியல் துறையில் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஸ்மன் திசாநாயக்க அவர்களின் பங்களிப்பினை அங்கீகரித்து 2017 நவம்பர் 28ஆம் திகதி அவருக்கு கௌரவ பேராசிரியத்துவத்தை வழங்கியது.

- கொழும்புப் பல்கலைக்கழகமானது சீனா - தென், தென்கிழக்காசியப் பல்கலைக்கழகங்கள் கூட்டமைப்பில் 2017 நவம்பர் 26ஆம் திகதி இணைந்துகொண்டது. யுன்னான் பல்கலைக்கழகமானது தனது பிராந்தியத்திலுள்ள 20 பல்கலைக்கழகங்களையும் சீனாவிலுள்ள 30 பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கி இக் கூட்டமைப்பை ஒழுங்குசெய்தது.

உள்ளடக்கம் **பக்கம்**

1	**மேல்நோக்கு**	**11**
1.1	பேரவை	13
1.2	மூதவை	14
1.3	கூட்டங்கள்	18
1.4	பல்கலைக்கழகத்தின்மீதான மேல்நோக்கு	19
1.5	ஒட்டுமொத்தமான செயலாற்றுகைகள்	20
2	**பீடங்கள், வளாகம், நிலையங்கள், அலகுகள்**	**22**
2.1	கலைப்பீடம்	22
2.2	கல்விப்பீடம்	33
2.3	பட்டக்கற்கைகள் பீடம்	42
2.4	சட்டப் பீடம்	47
2.5	முகாமைத்துவ, நிதிப் பீடம்	54
2.6	மருத்துவப் பீடம்	61
2.7	விஞ்ஞானப் பீடம்	87
2.8	தொழினுட்பப் பீடம்	99
2.9	தாதியப் பீடம்	100
2.10	ஸ்ரீபாளி வளாகம்	101
2.11	சமகால இந்தியக் கற்கைகள் மையம் (CCIS)	109
2.12	பால்நிலைச் சமத்துவத்திற்கான மையம் (CEGE)	116
2.13	மனித உரிமைகட்கான மையம்	118
2.14	உடற்கல்வித் துறை	121
2.15	சுகாதார நிலையம்	122
2.16	தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையம்(NEREC)	125
2.17	பணியாளர் அபிவிருத்தி நிலையம்	127
2.18	சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு, ஆய்வு மையம் (SPARC)	134
2.19	பன்னாட்டுப் பணிமனை	140
2.20	நூலகம்	146
3	**கொழும்புப் பல்கலைக்கழகத்தின்மீதான மேல்நோக்கு**	**152**
3.1	வளங்களும் மாணவர்களும்	152
3.2	உண்ணாட்டு மாணவர்	152
3.3	வெளிநாட்டு மாணவர்	154
3.4	நியமனங்களும் பணியாளர் பற்றிய தகவல்களும்	157
3.5	பணியாளர் மாற்றங்கள்	157
3.6	கல்விசாராப் பணியாளர் விவரம்	162
4	**ஆராய்ச்சி, வெளியீடுகளின் விவரம்**	**163**
5	**மாணவர், பணியாளர் அலுவல்கள்**	**165**
6	**மூலதன வேலைகளும் திட்டமிடலும்**	**170**
7	**உள்ளகக் கணக்காய்வு**	**173**
8	**நிதி மீளாய்வு**	**178**
8.1	நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்	181
9	**நிதிக்கூற்றுப் பற்றி கணக்காய்வாளர் நாயகத்துக்கு அறிக்கை**	**231**
9.1	கணக்காய்வுக் கருத்தறிவிப்பு அறிக்கை	249

1. மேல்நோக்கு


கொழும்புப் பல்கலைக்கழகமானது இலங்கையின் கொழும்பு நகரின் மையப்பகுதியில் பரந்தகன்று அமைந்துள்ளது. சமஸ்கிருதத்தில் "புத்தி சர்வத்ர பிறஜதே" என்று கூறப்படும் "மெய்யறிவு ஐயம்தெளிவிக்கின்றது" என்ற அதன் மகுட வாசகத்துக்கிணங்கக் கொழும்புப் பல்கலைக்கழகம் எல்லாப் பரப்புகளிலும் கல்விசார் உன்னத நிலையைப் பேணுவதற்குப் பெருமுயற்சியெடுக்கின்றது.

கொழும்புப் பல்கலைக்கழகம் ஒன்பது (9) பீடங்களையும் ஒரு வளாகத்தையும் கொண்டுள்ளது. அவையாவன:

- கலைப் பீடம்
- கல்விப் பீடம்
- சட்டப் பீடம்
- முகாமைத்துவ, நிதிப் பீடம்
- மருத்துவப் பீடம்
- விஞ்ஞானப் பீடம்
- பட்டக்கற்கைகள் பீடம்
- தொழினுட்பப் பீடம்
- தாதியியற் பீடம்
- ஸ்ரீ பாளி வளாகம்

இப்பல்கலைக்கழகம் ஏழு (7) இணைக்கப்பட்ட நிறுவகங்களையும் ஒரு கல்விக்கூடத்தையும் கொண்டுள்ளது.

- மனிதவள முன்னேற்ற நிறுவகம் (IHRA)
- உண்ணாட்டு மருத்துவ நிறுவகம் (IIM)
- மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIM)
- தேசிய நூலக, தகவல் விஞ்ஞான நிறுவகம் (NILIS)
- உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல், உயிர்த் தொழில்நுட்பவியல் நிறுவகம் (IBMBB)
- கொழும்புப் பல்கலைக்கழகம், கமத்தொழில்நுட்ப, கிராம விஞ்ஞானங்கள் நிறுவகம் (IARS)
- உண்ணாட்டு மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIIM)
- கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம் (UCSC)


Faculties and Institutes
1. Faculty of Arts
2. Faculty of Education
3. Faculty of Law
4. Faculty of Management and Finance
5. Faculty of Medicine
6. Faculty of Science
7. Faculty of Graduate Studies
8. Sri Palee Campus
9. University of Colombo, School of Computing (UCSC)
10. Institute of Human Resource Advancement (IHRA)
11. Institute of Indigenous Medicine (IIM)
12. Postgraduate Institute of Medicine (PGIM)
13. National Institute of Library and Information Sciences (NILIS)
14. Institute of Biochemistry, Molecular Biology and Biotechnology (IBMBB)
15. University of Colombo, Institute for Agro-Technology and Rural Sciences (UCIARS)
16. Faculty of Nursing
17. Faculty of Technology
18. Postgraduate Institute of Indigenous Medicine (PGIIM)

1.1 பேரவை

பல்கலைக்கழகத்தின் பேரவை 1985ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் 24ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 44ஆம் பிரிவுக்கமைவாக உருவாக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் ஆட்சியதிகார சபையான பேரவையானது துணைவேந்தர் (பதவிவழித் தவிசாளராக), ஸ்ரீ பாளி வளாக முதல்வர், ஏழு பீடங்களினதும் பீடாதிபதிகள் எல்லாமாக ஒன்பது (9) பதவிவழி உறுப்பினர்கள், மூதவையின் இரண்டு பிரதிநிதிகள், இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட பதினொரு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் அது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

பதவிவழியில்		
	தவிசாளர்: துணைவேந்தர்	பேரா. லக்ஷ்மன் திசாநாயக்க
	தலைவர், ஸ்ரீபாளி வளாகம்	கலாநிதி ஆர்.சி.கே.ஹெட்டியாராச்சி
	பீடாதிபதிகள்	
	• கலை	பேரா. அத்துல ரணசிங்க
	• கல்வி	பேரா. (திருமதி) எம்.வி. விதானபத்ர
	• சட்டம்	திருமதி. டபிள்யு இந்திரா நாணயக்கார
	• முகாமைத்துவம், நிதி	கலாநிதி. (திருமதி) ஆர். சேனாதிராஜா (30/11/2017வரை) கலாநிதி.எம்.பி.பி. தர்மதாச (01.12.2017இல் இருந்து)
	• மருத்துவம்	பேரா. ஜெனிபர் பெரேரா
	• விஞ்ஞானம்	பேரா. கே.ஆர்.ஆர். மகானாம
	• பட்டக்கற்கைகள்	பேரா. நயானி மெலகொட
ஏனையோர்		
	மூதவையால் தெரிவுசெய்யப்பட்டவர்கள்	
	• பேரா. ஜானக்க டீ சில்வா (23.08.2017வரை) • பேரா. ஜே.கே.டீ.எஸ். ஜயநெத்தி (19.05.2017 வரை) • பேரா. கே.பி. ஹேவாகமகே (30.08.2017இல் இருந்து) • கலாநிதி. திலான் யு ஹேவாகே (30.08.2017இல் இருந்து)	
	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டவர்கள்	
	• திரு. ராஜன் ஆசீர்வாதம் • திரு. திலக் குணரத்ன • கலாநிதி. ஹர்ஷா கப்ரல் • திரு. நிகெல் ஹட்ச் • பேரா. லக்ஷ்மன் ரத்னாயக்க • கலாநிதி. (திருமதி) ரணீ ஜயமகா • கலாநிதி. ஜே.எம். சுவாமிநாதன் • பேரா. ரொஹான் ஜயசேகர • திருமதி. சி. முபாரக்	
	செயலாளர்: பதிவாளர்	
	• திரு. கே.ஏ.எஸ். எட்வேட்	

1.2. மூதவை

பல்கலைக்கழக மூதவை, 1985இன் 7ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 46(2)ஆம் பிரிவுக்கமைவாக உருவாக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் அது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

பதவி வழியில்		
	தவிசாளர்: துணைவேந்தர்	பேரா. லக்ஷ்மன் திசாநாயக்க
	தலைவர், ஸ்ரீபாளி வளாகம்	கலாநிதி ஆர்.சி.கே.ஹெட்டியாராச்சி
	பீடாதிபதிகள்	
	• கலை	பேரா. அத்துல ரணசிங்க
	• கல்வி	பேரா. எம்.வி. விதானபத்ர
	• சட்டம்	திருமதி. இந்திரா நாணயக்கார
	• முகாமைத்துவம், நிதி	கலாநிதி. ஆர். சேனாதிராஜா
	• மருத்துவம்	பேரா. ஜெனிபர் பெரேரா
	• விஞ்ஞானம்	பேரா. கே.ஆர்.ஆர். மகானாம
	• பட்டக்கற்கைகள்	பேரா. நயானி மெலகொட
	• தாதியியல்	பேரா. தேவக்க வீரக்கோன் (13.02.2017)
	• தொழினுட்பம்	பேரா. ஜே.கே.டி.எஸ் ஜயநெத்தி (19.05.17)
	நிறுவகங்களதும் கல்விக்கூடத்தினதும் பணிப்பாளர்கள்	
	• கமத்தொழினுட்பம், கிராம விஞ்ஞானங்களுக்கான நிறுவகம்	பேரா. கே.ஆர்.ஆர். மகானாம
	• உயிர் இரசாயனவியல், மூலக்கூற்றுயிரியல், உயிர்த்தொழினுட்ப நிறுவகம்	கலாநிதி திருமதி ஷிரோமா ஹதுனெத்தி
	மனிதவள முன்னேற்ற நிறுவகம்	பேரா. ஜே.ஏ.எஸ்.கே.ஜயக்கொடி
	• உண்ணாட்டு மருத்துவ நிறுவகம்	கலா. திருமதி.எஸ்.டீ.ஹப்புஆராச்சி
	தேசிய நூலகம், தகவல் விஞ்ஞான நிறுவகம்	திரு. ஆர்.பி.பி. ரணவீர
	• மருத்துவப் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம்	பேரா. எச். ஜானக்க டீ சில்வா
	• கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்விக்கூடம்	பேரா. கே.பி. ஹேவாகமகே
	துறைத் தலைவர்கள்	
	• கணக்கீட்டியல்	கலா. ஏ.ஏ.சி.அபேசிங்க
	• உடற்கூற்றியல்	கலா. ஏ.பீ. மலாலாசேகர
	• இணைந்த சுகாதார விஞ்ஞானம்	கலா ஜே. வணிகசிங்க
	• உயிர் இரசாயனவியல், மூலக்கூற்றுயிரியல்	கலா. (திருமதி) சிறிதேவ
	• வியாபாரப் பொருளியல்	திரு.எம்.ஆர்.ராஜசூரிய(15/09/16முதல்)
	• பௌத்தக் கற்கைகள்	பேரா. (வண) எம். தம்மஜோதி தேரர் (26.10.2016 தொடக்கம்)
	• இரசாயனவியல்	பேரா. ஆர்.டி.விஜயசேகர
	• பிணி ஆய்வு மருத்துவம்	கலா. ஜி.ஆர். கொன்ரஸ்ரைன்
	• நிதி	கலா. ஏ.ஏ.அஸீஸ்(13.09.17வரை) கலா.எஸ்.புவனேந்திரா(14.9.17முதல்)
	• வர்த்தகச் சட்டம்	திருமதி. எஸ். சேகரராஜசிங்கம் (17/06/2015)
	• சமூக மருத்துவம்	கலா. எம்.சி. வீரசங்கம்
	• குடிச்சரிதவியல்	கலா இ.எல்.எஸ்.ஜே. பெரேரா
	• பொருளியல்	வண. பேரா. டபிள்யூ. விமலரட்ண
	• கல்விசார் உளவியல்	கலா. எஸ். சேனாரத்ன (14.09.2016 வரை) திருமதி.வை.சக்திவேல் (15.09.2016இருந்து)

	• ஆங்கிலம்	பேரா.நிலோபர் டிமெல்
	• ஆங்கில மொழி கற்பித்தல்	திருமதி எஸ்.வை.டயஸ்
	• சட்ட மருத்துவமும் நஞ்சியலும்	கலா. ஜீன் பெரோ (10.09.2017வரை) கலா. என்.டி.என்.ஏ.மென்டிஸ் (11.09.2017)
	• புவியியல்	பேரா. எல். மானவடு (16/01/2015)
	• வரலாறு	கலா. என். விஜேகுணவர்த்தன
	• மனிதவள முகாமைத்துவம்	கலா.என்.என்.ஜே.நவரத்ன (16.08.17வரை) கலா. புவித்திரா கைலாசபதி(17.08.17முதல்)
	• மானுடவியற் கல்வி	திரு. எம். கபிலபண்டார (11.10.17வரை) திரு எஸ் எஸ் தஹநாயக்க(12.10.17முதல்)
	• பன்னாட்டு உறவுகள்	கலா.எம்.எஸ்.டபிள்யூ.பஸ்கல்
	• பன்னாட்டு வியாபாரம்	கலா. எம்.பி.பி. தர்மதாச
	• இதழியல் அலகு	பேரா. சமந்த ஹேரத்
	• முகாமைத்துவம், நிறுவனக் கற்கைகள்	கலா. பி. நிஷாந்த
	• சந்தைப்படுத்தல்	கலா. கே. கஜேந்திரா
	• கணிதவியல்	Dr.T.U.Hewage
	• மருத்துவக் கல்வி	Prof. Indika Karunathilaka
	• மருத்துவ மானுடவியல்	Prof.Saroj Jayasinghe
	• நுண்ணுயிரியல்	கலா. சி.பி.சேனநாயக்க
	• அணுக்கரு விஞ்ஞானம்	பேரா. பி.மகாவத்த (09.11.17வரை) குலா.(திருமதி)எம்.ஆர்.லமபடுசூரிய (10.11.17முதல்)
	• மகப்பேற்றியலும் பெண்ணோயியலும்	பேரா.அத்துல களுஆரச்சி
	• குழந்தை மருத்துவம்	பேரா.வி.பி.விக்கிரமசிங்க (31.08.17வரை) குல. என்.லூகாஸ்(01.09.17முதல்)
	• ஒட்டுண்ணியியல்	பேரா. என்.டி. கருணவீர (30.09.17வரை) பேரா. தீபிகா பெனான்டோ (01.10.17)
	• நோயியல்	கலா.எல்.வி.குணரத்ன
	• மருந்தியல்	பேரா. பி. கலப்பதி (10.09.17வரை) பேரா. எஸ்.ஸ்ரீரங்கநாதன்(11.09.17)
	• பௌதீகவியல்	பேரா. டி.யு.ரி. சொன்னாதர
	• உளவியல்	கலா. (திருமதி) ஏ.டி.ஏ. பெர்னான்டோ
	• தாவர விஞ்ஞானம்	கலா.எஸ்.எம்.டபிள்யூ.ரணவல(15.05.17வரை) கலா.(திருமதி)சி.எம். நாணயகடகார(16.05.17முதல்)
	• அரசறிவியல், பொதுக்கொள்கை	திரு.எம். சேனநாயக்க
	• தனியார், ஒப்பீட்டுச் சட்டம்	திருமதி. என்.ஆர். விஜயசேகர
	• உளவியல் மருத்துவம்	பேரா. வருண டி சில்வா
	• பொது, பன்னாட்டுச் சட்டம்	திருமதி.எஸ்.எஸ்.எம்.டபிள்யூ சேனவிரட்ண
	• விஞ்ஞானம், தொழினுட்பக் கல்வி	கலா. டபிள்யூ.எம். பிரக்நாதர்ஷன
	• சிங்களம்	கலா. லதா குருசிங்க
	• சமூக விஞ்ஞானக் கல்வி	கலா.ஏ.ஏ.ஜயவர்த்தன
	• சமூகவியல்	கலா. சந்தனி லியனகே (15.05.17வரை) பேரா.டி.ஏ.பி.டிசில்வா (16.05.17முதல்)
	• புள்ளிவிவரவியல்	கலா. எம்.டி.ரி. ஆட்டிகல
	• அறுவை மருத்துவம்	பேரா. டி.என். சமரசேகர (16.08.17வரை) பேரா.எஸ்.எம்.விஜேரத்ன(17.08.17முதல்)
	• விலங்கியல்	கலா. டபிள்யூ. பி. யாப்பா
பேராசிரியர்கள்: 1985இன் 07ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் 26(2) (ஏ) பிரிவின்கீழ்.		
	• பேரா. ஏ. களுஆரச்சி	
	• பேரா. ஏ.டி.எம்.எஸ். அபேரத்ன	

	• பேரா. அமல டி சில்வா
	• பேரா. ஏ.எம்.ஜி.என்.கே. அத்தநாயக்க
	• பேரா. ஏ.பி.ஜி. அமரசிங்க
	• பேரா. ஏ.யு. அபயதீர
	• பேரா. அஜந்த ஹப்புஆராச்சி
	• பேரா. அசங்க திலகரத்ன
	• பேரா. அத்துல ரணசிங்க
	• பேரா. சி.எ.ஞானதாசன்
	• பேரா. சி.பி.டி.டபிள்யு. மத்தியு
	• பேரா. சந்திரிக்கா விஜேரத்ன
	• பேரா. டி.ஏ.பி. டி சில்வா
	• பேரா. டி.எம்.எஸ்.எஸ்.எல். திசாநாயக்க
	• பேரா. டி.என். சமரசேகர
	• பேரா. டி.பி. திசாநாயக்க
	• பேரா. டி.ரி.யு. அபேதுங்க
	• பேரா. டி.யு.ஜே. சொன்னாதர
	• பேரா. தீபிகா பெனான்டோ
	• பேரா. இ.ஆர்.எச்.எஸ்.எஸ். எதிரிவீர
	• பேரா. எச்.டி. கருணாரத்ன
	• பேரா. எச்.டி.கே.ஜி.ஏ. வீரகோன்
	• பேரா. எச்.எம். சேனநாயக்க
	• பேரா. எச்.எம்.எஸ். ஹேரத்
	• பேரா. எச்.என்.பி. ஜயசிங்க
	• பேரா. எச்.எஸ். ஹெரப்பரஹேவா
	• பேரா. ஜே.கே.டி.எஸ். ஜயனெத்தி
	• பேரா. ஜெனிபெர் பெரேரா
	• பேரா. கே.எம்.என். டி சில்வா
	• பேரா. கே.பி.எஸ்.சி. ஜயரத்ன
	• பேரா. கே.ஆர்.ஆர். மகாநாம
	• பேரா. கே.எஸ்.ஏ. ஜயசிங்க
	• பேரா. கே.எஸ்.எச். டி சில்வா
	• பேரா. கே. ஷானிக்க ஹிரிம்புரேகம
	• பேரா. எல். மானவடு
	• பேரா. எல்.ஏ.டி.ஏ. திஸ்ஸ குமார
	• பேரா. எம்.டி.பி. டி கொஸ்தா
	• பேரா. எம்.டி.எஸ். லொக்குஹெட்டி
	• பேரா. எம்.இ.எஸ். பெரேரா
	• பேரா. எம்.ஐ.எம். டி சொய்ஸா
	• பேரா. எம்.ஆர். சூரியாரச்சி
	• பேரா. எம்.வி.சி. டி சில்வா
	• பேரா. எம்.டபிள்யு. குணதிலக்க
	• பேரா. மனோரி சேனநாயக்க
	• பேரா. என்.டி. கொடிகார
	• பேரா. என்.எல். அபேசிங்க
	• பேரா. நதிரா கருணாவீர
	• பேரா. நயானி மெலகொட
	• பேரா. நிலோபர் டீ மெல்
	• பேரா. நெலுக்க சில்வா

	• பேரா. பி மகாவத்த
	• பேரா. பி.எஸ்.எம். குணரத்ன
	• பேரா. பி.வி. உடகம
	• பேரா. பிரீத்திகா அங்குணவெல
	• பேரா. ஆர். பெனான்டோ
	• பேரா. ஆர்.டி. விஜயசேகர
	• பேரா. ஆர்.எல்.ஜயக்கொடி
	• பேரா. ஆர்.எல்.சி. விஜேசுந்தர
	• பேரா. ஆர்.எஸ். தசநாயக்க
	• பேரா. எஸ். ராஜபக்ஷ
	• பேரா. எஸ். விஜேரத்ன
	• பேரா. எஸ்.ஏ.நோபேட்
	• பேரா. எஸ்.எம். விஜேரத்ன
	• பேரா. எஸ்.ஆர். சிறிமான்ன
	• பேரா. சரத் விஜயசூரிய
	• பேரா. ஷார்யா ஷரங்குவெல்
	• பேரா. ஷியாம் பெனான்டோ
	• பேரா. சிறியந்தி ஏ. தெரனியகல
	• பேரா. வி.எச்.டபிள்யு. திசாநாயக்க
	• பேரா. வி.பி. விக்ரமசிங்க
	• பேரா. டபிள்யு.பி. யாப்பா
	• பேரா. டபிள்யு. ஐ. டீ சில்வா
	• பேரா. டபிள்யு.கே. டி அப்ரூ
	• பேரா. டபிள்யு. எஸ். பிரேமவன்ச
	• வண. பேரா. எம். தம்மஜோதி தேரர்
	• வண. பேரா. டபிள்யு. விமலரத்ன
	• பேரா. எஸ். பி. பிரேமரத்ன
	• பேரா. (திருமதி) எஸ்.டி. பெனான்டோ
	• பேரா. ஏ.ஏ.பி.ரி. சாக்
	• பேரா.எம். ஆர். விஜேசிங்க
	• பேரா. ஐ.எம்.கே. பெனான்டோ
	• பேரா.பி. என். தயாவன்ச
	• பேரா. எம். எஸ். எஸ். வீரசிங்க
	• பேரா. சி. நீரியெல்ல
	• பேரா.ஜி. ஆர். கொன்ஸ்ரன்ரைன்
	• பேரா. ஏ.எஸ். அதிகாரம்
	• பேரா. பி. லெனரொல்லே
	• பேரா.(திருமதி) எஸ்.எஸ்.எஸ்.பி.டி.பி. சொய்சா

1985இன் 07ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் 26(2) (ஓ) பிரிவின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள்		
	• கலை	கலா. பி.ஆர்.என். பெனான்டோ கலா. சந்தன அளுத்கே
	• கல்வி	கலா. ஏ.எம். ஹெட்டிகே
	• சட்டம்	கலா. ஏச். ஏ. மேனகா கலா. கே. கணசிங்க
	• முகாமைத்துவம், நிதி	இணைப் பேராசிரியர். பி. ரண்டிவெல (07.11.2017வரை) கலா. பவித்திரா கைலாசபதி (06.06.2017வரை) கலா. ஏ.ஏ. அஸீஸ் (08.11.2017) திரு டி.எம.எஸ். தசநாயக்க (07.06.2017முதல்)
	• மருத்துவம்	கலா. எம்.ஆர். ஹனிபா கலா. பந்துக்க கருணாநாயக்க
	• விஞ்ஞானம்	கலா. எம்.ஆர். விஜேசிங்க (30.04.2017வரை) கலா. ரணில் குணரத்ன (07.09.2017 வரை) கலா. எஸ்.எஸ்.என். பெரேரா (01.05.2017) கலா. எரந்ததீ லொக்குபிட்டிய (08.09.2017)
	நூலகர்	கலா. பிரதீபா விஜேதுங்க
	செயலாளர்: பதிவாளர்	திரு. கே.ஏ.எஸ். எட்வேட்

1.3 கூட்டங்கள்

பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகளும் ஏனைய அமைப்புகளும் மீளாய்வாண்டின்போது ஒழுங்காகக் கூடின. ஒவ்வொரு அதிகாரசபையினாலும் அமைப்பினாலும் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

பேரவை	14
மூதவை	12
நிதிக் குழு	11
முகாமைத்துவக் குழு	11
பீடாதிபதிகள் குழு	12
விடுப்பு, விருதுகள் குழு	12
சட்டவாக்கக் குழு	6
திட்டமிடல், அபிவிருத்திக் குழு	11
ஆராய்ச்சி, அபிவிருத்திக் குழு	12
பீடச் சபைகள்	
• கலைப் பீடம்	14
• கல்விப் பீடம்	11
• சட்டப் பீடம்	13
• முகாமைத்துவ, நிதிப் பீடம்	11
• மருத்துவப் பீடம்	12
• விஞ்ஞானப் பீடம்	12
• பட்டக் கற்கைகள் பீடம்	11
• ஸ்ரீ பாளி வளாகச் சபை	10

1.4 பல்கலைக்கழகத்தின்மீதான மேல்நோக்கு

பட்டப்படிப்பு மாணவர் உள்ளெடுப்பு – 2015, 2016, 2017

கல்விநெறி	மொழிமூலம்	உள்ளெடுப்பு 2015	உள்ளெடுப்பு 2016	உள்ளெடுப்பு 2017
கலை	சி/த/ஆ	739	602	602
கல்வி	சி/த/ஆ	-	-	-
சட்டம்	சி/த/ஆ	250	250	250
முகாமைத்துவம்	ஆ	420	422	422
மருத்துவம்	ஆ	200	197	191
இயன்மருத்துவம்	ஆ	22	26	30
உயரியல் விஞ்ஞானம்	ஆ	125	110	414
பௌதிகவியல் விஞ்ஞானம்	ஆ	240	197	
மூலக்கூற்று உயிரியல், உயிர் இரசாயனவியல்	ஆ	60	41	
கைத்தொழிற் புள்ளிவிவரவியல், கணிதவியல் நிதி	ஆ	90	87	
அரங்கக் கலைகள், வெகுசன ஊடகங்கள்	சி	177	160	160
மொத்தம்		**2323**	**2092**	**2069**

பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மாணவர் பகிர்வு

பீடத்தின் பெயர்	பட்ட மாணவர் எண்ணிக்கை	பட்டப்பின் மாணவர் எண்ணிக்கை
கலைப்பீடம்	2150	679
கல்விப் பீடம்	313	2380
சட்டப் பீடம்	998	166
மருத்துவப் பீடம்	1291	118
முகாமைத்துவ, நிதிப் பீடம்	1647	416
விஞ்ஞானப் பீடம்	1626	705
பட்டக் கற்கைகள் பீடம்	-	2187
ஸ்ரீ பாளி வளாகம்	620	104
மொத்தம்	**8,645**	**6,755**

கல்விசார், நிருவாகப் பணியாளர்– 2015, 2016, 2017

வகுதிகள்	2015	2016	2017
கல்விசார்	525	551	577
கல்விசார் துணையாதரவு	33	40	41
நிருவாகம், நிதி	32	37	38
நிருவாகம் (ஏனைய)	22	14	16
மொத்தம்	**592**	**642**	**672**


பட்ட, பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலுள்ள வெளிநாட்டு மாணவர்களின் மொத்த எண்ணிக்கை – 2017

பீடம்	வெளிநாட்டுப் பட்ட மாணவர் எண்ணிக்கை	வெளிநாட்டுப் பட்டப்பின் மாணவர் எண்ணிக்கை
கலை	4	7
பட்டக்கற்கைகள்	-	9
சட்டம்	2	-
முகாமைத்துவம், நிதி	8	7
மருத்துவம்	48	-
விஞ்ஞானம்	3	4
மொத்தம்	**65**	**27**


1.5 ஒட்டுமொத்தச் செயலாற்றுகை

2017இல் பல்கலைக்கழகம் அதன் ஒன்பது பீடங்கள், 56 கற்கைத் துறைகள் என்பவற்றினூடாக அதன் கல்விசார் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

கொழும்புப் பல்கலைக்கழகம் 41.4% கல்விசார் பணியாளரையும், 4% நிருவாகப் பணியாளரையும், 55% கல்விசாராப் பணியாளரையும் கொண்டதான 1,492 பணியாளர் தொகுதி உறுப்பினர்களின் உதவியுடன் அதன் இலக்குகளை நோக்கி வீறுநடைபோட்டது.



முதுநிலைப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள் இடையேயான கல்விசார் பணியாளர் விகிதாசாரப் பகிர்வானது முறையே 6%, 15%, 4%, 63%, 12% என்றவாறு காணப்பட்டது. (உரு-02)



கல்விசார் செயலாற்றுகை

கொழும்புப் பல்கலைக்கழகம் 143 ஆண்டுகளுக்கும் கூடிய வரலாற்று பெருமையுடன் "பாங்கிலும் பண்பிலும் நவீனமானதும் பன்னாட்டுரீதியானதுமான ஒரு தலைநகரப் பல்கலைக்கழகம்" என்ற அதன் நிலையைப் பேணுவதிலுள்ள சவால்களை எதிர்கொள்ளும் அதன் முயற்சியைத் தொடர்கின்றது. பல்கலைக்கழகத்தின் அமைவிடம் பன்னாட்டுத் தகவல்களுக்கான/வளங்களுக்கான நிலையங்கள், நூலகங்கள், அரங்குகள், விளையாட்டுத்தொகுதிகள் ஆகியவற்றை இலகுவாக அணுகக்கூடியதாகத் 'தலைநகரப் பல்கலைக்கழகம்' ஒன்றின் நன்மைகள் யாவற்றையும் மாணவர்களுக்கு வழங்குகின்றது. கொழும்பு மாநகரத்தினுள் அதன் மையமான அமைவிடம் ஒரு பரந்தவீச்சிலான பண்பாட்டு, பொழுதுபோக்கு, வியாபார வசதிகளுக்கு இலகுவான வாய்ப்பை வழங்குகின்றது. அதன் நீண்டகாலப் பெருமைவாய்ந்த வரலாற்றின் துணையுடனும் காலத்தின் சோதனைகளை வெற்றிகொண்ட அதன் கட்டுறுதியான கல்விசார், நிருவாக உட்கட்டமைப்புடனும் இப்பல்கலைக்கழகம் செயலாற்றுகை மேம்பாட்டு மூலோபாயத் திட்டத்துக்கிணங்க, கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் சமூகத்துக்குச் சேவையாற்றுதலிலும் நவீனமான புத்தாக்க அணுகுமுறையைத் தழுவியதன்மூலம் அதன் இலக்குகளை நோக்கி முன்னேறியுள்ளது. கொழும்புப் பல்கலைக்கழகம் பல்-பண்பாட்டு, பல்லின, பல் சமய மாணவர், பணியாளர் தொகையைக் கொண்டதாகச் சமூக ஒத்திசைவையும் பண்பாட்டுப் பல்வகைமையையும் சமத்துவ வாய்ப்பையும் ஒற்றுமையையும் போற்றி வளர்க்கின்றது. மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் பீடங்கள், வளாகம், நிறுவகங்கள், கல்விக்கூடம் என்பவை குறுக்கீடு எதுவுமின்றிக் கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் சாதகமான சூழலில் மிகச் சீராகச் செயற்பட்டது.

2. பீடங்கள், வளாகம், நிலையங்கள், அலகுகள்

2.1 கலைப்பீடம்

அறிமுகம்

மாணவர் தொகையின் அடிப்படையில் கலைப்பீடமே பல்கலைக்கழகத்தின் ஆகப்பெரிய பீடமாகும். இப்பீடம் பவுத்தக் கற்கைகள், குடிச்சரிதவியல், பொருளியல், ஆங்கிலம், ஆங்கிலமொழி கற்பித்தல், புவியியல், வரலாறு, பன்னாட்டு உறவுகள், அரசியல் விஞ்ஞானம், பொதுக்கொள்கை, சிங்களம், சமூகவியல் ஆகிய துறைகளை உள்ளடக்கிய பதினொரு கல்விசார் துறைகளைக் கொண்டுள்ளது. மேலதிகமாக, இப்பீடம் அரபு, இஸ்லாமிய நாகரிக அலகு, கணினி அலகு (மாணவர் கணினி அலகையும் கணினி கற்பித்தல் அலகையும் கொண்டது), பத்திரிகை எழுத்தாண்மை அலகு, கணிதவியல் அலகு, ஆகியவற்றை உள்ளடக்கிய நான்கு கற்பித்தல் அலகுகளைக் கொண்டுள்ளது. ஆங்கில மொழி கற்பித்தல் அலகு 2017 யூன் மாதத்திலிருந்து ஆங்கிலமொழி கற்பித்தல் துறையாகத் தரமுயர்த்தப்பட்டது. இத்துறைகளும் அலகுகளும் மானுடவியல்களிலும் சமூக விஞ்ஞானங்களிலும் கல்விநெறிகளை வழங்குகின்றன. பல்வேறு துறைகளும் பட்டப்படிப்பு மாணவர் 'இளங்கலைமாணிக்' கற்கை நிகழ்ச்சித்திட்டத்தைத் தவிர, முதுமாணி, எம்பில் (MPhil) பீஎச்.டி. பட்டங்களுக்கு இட்டுச்செல்கின்ற நீடிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் வழங்குகின்றன. இப் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் டிப்ளோமா தொடக்கம் பிஎச்.டி வரை காணப்படுகின்றன. நான்காண்டு 'பிஏ'பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்கின்ற அனேக மாணவர்கள் இறுதியில் இப்பீடத்தின் துறைகளால் வழங்கப்படும் பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பதிவுசெய்கின்றனர்.

2017ஆம் ஆண்டில் பேரா. அத்துல ரணசிங்க அவர்கள் கலைப்பீடத்தின் பீடாதிபதியாகத் தொழிற்பட்டார். திரு. சமன் உயன்கொட அவர்கள் பதிற் பதிவாளராத் தொழிற்பட்டார்.. இவ்வாண்டின்போது பின்வரும் ஆசிரியர்கள் துறைகளின் தலைவர்களாகக் கடமையாற்றினர்: பேரா. (வண.) தம்மஜோதி தேரர் (பவுத்தக் கற்கைகள்), கலா. சுனேத்ரா பெரேரா (குடிச்சரிதவியல்); பேரா. வண. டபிள்யு. விமலரத்தன தேரர் (பொருளியல்); பேரா. நெலுபர்த மெல் (ஆங்கிலம்); திருமதி சாவித்திரி டயஸ் (ஆங்கில மொழி கற்பித்தல்) பேரா. லசந்த மானவடு (புவியியல்); கலா. நிர்மலி விஜேகுணவர்தன (வரலாறு); கலா. மனீஷா வனசிங்க பஸ்கல் (பன்னாட்டு உறவுகள்); திரு. மகேஷ் சேனாநாயக்க (அரசியல் விஞ்ஞானம், பொதுக்கொள்கை); திருமதி. லதா குணசிங்க (சிங்களம்), கலா. சந்தனி லியனகே 15.05.2017வரை பின்னர் 16.05.2017முதல் பேரா. பிறேமகுமார டி சில்வா (சமூகவியல்).

பின்வரும் ஆசிரியர்கள் அலகுகளின் இணைப்பாளர்களாகக் கடமையாற்றினர்: கலா. கபூர்தீன் (அரபு, இஸ்லாமிய நாகரிக அலகு); பேரா. சமந்த ஹேரத் (பத்திரிகை எழுத்தாண்மை அலகு); பேரா. எல். மானவடு (கணினி அலகு); கலா. டி.டி.பீ.எம். துனுசிங்க (கணிதவியல் அலகு).

பீடத்தின் பணி

"கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் பயிற்சியிலும் மதிப்பாய்விலும் அதியுயர் கல்விசார், ஒழுக்கநெறித் தரங்களைப் பேணுகின்றதாக, சமூக விஞ்ஞானங்களிலும் மானுடவியல்களிலும் புலமை, திறனாய்வுசார்ந்த விசாரணை, ஆற்றல்கள், தேர்ச்சித்திறன்கள் ஆகியவற்றைக் கூட்டாக ஊக்குவித்தல். மாணவர்கள், மாறிவருகின்ற தொழிலுலகில் சமூகப் பொறுப்புணர்வுடனும் தார்மீக ஈடுபாட்டுடனும் பொருந்தக்கூடியதாக அவர்களுக்குக் குறிப்பான தேர்ச்சித்திறன்களையும் ஆற்றல்களையும் மட்டுமன்றி ஒரு பரந்த சமூக, மனிதநல ஆற்றுப்படுத்தலையும் வழங்குதல்."

கலைப்பீடத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் - 2017

கலைப்பீடத்தின் மூன்றாவது சர்வதேச மாநாடு "அபிவிருத்திக்கான ஆராய்ச்சியில் மானுடவியலினதும் சமூகவியலினதும் வகிபாகம்" என்ற தொனிப்பொருளில் 2017 நவம்பர் 21இ 22ஆம் திகதிகளில் நடைபெற்றது.இம் மாநாட்டில் கொழும்புப் பல்கலைக்கழகக் கலைப்பீடக் கல்வியாளர்கள் பட்டப்பின் மாணவர்கள் பங்குகொண்டதோடு கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு வெளியிலிருந்தும் பங்களிப்புகள் கிடைத்தன. உள்ளகப் பங்கேற்பாளர்களின் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கலாக மாநாட்டில் 64 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தியாவின் சாந்தினிகேதன் விஷ்வ பாரதி பல்கலைக்கழக ஆங்கிலத் துறைப் பேராசிரியர் அம்ரித் சென் அவர்கள் "அபிவிருத்திக்கான ஆராய்ச்சியின் நிலை" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

குடிச்சரிதவியற் துறையானது தனது மூன்றாவது வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கினை "சனத்தொகையும் பேண்தகு அபிவிருத்தியும்" என்ற தொனிப்பொருளில் 2017 திசெம்பர் 15 அன்று தனது பீடத்தில் நடாத்தியது. இதில் 14 நீட்டிப்பு அராய்ச்சிக் கட்டரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக UNFPA பிரதிநிதி திருமிகு றிட்சு நக்கென் அவர்கள் கலந்துகொண்டார். கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் குடிச்சரிதவியற் துறையின் சிரேஷ்ட வரிவுரையாளருமான பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்கள் பேராசிரியர் ஜி.டபிள்யு ரொபேட்ஸ் நினைவுப் பேருரையாற்றினார்.

நேபாளத்தின் காத்மண்டு நகரில் ஜனவரி 29 – பெப்ரவரி 3 வரை நடைபெற்ற 13ஆவது தென்னாசிய பொருளியல் மாணவர் சந்திப்பு (SAESM) இலங்கைக்கும் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் புகழைச் சேர்ப்பதாக அமைந்திருந்தது. பொருளியற் துறையைச் சேர்ந்த பட்டக்கற்கை மாணவன் திரு நவீன் விக்கிரமரத்ன சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான விருதினைப் பெற்றார். ஆசிய பட்டப்படிப்பு மாணவர்களில் சிறந்த ஆய்வுக்கட்டுரையானது ஏழு தென்னாசிய நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பட்டப்படிப்பு மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கொழும்புப் பல்கலைக்கழக பொருளியற்பீடத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட தொடர்ச்சியான மூன்றாவது சுற்றுலாத் தலைவர்கள் உச்சிமாநாடும் பன்னாட்டு ஆராய்ச்சிக் கருத்தரங்கும் "அபிவிருத்திக்கான பேண்தகு சுற்றுலா: இலங்கை நோக்கிய பயணம்" என்ற தொனிப்பொருளில் ஒக்ரோபர் 3, 4ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பொருளியற் துறையால் ஒழுங்கமைக்கப்பட்ட பொருளியலாளர் பல்கலைக்கழக இலங்கை மன்றத்தின் 22ஆவது சந்திப்பு 2017 யூன் 07 அன்று கொழும்புப் பல்கலைக்கழத்தில் நடைபெற்றது. இவ்வரங்கில் இலங்கையின் 15 பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல புகழ்பூத்த பொருளியலாளர்கள் கலந்துகொண்டனர்.

ஆங்கிலத் துறைக்கும் 2009இல் நிறுவப்பட்ட ஜேர்மனியின் ஜஸ்ரஸ் லீபிக் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலக்கல்வி நிறுவகத்திற்கும் இடையிலான பன்னாட்டு மாணவர், பணியாளர் கல்விசார் பரிமாறல் நிகழ்ச்சித்திட்டம் 2017ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாகத் தொடர்ந்தது. 2017இன் முதல் அரையாண்டில் ஆங்கிலத் துறையிலிருந்து ஜேர்மனிக்குச் செல்வதற்காக நான்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள் அதேபோல லீபிக் பல்கலைக்கழகத்திலிருந்து மூன்று மாணவர்கள் இரண்டாம் அரையாண்டில் ஆங்கிலத் துறையில் தம்மைப் பதிவுசெய்துகொண்டார்கள். மேலும் ஆங்கிலத் துறைக்கும் ஜேர்மனியின் தொழினுட்பப் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான கற்பித்தல், ஆய்வுக் கூட்டுழைப்புகளை வலுப்படுத்தும் வகையில் ஜேர்மனியின் ட்ரெஸ்டென் தொழினுட்பப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாதிதிடப்பட்டது.

ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் இரண்டாவது சர்வதேச ஆராய்ச்சிக் கருத்தரங்கு "இரண்டாம் மொழியாக ஆங்கிலம்: அறிவு, கற்றல் மற்றும் உற்பத்தி" என்ற தொனிப்பொருளில் 2017 செப்ரெம்பர் 28, 29ஆம் திகதிகளில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இது 33 ஆய்வுக் கட்டுரைகள், 05 செயலமர்வுகள், 06 சுவரொட்டி விளக்கக்காட்சிகள் என்பவற்றைக் கொண்டிருந்தது.

புவியியல் துறையானது புவியியலைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் இறுதியாண்டு மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு தனது முதலாவது பட்ட மாவர் ஆய்வுக் கருத்தரங்கினை 2017 யூலை 19 அன்று நடாத்தியது. இது, "சமூக பொருளாதார இயங்கியலும் வளர்ச்சியும்", "பௌதிகச் சூழலியல் மாற்றங்களின் காரணிகளை ஆராய்தல்", "மனித நடத்தை: களமும் தகக்கமும்" முதலான தொனிப்பொருள்களைக் கொண்டிருந்தது. மேலும் 2017 யூன் 14 அன்று "மக்களை இயற்கையுடன் இணைத்தல்" என்ற தொனிப்பொருளில் தொடர் செயற்பாடுகளுடன் உலக சூழல் தினம் நினைவுகூரப்பட்டது. இன்னும் இத்துறையினால் தூய்மைத் திட்டம் ஒன்று 2017 ஜனவரி 7, 8ஆம் திகதிகளில் இரத்தினபுரி நுழைவாயிலிலிருந்து தொடங்கி "சிவனொளிபாதமலையில்" முன்னெடுக்கப்பட்டது. ஆனைத்து உயிரினங்களுக்குமான தூய்மையானதும் அழகானதும் ஆரோக்கியமானதுமான சூழலை உருவாக்குவதே இக்கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகவிருந்தது.

சுர்வதேசத் தொடர்புகள் திணைக்களமானது சர்வதேசக் கூட்டுழைப்புகளைப் பெறுவதில் அரும்பணியாற்றியது. புதிய இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆதில் ஒன்று 2017இல் சுவீடனின் உப்பசலா பல்கலைக்கழகத்துடன் செய்யப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் பொஸ்ரன் மஸ்ஸாச்சுசெற்ஸ் பல்கலைக்கழகத்துடனான மற்றைய உடன்படிக்கை 2018இல் இறுதிசெய்யப்படவுள்ளது

சிங்களத் துறையின் ஏழாவது வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கு 2017 ஒக்ரோபர் 16ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை சிங்களத் துறையின் எம்.பி.ஆரியபால கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் மற்றும் மொழியியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் சுவாமிநாதன் விமல் அவர்கள் சிறப்புரையாற்றினார். "சிங்களக் கற்கைகளின் துறைகளுக்கிடையிலான தனமை" என்ற தொனிப்பொருளில் அமைந்த இக் கருத்தரங்கில் 25 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

பீடாதிபதி விருதுகள் இலக்கியப் போட்டி 2017 திசெம்பர் 13ஆம் திகதி புதிய கலையரங்கில் நடாத்தப்பட்டது. இப்போட்டி புனைகதைகள், சிறுகதைகள், பாடல் வரிகள், கவிதைகள், இலக்கியத் திறனாய்வு, அறிவிப்புக் கலை, ஒளிப்படக் காட்சி, குறுநாடகப் பிரதிகள் போன்ற பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியதாக நடத்தப்பட்டது. மேற்படி துறைகளில் மாணவர்களின் செயலாற்றுகையை மதிப்பீடுசெய்த பின்னர் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கப்பட்டன.

கலைப்பீடத்தின் கொன்பியூஸிஸ் நிறுவகமானது சீனாவின் கண்ணம் நோர்மல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஒக்ரோபர் 12ஆம் திகதி கலாசார நிகழ்வொன்றை ஒழுங்கமைத்தது. இந்நிகழ்வில் சீன இசை, நடனம் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வு சீனத் தூதரகத்தின் ஆதரவில் கொன்பியூஸிஸ் நிறுவக தலைமைச்

செயலகத்தின் அனுசரணையில் நடைபெற்றது.

பீட நியமனங்கள்

சமூகவியல் துறையைச் சேர்ந்த கலாநிதி இரேஷா எம். லக்ஷ்மன் அவர்கள் 26.07.2017 வரை கலைப் பீடத்தின் கல்விப் பணிப்பாளராகத் தொழிற்பட்டார். சர்வதேசத் தொடர்புகள் துறையைச் சேர்ந்த கலாநிதி அஜித் பாலசூரிய அவர்கள் புதிய கல்விப் பணியாளராக நியமிக்கப்பட்ட அதேவேளை கலாநிதி சந்தசிறி நிரியல்ல தகவல், ஆவணப்படுத்தல் மையத்தின் ஒருங்கிணைப்பாளராகத் தொடர்ந்தார்.

பட்டக்கற்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள்

2017இல் கலைப்பீடத்தின் மொத்த மாணவர் எண்ணிக்கை ஏறத்தாழ 2390 ஆகும். (2015 – உ/த) புதிய அணியில் 737 மாணவர்கள் உள்வாங்கப்பட்டதோடு அவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் 13.02.2017இல் தொடங்கின. கற்கைநெறி அலகு அமைப்பானது புள்ளிகளுடன்கூடிய உள்ளுறைப்பயிற்சிக் கூறு உள்ளடங்கலாக மாணவர்களுக்கு ஏராளமான கற்கைநெறி அலகுகளை (500) தொடர்ந்து வழங்குகிறது.

கலைப் பீடமானது 2015 மே மாதத்திலிருந்து கலைப் பீடத்தில் மூன்று ஆண்டுப் பட்டத்தினைத் தொடர்ந்தவர்களுக்கான கற்கை ஒழுங்கு ஒன்றை அறிமுகப்படுத்தியது. இக் கற்கை ஒழுங்கு பீடத்தின் துறைகளால் அல்லது அலகுகளால் வழங்கப்படும் குறிப்பான கற்கைநெறித் தெரிவுகளை ஒரு ஒழுங்கிற்குக் கொண்டுவந்ததோடு அவற்றை உன்னிப்பாக இலக்குவைத்தன. துறைகளும் பொதுப் பட்டக்கற்கைகள் மாணவர்களும் தமக்கிடையிலான பரஸ்பர உறவினை அதிகரித்துக்கொள்ளும் பொருட்டு அவர்களுக்கிடையிலான தொடர்பை வலுப்படுத்தவதே இக் கற்கை ஒழுக்கு எண்ணக்கருவின் நோக்கமாகும்.

நீடிப்புக் கற்கைநெறிகளும் சமூகசேவை நிகழ்ச்சித்திட்டங்களும் – 2017

முன்னைய ஆண்டைப் போலவே கலைப்பீடமானது 2017ஆம் ஆண்டிலும் சமூகத்திற்குப் பல நீடிப்புக் கற்கைநெறிகளையும் தொழில்முறை உயர்வுத் தேர்ச்சித்திறன்களையும் வழங்கியதோடு பல்கலைக்கழக வளர்ச்சி நிதிக்கான முதன்மைப் பங்களிப்பாளராகத் தொடர்ந்து விளங்கியது.

பௌத்தக் கற்கைகள் துறையானது கொன்பியூசியஸ் நிறுவகத்தின் அனுசரணையில் புத்த துறவிகளுக்கான சீன மொழிக் கற்கைநெறியை 2017இல் தொடங்கிவைத்தது.

பொருளியல் துறையானது: சுற்றுலாத்துறை, பயணப் பொருளியல், ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா: வியாபாரம் மற்றும் நிதிசார் பொருளியல் நிறைவேற்று டிப்ளோமா மற்றும் நுண்பாக நிதி டிப்ளோமா முதலான மூன்று கற்கைநெறிகளை வழங்கியது.

ஆங்கிலத்துறை பொதுமக்களுக்கான ஆங்கில நீடிப்புக் கற்கைநெறியையும் பல்வேறு அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஆலோசனைச் சேவைகளையும் வழங்கியதோடு வாழ்க்ககைக்கான ஆங்கிலச் சான்றிதழ்க் கற்கைநெறிகள், நிர்வாக, கல்வி நோக்கிலான உயர் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறிகள், ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கிலம் (DETE), ஆங்கில மொழிமூல ஆசிரியர்களுக்கான டிப்ளோமா (DEEMIT) முதலான கற்கைநெறிகளையும் வழங்கியது.

புவியியல் துறையானது உ/த புவியியல் ஆசிரியர்களுக்கான உயர்தர சான்றிதழ்க் கற்கைநெறி, கணினிப் பிரயோகங்களில் சான்றிதழ்க் கற்கைநெறி என்ற இரண்டு புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தியதோடு புவிசார் தகவல் முறைமை (GIS) என்ற குறுங் கற்கைநெறியைத் தொடர்ந்தும் நடாத்தியது.

சர்வதேச உறவுகள் துறையானது 2017ஆம் ஆண்டு சர்வதேச உறவுகளில் சான்றிதழ்க் கற்கைநெறி (CCIR) என்ற தலைப்பில் நீட்டிப்புக் கற்கைநெறி ஒன்றை வழங்கியது.

சிங்களத் துறை தனது "சிங்கள டிப்ளோமா" நிகழ்ச்சித்திட்டத்தினை 2017ஆம் ஆண்டிலும் தொடர்ந்ததோடு பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் என்ற சான்றிதழ்க் கற்கைநெறியையும் அறிமுகப்படுத்தியது.

ஆங்கிலமொழிக் கற்பித்தல் அலகு வியாபார ஆங்கிலச் சான்றிதழ்க் கற்கைநெறியினையும் M - கற்றல் அடிப்படையில் வியாபார ஆங்கில e - டிப்ளோமா கற்கைநெறியையும் வழங்கியது.

பத்திரிகை எழுத்தாண்மை அலகானது 2017ஆம் ஆண்டுக்கான பத்திரிகை எழுத்தாண்மை சான்றிதழ்க் கற்கைநெறியை நடாத்தியது.

நீடிப்புக் கல்விநெறிகளில் மாணவர் சேர்ப்பு – 2017

கற்கைநெறியின் பெயர்	மாணவர் எண்ணிக்கை
புத்த துறவிகளுக்கான சீனமொழிச் சான்றிதழ்க் கற்கைநெறி	100
சுற்றுலா, பயணப் பொருளியல் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தில் டிப்ளோமா	74
நுண் நிதியில் டிப்ளோமா	27
வியாபார, நிதிசார் பொருளியலில் நிறைவேற்று டிப்ளோமா	07
நிர்வாகம், கல்விசார் நோக்கிலான உயர் ஆங்கிலக் கற்கைநெறி – முதலாண்டு நிர்வாகம், கல்விசார் நோக்கிலான உயர் ஆங்கிலக் கற்கைநெறி – இறுதியாண்டு	324 258
ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்ளோமா(DETE) பகுதி i ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்ளோமா(DETE) பகுதி ii	95 70
ஆங்கில மொழிமூல ஆசிரியர்களுக்கான டிப்ளோமா(DEEMIT) -பகுதி i	27
ஆங்கில மொழிமூல ஆசிரியர்களுக்கான டிப்ளோமா(DEEMIT) பகுதி ii	25
உ/த புவியியல் ஆசிரியர்களுக்கான உயர் சான்றிதழ்க் கற்கைநெறி	50
கணினிப் பிரயோகத்தில் சான்றிதழ்க் கற்கைநெறி	25
புவிசார் தகவல் முறைமையில் (GIS) குறுங் கற்கைநெறி	75
பன்னாட்டு உறவுகள் சான்றிதழ்க் கற்கைநெறி(CCIR)	30
வியாபார ஆங்கிலத்தில் சான்றிதழ்க் கற்கைநெறி - அணி 29	278
வியாபார ஆங்கிலத்தில் e டிப்ளோமா	36
பேச்சுத் தமிழில் சான்றிதழ்க் கற்கைநெறி	75
எழுத்துத் தமிழில் சான்றிதழ்க் கற்கைநெறி	18
சிங்களமொழியில் டிப்ளோமா	60
இதழியலில் டிப்ளோமா	150
மொத்தம்	**1804**

பட்டப்பின் கல்விநெறிகள் 2017

2017இல் இப்பீடம் பல்வேறு பட்டப்பின் கல்விநெறிகளை வழங்கியது.

உ. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்.						
வெகுசன ஊடகத் துறை					1	
மொழிக் கற்கைகள் துறை		139				
அரங்காட்டற் கலைகள் துறை						
ஊ. ஏனையவை						
வெகுசன ஊடகத் துறை						
அரங்காட்டற் கலைகள் துறை						
எ. செயலமர்வு – சா/த தொடர்பாடல், ஊடகங்கள் ஆசிரியர்கள்						
வெகுசன ஊடகத் துறை	06		12			

2.10.7 மீண்டுவருஞ் செலவின விவரம்

விடயம்	2016 (ரூ)	2017 (ரூ)
அ. தனிப்பட்ட ஊதியங்கள்	76,821,423.99	93,112,972.94
ஆ. பயணம்	122,116.00	112,972.94
இ. வழங்கல்கள்	4,269,216.49	5,624,911.69

ஈ. பராமரிப்பு	1,265,427.05	1,548,247.25
உ. ஒப்பந்தச் சேவைகள்	14,257,831.51	15,229,469.20
ஊ. ஏனையவை	14,778,296.39	15,048,099.93
மொத்தம்	**111,514,311.43**	**131,260,218.98**

2.10.8 கிடைத்த விருதுகள்

விடயம்	விருதுகளின் எண்.		கல்வியறிவாளர் எண்.		மாணவர் எண்.	
	2016	**2017**	**2016**	**2017**	**2016**	**2017**
அ. உள்நாட்டு விருதுகள்						
அரங்காட்டற் கலைகள் துறை	01	01			01	
ஆ. தேசிய விருதுகள்						
அரங்காட்டற் கலைகள் துறை	01	01				
இ. பன்னாட்டு விருதுகள்						
அரங்காட்டற் கலைகள் துறை						
ஈ. ஏனையவை						
அரங்காட்டற் கலைகள் துறை						
மொத்தம்	**02**	**02**			**01**	

2.10.9 தொடங்கப்பட்ட புதிய கல்விநெறிகள்

பீடம்	**கல்விநெறி**	**மொழிமூலம்**	**சான்றிதழ்**	**டிப்ளோமா**	**பட்டப்பின் டிப்ளோமா**	**முதுமாணி**	**எம்.பில்.**	**பீஎச்.டி**
			2016/2017	**2016/2017**	**2016/2017**	**2016/2017**	**2016/2017**	**2016/2017**
வெகுசன ஊடகங்கள்	பட்டப்பின் டிப்ளோமா	சி			பட்டப்பின் டிப்ளோமா			
வெகுசன ஊடகங்கள்	வெகுசன ஊடகங்களில் முதுமாணி	சி				வெகுசன ஊடகங்களில் முதுமாணி		
வெகுசன ஊடகங்கள்	வானொலி, தொலைக்காட்சி ஊடகவியல்	சி		வானொலி, தொலைக்காட்சி ஊடகவியல்				
மொழிகள்	உயர்கல்வி, தொழில்வாய்ப் பக்கான அங்கிலத்தில் சான்றிதழ்	சி	16/11/2017 சான்றிதழ் மட்டம்					

2.10.10 மீண்டுவருஞ் செலவின விவரம்

விடயம்	2016 (ரூ)	2017 (ரூ)
அ. தனிப்பட்ட ஊதியங்கள்	105,305,246.18	104,471,849.60
ஆ. பயணம்	105,159.85	504,593.50
இ. வழங்கல்கள்	4,801,384.91	4,842,842.55
ஈ. பராமரிப்பு	1,138,265.33	1,328,443.84
உ. ஒப்பந்தச் சேவைகள்	19,093,224.60	16,722,229.57
ஊ. ஏனையவை	31,699,109.60	25,053,402.17
மொத்தம்	**162,142,390.47**	**152,923,361.23**

2.10.11 மூலதனச் செலவின விவரம்

விடயம்	2016 (ரூ)	2017 (ரூ)
அ. தளவாடம், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு		
ஆ. இயந்திரங்கள் கொள்வனவு	14,043,698.27	4,207,652.00
இ. கட்டட, கட்டுமானக் கொள்வனவு	222,683,518.47	2,613,661.78
ஈ. பொருத்திகளும் பொருத்துதல்களும்	313,060.50	12,040.00
உ. நூலக நூல்கள்		
ஊ. கற்பித்தல் உபகரணங்கள்		
மொத்தம்	**237,040,277.24**	**6,833,353.78**

2.10.12 கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடல்) (வெகுசன ஊடகத்துறை)

பெயர், விவரம்	கடன்/ மானியம்	நிதியிடும் முகவர் நிறுவனம்	TCE ரூ.	RFA ரூ.	DF ரூ.
சிறு அராய்ச்சி மானியம்	மானியம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	1,000,000.00		

2.10.13 நிதி முன்னேற்ற விவரம் (செலவினம்)

விடயம்	2017இல் வழங்கல்கள் ரூ	2017இல் செலவு ரூ	சேமிப்பு / மிகை ரூ
அ. கருத்திட்டம் தவிர மீண்டுவருஞ் செலவினம்		650,000.00	
ஆ. கருத்திட்டம் தவிர்ந்த மூலதனம்		14,400,000.00	
இ. கருத்திட்டம் - உண்ணாட்டு நிதியிடல்			
ஈ. கருத்திட்டம் - வெளிநாட்டு நிதியிடல்			
மொத்தம்		**15050000.00**	

2.10.14 நிதி முன்னேற்ற விவரம் (உருவாக்கப்பட்ட வருமானம்)

வருவாய் மூலம்	2017இல் வழங்கல்கள் ரூ	2017இல் செலவு ரூ	வீழ்ச்சி / உபரி
அ. பட்டக் கற்கைகள்		650,000.00	
ஆ. பட்டப்பின் கற்கைகள்		14,400,000.00	
இ. ஆலோசனைகள்			
ஈ. ஏனையவை			
மொத்தம்		**15050000.00**	

2.10.15 நிதிச் செயலாற்றுகைப் பகுப்பாய்வு – 2017

விடயம்	சூத்திரம்	மாணவர் ஒருவருக்கான செலவு ரூ
அ. மாணவர் ஒருவருக்கான மீண்டுவருஞ் செலவினம்	மீ.செ/மாணவர் எண்.	246,650.58
ஆ. மாணவர் ஒருவருக்கான மூலதனச் செலவினம்	மூ.செ/மாணவர் எண்.	11,021.53
மொத்தம்		**257,672.12**

2.10.16 2017இல் பெற்றுக்கொண்ட உட்கட்டுமான வசதிகள்

உட்கட்டமைப்பு விவரங்கள்	செலவினம் (ரூ.)	வேலையின் நிலை
புதிய பெண்கள் விடுதிக்கான 'ரன்டம் ரபிள்' வடிவிலான சுவர், மேற்பரப்பினைக் கொண்ட நீர் வடிகால் அமைப்புக் கட்டுமானம்		நிறைவுசெய்யப்பட்டது
புதிய பெண்கள் விடுதிக்கான மதிற்சுவர், கழிவுநீர் வடிகால் அமைப்புக் கட்டுமானம்		நிறைவுசெய்யப்பட்டது
புதிய பெண்கள் விடுதிக்கான பி.வி.சி நெகிழிக் காப்புறையிடப்பட்ட கம்பிவலை வேலி அமைத்தல்.		நிறைவுசெய்யப்பட்டது
வெகுசன ஊடகங்கள் துறையினை விருத்திசெய்தல்		நிறைவுசெய்யப்பட்டது
ஸ்ரீ பாளி வளாகத்தில் திறந்தவெளி அரங்கம் அமைத்தல்		நிறைவுசெய்யப்பட்டது
அருந்ததி மண்டபத்தின் ஒளி அமைப்பு விருத்தி		நிறைவுசெய்யப்பட்டது
புதிய பெண்கள் விடுதியின் சாளரக் கண்ணாடிகளைச் சுத்தம்செய்தல்	420,959.95	நிறைவுசெய்யப்பட்டது
நூலகக் கட்டடத்தினை விரிவுபடுத்தல்	2,826,510.25	நிறைவுசெய்யப்படவில்லை

நூலகம் - ஸ்ரீ பாளி வளாகம்

அறிமுகம்

2017திசெம்பர் 31இன் முடிவில் ஸ்ரீ பாளி வளாகத்திலுள்ள நூலகம் 25,737க்கும் கூடிய நூல்கள், 900 DVD, CD ஆகியவற்றின் திரட்டொன்றைக் கொண்டிருந்தது.

நூல்களுக்கும் பருவ இதழ்களுக்குமான நூலக ஒதுக்கீடுகள் 2017

2017ஆம் ஆண்டில் ஸ்ரீ பாளி வளாகத்தின் நூலகத்துக்கு நூல்களும் பருவ இதழ்களும் கொள்வனவு செய்வதற்கு ரூ. 1.3 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நூல்களினதும் பருவ இதழ்களினதும் பெறுமதி

கட்டளை வழங்கப்பட்ட வெளிநாட்டு நூல்கள் ரூ. 1,250,000.00 (துறையால் பரிந்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நூல்களுக்குக் கொழும்புப் பல்கலைக்கழக நூலகத்தினூடாக ஏற்கெனவே கட்டளை வழங்கப்பட்டுள்ளது).

கொள்வனவுசெய்த உள்நாட்டு நூல்கள்	ரூ225,596.00
பருவ இதழ்கள்	ரூ 375,000.00
செலவிட்ட மொத்தத் தொகை	ரூ **1,288,596.00**
மீதித் தொகை	ரூ **11,404.00**

கொள்வனவு செய்த நூல்களின் எண்ணிக்கை (உள்நாட்டு, வெளிநாட்டு)	706
நன்கொடைகளாகக் கிடைத்த நூல்களின் எண்ணிக்கை	26
நூலகத்தால் கையேற்கப்பட்ட மொத்த நூல்கள்	**727**
கட்டளை வழங்கப்பட்ட பருவ இதழ்களின் எண்ணிக்கை	07

கருமபீடச் சேவைகள் - 2017

நூலக உறுப்புரிமை

மாணவர்	617
கல்விசார் பணியாளர்	28
நிர்வாகப் பணியாளர்	03
கல்விசாராப் பணியாளர்	50
வழங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை	14706
வழங்கப்பட்ட DVDகளின் எண்ணிக்கை	205
கல்விசார் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை	925

உள்நாட்டுச் செய்தித்தாள்கள்

இவ்வாண்டில் நூலகத்துக்கு 15 நாளேடுகளின் பெயர்களில் ஆங்கில, சிங்களச் செய்தி ஏடுகளும், உள்நாட்டுச் சிங்களப் பருவ இதழ் ஒன்றும் கொள்வளவு செய்யப்பட்டன.
செய்தித்தாள்களுக்காகச் செலுத்திய தொகை ரூ 70,280.80

தொலைந்த நூல்கள்

05 நூல்கள் வாசகர்களால் தொலைக்கப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டன.
பதிலீட்டுத் தொகையாக ரூபாய் 4,042.50 செலுத்தப்பட்டது.

வெளிவாரி மாணவர் பதிவுகள்

பல்வேறு பல்கலைக்கழகங்களையும் நிறுவனங்களையும் சேர்ந்த 04 மாணவர்கள் வெளிவாரி உறுப்பினர்களாகப் பதிவுசெய்யப்பட்டனர்.

நூலகத்துக்கான பதிவுக் கட்டணமாக ஒரு மாத காலத்துக்கு ஓர் உறுப்பினரிடமிருந்து 200 ரூபாய் அறவிடப்படுகிறது.

பதிவுக் கட்டணமாகக் கிடைத்த தொகை ரூ.800.00

நூலகத் தண்டம்

நூலகம் வழமையாக நூலக விடயதானங்களை உரிய திகதியில் திருப்பிக் கொடுக்கத் தவறும் மாணவர்களுக்குத் தண்டம் விதிக்கின்றது.

நூலகத் தண்டமாகக் கிடைத்த தொகை ரூ 53,243.00

நூலகச் சில்லறைக் காசுக் கட்டுநிதி

நூலக சில்லறைக் காசுக் கட்டுநிதியாகப் பயன்படுத்திய மொத்தத் தொகை ரூ. 5,503.00

2.11 சமகால இந்தியக் கற்கைகள் மையம்

அறிமுகம்

சமகால இந்தியக் கற்கைகளுக்கான மையமானது இந்தியாவிலுள்ள சமகாலக் கற்கைகள் தொடர்பான அறிவை இலங்கையில் விருத்தி செய்துகொள்ளுதல், இரண்டு நாடுகளுக்குமிடையில் ஓர் நிறுவனமயப்படுத்தப்பட்ட வலையமைப்பினூடாக இந்திய - இலங்கை உறவினை வலுப்படுத்திக் கொள்ளுதல் என்பவற்றுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை ஊக்குவிக்கும் ஓர் பல்துறை ஆராய்ச்சி மையமாகும். இம்மையமானது இலங்கையிலுள்ள இந்திய உயர் ஆணையத்திற்கும் கொழும்புப் பலக்லைக்கழகத்திற்கும் இடையே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின்கீழ் நிறுவப்பட்டது. மேலும் இது கல்விசார், நிர்வாக விடயங்களுக்காக பட்டக் கற்கைகள் பீடத்தின்கீழ் இயங்குவதோடு தனது ஆலோசனைக் குழு, முகாமைத்துவக் குழு என்பவற்றினூடாக ஏனைய பீடங்களோடும் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியா, இலங்கை என்பன பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே சமூகம், மதம், மொழி, பண்பாடு, பொருளாதாரம், ராஜதந்திரம் முதலான விடயங்களில் உறவுகளைப் பேணிவருகின்ற போதும் இந்தியாவில் நிகழும் சமகால அபிவிருத்திகள், மாற்றங்கள் தொடர்பான கற்கைகளுக்கு அவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இலங்கையின் உயர் கல்வி இருக்கைகளில் முன்னெடுக்கப்படும் அவ்வாறான ஆய்வுகளும் கற்கைகளும் நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு வழிகாட்டுவதிலும் பலப்படுத்துவதிலும் இருநாடுகளுக்குமிடையில் தற்போது நிலவும் நட்புறவிலும் பெரும் பங்கு வகிக்கும் என்பதை உணர்ந்து இலங்கையில் சமகால இந்தியா பற்றிய புரிதலை ஆழமாக்குவதற்கு சமகால இந்தியக் கற்கைகளுக்கான மையமானது பணியாற்றுகிறது.

2017இல் ச.இ.க.மையமானது தனது 05ஆவது ஆண்டை நிறைவுசெய்ததோடு 2017-2022 ஆண்டுகளுக்கான அதன் புதிய வரவு செலவுத் திட்டமும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதிக் குழுவின் ஒப்புதலைப் பெற்றது. இம்மையமானது அதன் 05 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் முதல் கொடுப்பனவை 2017 ஓகஸ்ட் மாதம் பெற்றுக்கொண்டது.

சமகால இந்தியக் கற்கைகள் மையத்தின் நோக்கு

சமகால இந்தியா தொடர்பான அறிவையும் ஆராய்ச்சியையும் ஊக்குவிப்பதற்கான ஓர் கல்விசார் மத்திய நிலையமாகப் பரிணமித்து வளர்தல்.

இலக்குகள்

சமகால இந்தியக் கற்கைகள் துறையில் செயற்படும் கல்விசார் பணியாளர்கள், பட்டப்பின் மாணவர்கள் பொருட்டு அறிவார்ந்தவர் மன்றம் ஒன்றை வழங்குவதும் பிற நிறுவகங்களோடு இணைந்து அதன் உறுப்பினர்களுக்கான ஆய்வுக்கான தளத்தை வழங்குவதம் இம்மையத்தின் தலையாய பணியாகும். மேலும் இம்மையம், பல்துறை அறிஞர்களைக் கொண்ட புதியதோர் தலைமுறையை வளர்த்தெடுக்கவும் கல்விசார், வியாபார, வெளியுறவுக் கொள்கை முதலான துறைகளிலுள்ளவர்களுக்கிடையிலான பொது உரையாடலுக்கான அரங்கை வழங்கவும் எதிர்பார்த்துள்ளது. ஆகவே மையமானது விரிவுரைகள், செயலமர்வுகள், கூட்டிணைந்த ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் உள்ளிட்ட ஏனைய துறைசார் ஆராய்ச்சி நிகழ்ச்சிகள் என்பவற்றை மையமாகக் கொண்டு பணியாற்றுகிறது. சமகால இந்தியக் கற்கைகள் மையமானது தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் ஏனைய அறிஞர்களுடனான தொடர்பை வரவேற்கின்றது.

ஆலோசனைக் குழு

மாண்புமிகு திரு. தரன்ஜித் சந்து	இந்திய உயர் ஆணையர் - துணைத் தலைவர்
முதுநிலைப் பேராசிரியர் லக்ஸ்மன் திசாநாயக்க	துணைவேந்தர் - துணைத் தலைவர்
திரு. அறிந்தம் பக்சி	இந்தியப் பிரதி உயர் ஆணையர்
திரு நித்தீன் ஜெயோலா	முதற் செயலாளர்
கலா. ரஞ்சன் ஹெட்டிஆரச்சி	முதல்வர், ஸ்ரீ பாளி வளாகம்
பேரா. அத்துல ரணசிங்க	பீடாதிபதி, கலை
பேரா. நயானி மெலகொட	பீடாதிபதி, பட்டக் கற்கைகள்
பேரா. மஞ்சுளா விதானபத்திர	பீடாதிபதி, கல்வி
திருமதி டபிள்யு.ஐ. நாணயக்கார	பீடாதிபதி, சட்டம்
கலா. ஆர். சேனாதிராஜா	பீடாதிபதி, முகாமைத்துவம், நிதி
பேரா. கே.ஆர்.ஆர். மகானாம	பீடாதிபதி, விஞ்ஞானம்
பேரா. ஜெனிபர் பெரேரா	பீடாதிபதி, மருத்துவம்
திரு. ராஜன் ஆசீர்வாதம்	பேரவை நியமனம்
பேரா. சாவித்திரி குணசேகர	பேரவை நியமனம்
பேரா. எஸ்.ஏ நோபட்	மூதவை நியமனம்
பேரா. சந்தகோமி கொப்பரஹேவா	பதில் பணிப்பாளர், ச.இ.க.மையம்

நியமனங்கள்

ச.இ.க.மையத்தின் நிறுவுனர் இயக்குநரான **பேரா. சந்தகோமி கொப்பரஹேவா** அவர்கள் 2017 ஜனவரி 1 முதல் உத்தியோகபூர்வமாக புதிய இயக்குநர் ஒருவரை நியமிக்கும்வரை ஓராண்டு காலத்துக்கு ச.இ.க.மையத்தின் பதில் இயக்குநராக நியமிக்கப்பட்டார்..

திருமதி சத்துரிக்கா கருணாநாயக்க அவர்கள் 2017 ஓகஸ்ட் 1 முதல் 06 மாத காலத்துக்கு ச.இ.க.மையத்தின் செயலாளராக மீள்நியமனம் செய்யப்பட்டார். ஆவர் 2017 திசெம்பர் 31ஆம் திகதி ச.இ.க.மையத்திலிருந்து விலகி கொழும்பிலுள்ள இந்திய உயர் ஆணையத்தில் இணைந்துகொண்டார்.

ச.இ.க.மையத்தின் அலுவலக உதவியாளராகவிருக்கும் **திரு எம்.வி பிரேமரத்ன** அவர்களின் சேவை 2017 ஓகஸ்ட் 1 முதல் மேலும் 06 மாத காலத்துக்கு நீட்டிக்கப்பட்டது.

வருகைதரு பேராசிரியர்கள் | குறுங்காலத் தலைமை



பேரா. மொகமட் குல்ரெஸ் அவர்கள் 2017 திசெம்பர் 31 தொடக்கம் ச.இ.க.மையத்தின் வருகைதரு குறுங்காலத் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். பேரா. குல்ரெஸ் அவர்கள் இந்தியாவின் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் மேற்காசிய மற்றும் வட ஆபிரிக்கக் கற்கைகள் துறையின் பேராசிரியராகவும் முன்னாள் தலைவராகவும் பணியாற்றுகிறார். இவர் 'முரண்பாட்டு தீர்மானங்கள் மற்றும் சமாதானக் கற்கைகள் நிகழ்ச்சித்திட்டத்தின்' ஒருங்கிணைப்பாளராக இருப்பதோடு அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் தென்னாபிரிக்க, பிரேசில் கற்கைகளுக்கான மையத்தின் நிறுவுனராகவும் விளங்குகிறார். இவர் ச.இ.க.மையத்தில் இருந்த காலத்தில் பன்னாட்டு உறவுகள் துறை, பட்டக்கற்கைகள் பீடம் என்பவற்றின் பட்ட, பட்டப்பின் மட்டங்களில் மாணவர்களைச் சந்தித்தல் முதலான பல கல்விசார் செயற்பாடுகளில் பங்கேற்றுவந்தார். சமகால இந்தியா பற்றிய ஆய்வுக் கட்டுரைகளைச் செய்துவந்த பன்னாட்டு உறவுகள் துறை மாணவர்களின் இறுதியாண்டுப் பரீட்சைக்கான செயலமர்வு ஒன்றையும் நடாத்திய இவர் பன்னாட்டு உறவுகள் துறை, பட்டக்கற்கைகள் பீடம் என்பவற்றின் பட்டப்பின் மாணவர்களுக்கு பல்வேறு விரிவுரைகளையும் நடாத்தினார். பேராசிரியர் குல்ரெஸ் அவர்கள் பன்னாட்டு உறவுகளில் பட்டப்பின் டிப்புளோமா, உயர் டிப்புளோமா கற்கைகளளைத் தொடரும் மாணவர்களுக்காக பண்டாரநாயக்கா பன்னாட்டுக் கற்கைகள் மையத்தில் சிறப்புரையாற்றுவதற்காகவும் அழைக்கப்பட்டார். தனது பதவிக்காலத்தில் 'இந்திய-இலங்கை உறவுகளை மீளக்கட்டியெழுப்புதல்' எனும் தலைப்பில் டெய்லி நியூஸ் நாளேட்டுக்கு செவ்வியொன்று வழங்கியிருந்தார். பேராசிரியர் குல்ரெஸ் அவர்கள் பேராதனைப் பலகலைக்கழகம், றுகுண பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அரசியல் விஞ்ஞாத்துறை வரிவுரையாளர்கள், மாணவர்களுடன் ஊடாடும் பொருட்டு அப்பல்கலைக்கழகங்களுக்கான கல்விச் சுற்றுலாவொன்றில் கலந்துகொண்டார். மேலும் பேராசிரியர் அவர்கள் *உயர் கல்வி மற்றும் திறன் வீருத்தியில் கூட்டுழைப்புக்கான வாய்ப்புகள்: இந்தியா, இலங்கை பற்றிய விடய ஆய்வு* எனும் தலைப்பிலான ச.இ.க.மையத்தின் தனிக்கட்டுரை நூலையும் தொகுத்தார்.

கல்விசார் வருகைதருநர்

கீழ்க்காணும் வெளிநாட்டு கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், அதிகாரிகள் ஆகியோர் இவ்வாண்டில் மையத்துக்கு வருகைதந்தனர்.

- கலா. லோபமுத்ர மைத்ரா பாஜ்பாய், பண்பாட்டறிஞர், சார்க் பண்பாட்டு மையம், கொழும்பு
- பேரா. கித்தா தரம்பல் - ∴பிரிக், வரலாற்றுத்துறை, தெற்காசிய நிறுவகம், ஹெய்டல்பேக் பல்கலைக்கழகம், ஜேர்மனி
- பேரா. நைமை கட்டூன் குல்ரெஸ், அதிபர், பெண்கள் கல்லூரி, அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம், அலிகர், உத்தரப் பிரதேசம், இந்தியா
- திரு ஷாமிக் சக்கரபர்தி, சிறப்பு செய்தியாளர், தி இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்தியா

- திரு ஆர்ச்சிமன் பாதுரி, உதவிச் செய்தியாசிரியர், ஆசிரியர் தலையங்கம் (விளையாட்டு), த ரைம்ஸ் ஒவ் இந்தியா, கொல்கத்தா
- கலா. வினய் சஹஸ்ரபுத்தே, பாராளுமன்ற உறுப்பினர், ராஜ்ய சபா, இந்தியா
- பேரா. அம்ரித் சென், விஸ்வ-பாரதிப் பல்கலைக்கழகம், சாந்தி நிகேதன், இந்தியா

மாதாந்த அரங்கங்கள் | சிறப்புப் பேச்சாளர்கள்

'கொல்கத்தாவின் அருவமான பண்பாட்டு மரபின் சாரத்தைக் கண்டறிதல்' பற்றிய ச.இ.க.மையத்தின் மாதாந்த அரங்கு

2017 பெப்ரவரி 15



'கொல்கத்தாவின் அருவமான பண்பாட்டு மரபின் சாரத்தைக் கண்டறிதல்' பற்றிய ச.இ.க.மையத்தின் மாதாந்த அரங்கானது கலா. லோபமுத்ர மைத்ரா பாஜ்பாய் (பண்பாட்டறிஞர், சார்க் பண்பாட்டு மையம், கொழும்பு) அவர்களால் ச.இ.க.மையத்தின் கூட்ட மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

"இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் சிங்களப் பாடல்கள், கவிதைகளில் வட இந்தியாவின் தாக்கம்" பற்றிய ச.இ.க.மையத்தின் மாதாந்த அரங்கு

2017 யூலை 21



"இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் சிங்களப் பாடல்கள், கவிதைகளில் வட இந்தியாவின் தாக்கம்" பற்றிய ச.இ.க.மையத்தின் மாதாந்த அரங்கு ஐக்கிய அமெரிக்காவின் ஒகியோப் பல்கலைக்கழக பல்துறைக் கலைகள் மற்றும் இசைக் கூடத்தைச் சேர்ந்த கலா. கரெத் ∴பீல்ட் அவர்களால் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்திலுள்ள எம்.பி ஆரியபால கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

செயலமர்வுகள்

சமகால இந்தியா பற்றிய ஆய்வுக் கட்டுரை அளிக்கைகள் தொடர்பான ச.இ.க.மையத்தின் செயலமர்வு

2017 ஒக்ரோபர் 6



ச.இ.க.மையத்தின் வருகைதரு குறுங்காலத் தலைவர் பேரா. மொகமட் குல்ரெஸ் அவர்கள் சமகால இந்தியா பற்றிய ஆய்வுக் கட்டுரைகளைச் செய்துவரும் பன்னாட்டு உறவுகள் துறை இறுதியாண்டு மாணவர்களுக்கு ஆய்வுக்கட்டுரை அளிக்கை செய்தல் தொடர்பான அரைநாள் செயலமர்வு ஒன்றை நடாத்தினார். இச்செயலமர்வு பட்ட மாணவர்களுக்கு ஆய்வுக்கட்டுரை அளிக்கை பற்றிய நல்ல தகவல்களை வழங்கியதோடு அதனைச் சிறப்புறச் செய்து முடிப்பதற்கும் வழிகாட்டியாக அமைந்தது.

இந்திப் பாடத்தில் மேம்பாடு

மையமானது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடம் மற்றும் கொழும்பிலுள்ள இந்தியக் கலாசார மையம் என்பவற்றோடு இணைந்து கொழும்புப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்களுக்காக இந்தி மொழியில் மேம்பட்ட கற்கை நெறியொன்றைத் தொடங்க எண்ணியுள்ளது. இக்கற்கைநெறிக்கு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 421ஆவது மூதவைக் கூட்டத்தில் ஒப்புதல் கிட்டியுள்ளதோடு இது 2018ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்படவுள்ளது. இந்திமொழியில் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்ற 04 திறன்களையும் வழங்குவதே இக்கற்கைநெறியின் இலக்காகும். இக்கற்கைநெறியானது விரிவுரைகள், கலந்துரையாடல்கள், கருத்தமர்வுகள், வாய்மூல/எழுத்துமூல/காணொலி அளிக்கைகள் என்பவற்றின்மூலம் முன்னெடுக்கப்படும். இது பரந்தளவில் இந்தி பயிலும் ஆர்வம் மிக்க மாணவர்களை இலக்காகக்கொண்டுள்ளது.

ஏனைய நிகழ்வுகள் | வருகைகள்

2017 ஒக்ரோபர் 6இல் இந்திய பா.உ கலா. வினய் சகஸ்ரபுத்தே அவர்களின் வருகை





இந்திய பாராளுமன்ற உறுப்பினர் கலா. வினய் சகஸ்ரபுத்தே அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்ததோடு கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.லக்ஸ்மன் திசாநாயக்க அவர்களைச் சந்தித்தார். ப.க.பீ பீடாதிபதி பேரா. நயானி மெலகொட, ச.இ.க.மையத்தின் பதில் பணிப்பாளர் பேரா. சந்தகோமி கொப்பரஹேவா, கொழும்பிலுள்ள இந்திய உயர் ஆணையத்தின் முதற் செயலாளர் திரு. நித்தின் ஜெயோலா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். துணைவேந்தருடனான சந்திப்பின் பின் கலா. சகஸ்ரபுத்தே அவர்கள் ச.இ.க.மையத்திற்கு வருகைதந்ததோடு மையத்தின் வருகைதரு குறுங்காலத் தலைவர் பேரா. மொகமட் குல்ரெஸ் அவர்களையும்

சந்தித்தார். மேலும் அவர் சமகால இந்தியா பற்றிய ஆய்வுக் கட்டுரைகளைச் செய்துவரும் பன்னாட்டு உறவுகள் துறை பட்ட மாணவர்களுடன் சிறிது கலந்துரையாடினார்.

நோபல் பரிசுபெற்ற இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் மார்பளவுச் சிலைக்கு மாலை அணிவித்தல் - 2015 மே 8







இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 156ஆவது பிறந்த தினத்தை நினைவுகூருமுகமாக இந்திய உயர் ஆணையர் மாண்புமிகு தரன்ஜித் சிங் சந்து அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்திலுள்ள தாகூரின் மார்பளவுச் சிலைக்கு கல்விசார் சமூகங்களினதும் தாகூரின் இரசிகர்களதும் முன்னிலையில் மாலை அணிவித்தார். கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. லக்ஸ்மன் திசாநாயக்க, இந்தியக் கலாசார மையப் பணிப்பாளர் திருமதி ராஜஸ்ரீ பெஹேரா, ப.க.பீடப் பீடாதிபதி பேரா. நயானி மெலகொட, ச.இ.க.மைய இயக்குநர் பேரா. சந்தகோமி கொப்பரஹேவா, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணியாளர்கள் மற்றும் ஏனைய விருந்தினர்கள் எனப் பலர் இந்நிகழ்விற் கலந்துகொண்டனர். தாகூரின் இம்மார்பளவு வெண்கலச் சிலையானது அவரின் 150ஆவது பிறந்த ஆண்டையொட்டி இந்திய அரசின் கலாசார அமைச்சினால் 2012இல் பரிசளிக்கப்பட்டது. இந்நிகழ்வை கொழும்புப் பல்கலைகழகத்தின் சமகால இந்தியக் கற்கைகள் மையமும் கொழும்பு இந்தியக் கலாசார மையமும் இணைந்து ஒழுங்குசெய்தன.

அனுசரணைகள்




மையமானது, 2017 நவம்பர் 21,22ஆம் திகதிகளில் நடைபெற்ற கொழும்புப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் 'அபிவிருத்திக்கான ஆராய்ச்சியில் மானுடவியலதும் சமூக விஞ்ஞானங்களதும் வகிபாகம்' என்ற தலைப்பில் தடைபெற்ற வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கில் சிறப்புரையாற்றுவதற்காக இந்தியாவின் சாந்திநிகேதனிலுள்ள விஸ்வ-பாரதிப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம், ஏனைய நவீன ஐரோப்பிய மொழிகள் துறையின் பேராசிரியர் அம்ரித் சென் அவர்களை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடப் பீடாதிபதியின் வேண்டுகோளின்பேரில் வரவழைத்தது.

- 2017 ஜனவரி 21-24 வரை இந்தியாவின் பெங்களூரின் மக்கள் கல்விச் சங்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட பல்கலைக்கழகப் பன்னாட்டு ஊழியர் விளையாட்டு விழாவில் கலந்துகொள்வதற்கான கொழும்புப் பல்கலைக்கழகப் பணியாளர் துடுப்பாட்ட, பூப்பந்தாட்ட அணிகளுக்கு இந்தியாவின் பெங்களூரின் மக்கள் கல்விச் சங்கத்தின் உடற்கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோளின்படி ச.இ.க.மையம் அனுசரணை வழங்கியது.

2017 மே 11, 12ஆம் திகதிகளில் இந்தியப் பிரதமர் மோடி அவர்களின் இலங்கை வருகைக்கான உரைபெயர்ப்பாளர்கள்


சமகால இந்தியக் கற்கைகள் மையமானது மோடி அவர்களின் இலங்கை வருகைக்காகத் தன்னார்வ உரைபெயர்ப்பாளர்களை இந்திய உயர் ஆணையத்துடன் இணைந்து ஒழுங்குசெய்தது. ச.இ.க.மையத்தின் செயலாளர், சிங்களத் துறையின் தற்காலிக விரிவுரையாளர்கள் அடங்கலாக கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து 10 தன்னார்வ உரைபெயர்ப்பாளர்கள் கலந்துகொண்டார்கள்.


வெளியீடுகள்



இவ்வாண்டில் ச.இ.க.மையமானது அதன் குறுங்காலத் தலைவர் பேரா. மொஹமட் குல்ரெஸ் அவர்களால் எழுதப்பட்ட *'உயர் கல்வி மற்றும் திறன் விருத்தியில் கூட்டுழைப்புக்கான வாய்ப்புகள்: இந்தியா, இலங்கை பற்றிய விடய ஆய்வு'* எனும் தலைப்பிலான ச.இ.க.மையத்தின் தனிக்கட்டுரை நூலை வெளியிடுவதற்கான வேலைகளை மேற்கொண்டது. இத்தனிக்கட்டுரை நூலானது உயர் கல்வித் துறையில் இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புகள்பற்றிப் பேசுவதோடு இருநாடுகளும் தமது சமூக, பொருளாதாரக் கூட்டுறவை வளர்ப்பதற்கு எவ்வாறு கல்விக் கூட்டுறவை அதிகரிப்பது என்பது பற்றியும் பேசுகிறது. 2017 திசெம்பர் 22ஆம் திகதி கொலிஜ் ஹவுஸில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், ப.க.பீட பீடாதிபதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ச.இ.க.மைய நூலகம்







மையத்தின் நூலகமானது சமகால இந்தியா பற்றிக் கற்கும் பட்ட, பட்டப்பின் மாணவர்களுக்கான நூல்வளங்களைத் தொடர்ந்தும் வழங்கியது. இந்நூலகத்தில் சமகால இந்தியா தொடர்பில் ஆங்கிலம், சிங்கள் மொழிகளில் 800இற்கும் மேற்பட்ட நூல்கள் காணப்படுகின்றன. மேலும் இது இந்தியா பற்றிக் கற்கும் பட்ட மாணவர்களுக்கும் சர்வதேச ஆய்வாளர்களுக்கும் இணைய வசதிகளையும் ஒளிநகல் வசதிகளையும் வழங்குகிறது. இவ்வாண்டில் கல்விசார் நூல்கள் பல நூல்திரட்டில் சேர்க்கப்பட்டதுடன் ச.இ.க.மையக் குறுங்காலத் தலைவர் பேரா. மொஹமட் குல்ரெஸ் அவர்களிடமிருந்தும், மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், பன்னாட்டுக் கற்கைகளுக்கான பண்டாரநாயக்கா மையம் முதலானவற்றிடமிருந்தும் நூல்கள் கிடைத்தன.

இந்தியா தொடர்பான வரலாறு, தற்காலப் பிரச்சினைகள் / விடயங்கள் பற்றிக் கற்க விரும்பும் எவருக்குமான நுழைவாயிலாக ச.இ.க.மைய நூலகம் அமைந்துள்ளது.

ச.இ.க.மையத்தின் இணையதளம்





ச.இ.க.மையம் தொடர்பான அனைத்து நிகழ்வுகளும் மாண்புமிகு அரிண்டம் பக்சி அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட ச.அ.க.மையத்தின் இணையதளத்தில் தற்போது கிரமமாக இற்றைப்படுத்தப்படுகின்றன. மேலும் இது இந்தியா, தெற்காசிய பற்றிய கற்கைகளுக்கான கல்விநிறுவகங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளது.

2.12 பால்நிலைச் சமத்துவத்துக்கான மையம்

அறிமுகம்

2016 திசெம்பரில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பால்நிலைச் செயற்பாட்டு மையங்களை நிறுவுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான மையம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பல்கலைக்கழகத்தில் பால்நிலைச் சமத்துவத்தை மேம்படுத்தும் பொருட்டு இம்மையத்தினை அர்ப்பணிப்புமிக்கதாக உருவாக்குவதற்காக துணைவேந்தர் அவர்கள் கலாநிதி சுபாங்கி எம்.கே ஹேரத் அவர்களை கொழும்புப் பல்கலைக்கழக் பால்நிலைச் செயற்பாட்டு மையத்தின் பதில் பணிப்பாளராக நியமித்தார். பால்நிலைச் சமத்துவத்துவம் என்ற கருத்தியலின் முக்கியத்தவம் பற்றி பல்கலைச்சமூகம் கொண்டிருந்த அறியாமை காரணமாக பல்கலைக்கழகத்தினுள் பால்நிலைச் சமத்துவத்தை நிறுவிப் பேணிப்பாதுகாப்பதற்கான தேவை தொடர்பில் பல்கலைச் சமூகத்தை இணங்கச்செய்வது மிகக் கடினமானவொரு இலக்காக அமைந்தது. ஆயினும் 2017 மார்ச் 30ஆம் திகதி இந்நிலையத்தை நிறுவுவதற்காக முன்பிருந்த பட்டக்கற்கைகள் பீடக் கட்டடத்தில் வெற்று அறையொன்று (201) ஒதுக்கப்பட்டது.

இந்நிலையத்திற்கு Center for Gender Equality (பால்நிலைச் சமத்துவத்துக்கான மையம்) எனப் பெயரிடப்பட்டு சுருக்கமாக CEGE என அறியப்பட்டது. நிலையத்துக்கான இடம் ஒதுக்கப்பட்ட மாத்திரத்திலேயே தளவாடமிட்டு அபிவிருத்தி செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதோடு இத்தளவாடமிடும் வேலைகள், உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகளின் பெரும்பகுதி 2017ஆம் ஆண்டின் இறுதியில் முடிக்கப்பட்டன.

நிலையத்தின் இலக்குகள்

I. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அனைவரது கௌரவத்தையும் சமத்துவத்தையும் மதிக்கின்ற ஒரு பண்பாட்டை ஊக்குவித்தல்

II. பால்நிலைச் சமத்துவத்தை முக்கியத்துவம் மிக்கதொரு பேசுபொருளாக்குவதோடு அதனை பல்கலைக்கழகத்தின் சகல அம்சங்களிலும் செயற்பாடுகளிலும் ஊக்குவித்தல்

III. சரியாகத் திட்டமிடப்பட்ட தடுப்புமுறைத் தலையீடுகளினூடாக பாலியல் தொல்லைகள் நிகழாது தடுத்தல்

IV. பாலியல் தொல்லைகள் விடயத்தில் அசகிப்புக் கொள்கையையும் மத்தியஸ்தம் மற்றும் /அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை என்பவற்றினூடாக கிடைக்கும் முறைப்பாடுகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கான பொறிமுறைகளையும் கைக்கொள்ளல்.

நிலையத்தின் பணியாளர்கள்

கலா சுபாங்கி எம்.கே. ஹேரத் - பணிப்பாளர்

என். சம்பத் புஞ்சிஹேவா – ஒருங்கிணைப்பாளர்

எச்.யு.எஸ் சமரவீர – ஒருங்கிணைப்பாளர்

கே.ஜி.எம்.ரி. சந்தமாலி – CAA (பயிலுநர்)

பி.ஜி.வி. அஷானி - (HND பயிலுநர்)

நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

1. பால்நிலைச் சமத்துவத்துக்கான மையத்தை நிறுவுதல். (உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் கிட்டத்தட்ட முடிக்கப்பட்டுவிட்டன. பகுதிபிரிப்புச் செய்து இரகசியச் சந்திப்பு அறை அமைக்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.
2. துணைவேந்தரின் தலைமையில் (ஒவ்வொரு பீடம், நிறுவகம் என்பவற்றிலிருந்து தலா ஒவ்வொரு ஆண் பெண் கல்வியாளர்களை உள்ளடக்கிய) வழிப்படுத்தற் குழுவொன்று அமைக்கப்பட்டதோடு

(நிலையத்தின் செயற்பாடுகளை இற்றைப்படுத்துவதற்கும் அதன் எதிர்கால திட்டமிடலுக்குமாக) மாதாந்தக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

3. கல்விசார் ஊழியர்களிலிருந்து இரண்டு ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
4. நிலையத்திற்கான இரண்டு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர்
5. ஒவ்வொரு பீடத்திலிருந்தும் தன்னார்வக் குழுக்கள் அமைக்கப்பட்டதோடு அவர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் இடம்பெற்றுவருகின்றன.
6. பால்நிலை சார்ந்த சிக்கல்கள் தொடர்பில் வழிப்பாக இருக்கும்பொருட்டும் செயற்படும்பொருட்டும் 'பால்நிலைச் சமத்துவத்துக்கான ஆண்களும் பெண்களும்' என்ற செயற்குழுவினை அமைத்தல்
7. இரண்டு பீடங்களின் (கல்வி, உண்.மரு.நிறு) கல்விசார் ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் பால்நிலை தொடர்பான வழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
8. பால்நிலை எண்ணக்கருவும் பல்கலைக்கழக வாழ்வில் அதன் முக்கியத்துவமும் என்ற தொனிப்பொருளிலான விரிவுரையொன்று பீடமட்ட மாணவர் ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சிகளின்போது மூன்று பீடங்களில் (சட்டம், முகாமைத்துவம், UCSC) நடாத்தப்பட்டது.
9. பல்கலைக்கழகத்தில் பால்நிலைச் சமத்துவம் பால்நிலைச் சிக்கல்கள் தொடர்பான சூழ்நிலைசார்ந்த பகுப்பாய்வொன்றைத் திட்டமிடல். - இது தொடர்பான வினாக்கொத்தொன்று வடிவமைக்கப்பட்டதோடு தரவு திரட்டும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன.
10. பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பால்நிலை விழாவில் மாணவர் பங்கேகற்பினை ஒழுங்கமைத்தல். - இதன் இரண்டு கட்டங்கள் முடிக்கப்பட்டதோடு 2018 பெப்ரவரி 20 – 23ஆம் திகதிகளில் நடைபெறும் மூன்றாம் கட்டத்தில் மாணவர்கள் பங்கேற்பர்.

2.13 மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்

நோக்கு

உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுடன் சுகல மக்களது கௌரவத்தையும் உரிமைகளையும் மதிக்கும் ஒரு நாட்டை உருவாக்குதல்.

பணி

பல்துறைசார் அணுகுமுறையினூடு மனித உரிமைகள் கல்வி, ஆராய்ச்சிக்கான உன்னத நிலையமாகத் திகழ்தல்.

2.13.1 வளங்களும் மாணவர்களும்

பீடம்	கற்கைநெறி	மொத்த மாணவர்		மொத்தக் கல்விசார் பணியாளர்		மொத்தக் கல்விசாராப் பணியாளர்	
		2016	2017	2016	2017	2016	2017
சட்டம் (CSHR)	மனித உரிமைகளில் E - டிப்ளோமா	16 (2016/17)	21 (2017/18)	-	-	1	1
	மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் முதுமாணி(உள்நாடு)	19	12	-	-	2	2
	மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் முதுமாணி (ஆசிய பசுபிக்)	5	5	-	-		
	மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தில் தொலைக்கல்வி டிப்ளோமா	-	85			1	1
	சிறுவர் பாதுகாப்பு மற்றும் உரிமைகளில் பட்டப்பின் டிப்ளோமா	-	88			1	1
	மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளில் சான்றிதழ்		34			1	1
	சிறைச்சாலை நிர்வாகம் பற்றிய மனித உரிமைகள் அணுகுமுறை தொடர்பான தொலைக்கல்வி உயர் சான்றிதழ்	26 (2015/2016)	31				
	மனித உரிமைகள்சார் சட்ட ஒழுங்கு பாதுகாப்பில் டிப்ளோமா	-	50				
மொத்தம்		**66**	**326**			**6**	**6**

2.13.2 உண்ணாட்டு மாணவர்கள்

அ) பட்டப்பின் பட்டங்கள்

பீடம்	கல்விநெறி	மொழிமூலம்	உள்ளெடுப்பு (மாணவர் எண்.)		நடப்பு மாணவர் எண்.	நிறைவுசெய்தோர் எண்.			
			2016	2017		2016	2017	2016	2017
சட்டம் (CSHR)	மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் முதுமாணி(உள்நாடு)	ஆங்கிலம்	19	12		1	0		
	மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் முதுமாணி (ஆசிய பசுபிக்) – வெளிநாட்டு மாணவர்கள்	ஆங்கிலம்	5	5		0	0		
மொத்தம்			**24**	**17**		**1**			

2.13.3 வெளிநாட்டு மாணவர்கள்

பீடம்	கல்விநெறி	மொழிமூலம்	உள்ளெடுப்பு		1ஆம் ஆண்டு மாணவர்		2ஆம் ஆண்டு மாணவர்		3ஆம் ஆண்டு மாணவர்		4ஆம் ஆண்டு மாணவர்		பட்டம் பெற்றோர் எண்.	
			2016	2017	2016	2017	2016	2017	2016	2017	2016	2017	2016	2017
சட்டம் (CSHR)	மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் முதுமாணி (ஆசிய பசுபிக்)	ஆ	5	5									5	0

2.13.4 மீண்டுவருஞ் செலவினம்

விடயம்	2016 ரூ.	2017 ரூ.
அ. ஆளணி ஊதியங்கள்	12,679,181	9,715,956
ஆ. பயணம்		
இ. வழங்கல்கள்	3,066,327	1,373,121
ஈ. பராமரிப்பு		
உ. ஒப்பந்தச் சேவைகள்	1995	
ஊ. ஏனையவை	724,608	1,234,957
மொத்தம்	**16,470,116**	**12,324,034**

2.13.5 மூலதனச் செலவினம்

விடயம்	2016 ரூ.	2017 ரூ.
அ. தளபாடம், அலுவலக உபகரணங்கள் கையேற்பு	0	201,278.00
ஆ. இயந்திரசாதனங்கள் கையேற்பு		
இ. கட்டடங்கள், கட்டமைப்புகள் கையேற்பு		
ஈ. ஏனையவை		
மொத்தம்	**0**	**201,278.00**

2.13.6 கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடல்)

கருத்திட்டம்	கடன்/ மானியம்	நிதியிடும் முகவர் நிறுவனம	TCE ரூ.	RFA ரூ.	DF ரூ.
மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் முதுமாணி (ஆசிய பசுபிக்)		மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலுக்கான ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மையம்.	5,180,319		

(GOSL/ ADB/ IDA. WB/ ….)
RFA: Reimbursable Foreign aid
DF: Domestic Funds

2.13.7 நிதி முன்னேற்ற விவரம் (செலவினம்)

விடயம்	2017இல் வழங்கல்கள் ரூ	2017இல் செலவு ரூ	சேமிப்பு / மிகை ரூ
அ. கருத்திட்டம் தவிர மீண்டுவருஞ் செலவினம்		12,324,034	
ஆ. கருத்திட்டம் தவிர்ந்த மூலதனம்		201,278	
இ. கருத்திட்டம் - உண்ணாட்டு நிதியிடல்			
ஈ. கருத்திட்டம் - வெளிநாட்டு நிதியிடல்			
மொத்தம்		**12,525,312**	

2.14 உடற் கல்வித் துறை

அறிமுகம்

உடற் கல்வித் துறையானது கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்களிடையே விளையாட்டுகளை ஊக்குவித்தல், விருத்தி செய்தல் தொடர்பான சகல செயற்பாடுகளையும் மேற்கொள்கிறது. இத் துறையானது பதில் பணிப்பாளர் ஒருவரையும் மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய பல்வேறு விளையாட்டுகளுக்குப் பொறுப்பான உடற்கல்விப் போதனாசிரியர்கள் அணியொன்றையும் கொண்டுள்ளது. உ.க.துறை உறுப்பினர்கள், தனது சகல முயற்சிகளிலும் வெற்றிபெற வேண்டி வழங்கப்பட்ட ஆண்டுக்கான சகல விளையாட்டுகளதும் தலைவர், துணைத் தலைவர்களை உள்ளடக்கிய அமல்காமேற்றட் கழகத்துடன் (விளையாட்டுப் பேரவை) இணைந்து பணியாற்றுகிறது.

வசதிகள்

உ.க.துறையானது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டி அவர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்குகிறது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பரந்தகன்றதும் நன்கு பராமரிக்கப்படுகின்றதுமான விளையாட்டு மைதானம் துடுப்பாட்டம், ரக்பி, காற்பந்து, அடிபந்தாட்டம், எல்லே, வளைகோலாட்டம் அடங்கலாக அனைத்து வெளிப்புற விளையாட்டுகளுக்கும் களமளிக்கின்றது. கூடைப்பந்தாட்டத் திடல், ரென்னிஸ் திடல் என்பனவும் மைதானத்தை அண்மித்தே அமைந்துள்ளன. உள்ளக அரங்கானது கரப்பந்தாட்டம், மேசைப் பந்தாட்டம், பூப்பந்தாட்டம், கராத்தே, மல்யுத்தம், ரைக்குவாண்டோ முதலான உள்ளக விளையாட்டுகளுக்குக் களம் வழங்குகிற அதேவேளை பல்கலைக்கழக நீச்சல் வீரர்கள் NCC, ரோயல் கல்லூரி, பொலிஸ் நீச்சல் தடாகங்களை அணுகமுடியும். உடற்கல்வித் துறையானது நன்கு பராமரிக்கப்படும் உடல்வலுப் பயிற்சி மண்டபம் ஒன்றையும் சகல மாணவரும் எப்பொழுதும் பயன்படுத்தக்கூடிய உடற் பயிற்சி அறை ஒன்றையும் கொண்டுள்ளது. வீரர்களுக்கு சிறந்த பயிற்சியும் சிறந்த உடற்பயிற்சி வல்லுநர், மருத்துவப் பணியாளர்களும் வாய்த்திருப்பதேடு அவர்கள் தமது முழு ஆற்றலையும் எட்டும்வண்ணம் சாத்தியமான சகல வழிகளிலும் உதவிகளும் வழங்கப்படுகின்றன.

போட்டிகள்

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுகள் நிகழ்வும் ஏளைய ஆண்டுகளில் நடைபெறும் பல்கலைக்கழகங்களுக்கடையிலான போட்டிகளுமே பல்கலைக்கழக வருடாந்த நாட்காட்டியிலுள்ள பிரதான இரண்டு போட்டிகளாகும். கொழும்புப் பல்கலைக்கழகமானது அதன் மெய்வல்லுநர்களதும் பயிற்சியாளர்களதும் அர்ப்பணிப்பின் பயனாக கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அணிகள் அழைப்பின்பேரிலான போட்டிகள் தேசிய, சர்வதேச மட்டப் போட்டிகள் முதலான போட்டிகளில் கலந்துகொள்வதோடு தமது உயர்மட்ட ஆற்றலையும் வெளிப்படுத்துகின்றன. 2017ஆம் ஆண்டு தைப்பேயில் நடைபெற்ற உலகப் பல்கலைக்கழகங்கள் விளையாட்டு விழாவில் இலங்கைப் பேராளர் குழுவில் கொழும்புப் பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 08 வீரர்கள் இடம்பெற்றிருந்தமையானது அதன் வீர வீராங்கனைகளின் ஆற்றலைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. பயிற்சிப் போட்டிகளுக்காகவும் போட்டி நாட்களுக்காகவும் அணிகளுக்கு உதவிப் படிகள் வழங்கப்படுவதோடு அழைப்பின்பேரிலான போட்டிகள், சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றும்போது நிதி உதவிகளும் வழங்கப்படுகின்றன.

வண்ண விருதுகள்

உடற்கல்வித் துறை நாட்காட்டியின் இறுதி நிகழ்வான வண்ண விருதுகள் விழா அமல்காமேற்றட் கழகத்துடன் இணைநந்து மிகவும் கோலாகலமாக ஒழுங்கமைக்கப்பட்டது. இந்நிகழ்வானது விளையாட்டில் சாதனை படைத்துப் பல்கலைக்கழகத்துக்குப் புகழை ஈட்டித்தரும்பொருட்டு தியாகங்கள் பலசெய்த வீரர்களைக் கொண்டாடிக் கௌரவிக்கின்றது

2.15 சுகாதார நிலையம்

மருத்துவப் பணியாளர்

முதன்மை மருத்துவ அலுவலராக கலா. கே.டி.ஐ. வாசுதேவ பணியாற்றுகின்றார். கலா. (திருமதி) எம்.ஏ.பீ.டபிள்யு. பிரேமதிலக, கலா. (திருமதி) டி.எஸ்.கே. தென்னக்கோன், கலா. (திருமதி) ஏ.ஆர்.பீ. ரத்நாயக்க ஆகியோர் ஒப்பந்தத்தின்பேரில் பல்கலைக்கழக மருத்துவ அலுவலர்களாகப் பணியாற்றுகின்றனர். மருத்துவர் (திருமதி) ஐ.பி. சில்வா அவர்கள் பல் மருத்துவராகக் கடமையாற்றுகிறார்.

சேவைகள்

மாணவர்க்கும் பணியாளர்க்கும் வழமையான மருத்துவ சிகிச்சை, பற்சிகிச்சை ஆகியவற்றுடன் சுகாதார நிலையத்தால் பின்வரும் சில மேலதிக சேவைகள் வழங்கப்படுகின்றன.

- புதிதாக அனுமதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் அவர்களின் மருத்துவர்களால் நிரப்பப்படுவதற்கு மருத்துவ வினாக்கொத்தொன்று வழங்கப்படுகின்றது. நிரப்பப்பட்ட வினாக்கொத்துகளும் மருத்துவப் பரிசோதனைப் படிவங்களும் சுகாதார நிலையத்தில் கோப்பிலிடப்படுகின்றன.
- பல்கலைக்கழகச் சேவைகளுக்கு (கொழும்புப் பல்கலைக்கழகம்/ப.மா.ஆ./பீஜிஐஎம்/ஐஐஎம்/ ஹொரண ஸ்ரீபாளி) புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அனைவரும் கடமைபுரியத் தகுதியானவர்களாவென்று பல்கலைக்கழக மருத்துவ அலுவலரால் மருத்துவரீதியாகப் பரிசோதிக்கப்பட்டுப் பொருத்தமான சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- பாரந்தூக்குதல், படகு வலித்தல், மல்யுத்தம், வீதி ஓட்டப்போட்டிகள் போன்ற விசேட விளையாட்டு நிகழ்ச்சிகளுக்காக மாணவர்களுக்கு மருத்துவ, உடல்நலத் தகுதிச் சோதனைகள்.
- ப.மா.ஆ./பீஜிஐஎம்/ஐஐஎம் பணியாளருக்குச் சுகாதார நலன்பேணும் வசதிகள் வழங்கப்படுகின்றன.
- பட்ட மாணவர்களுக்கான இலவச ஆய்வுகூடச் சோதனை வசதிகள் 2017.07.01ஆம் திகதியிலிருந்து தொடங்கப்பட்டன.
- அவசர சிகிச்சை வசதிகள் மேம்படுத்தப்பட்டதோடு ஏனைய அனைத்து வசதிகளுடன் அவசரச் சிகிச்சைப் பிரிவுக்கான நோயாளர் கட்டில் ஒன்றும் கொள்வனவு செய்து பொருத்தப்பட்டது.

பொதுச் சுகாதார சேவை

நுளம்பு இனம்பெருக்குகின்ற வாய்ப்புள்ள இடங்களுக்கு (வழமையான பொதுச் சுகாதாரச் சேவை நடவடிக்கையொன்றாக) பூச்சிகொல்லிகளை விசுறுதல் மேற்கொள்ளப்படுகின்றது. வடிகால் அமைப்பில் அடிக்கடி ஏற்படும் அடைப்புக்கள் தொடர்பான வேலைகளைச் சுகாதார நிலையத்தின் கழிவு அகற்றும் தொழிலாளர் செய்ய முடியாத வேளைகளில் தனியார் ஒப்பந்தகாரர்களினதும் மாநகர சபையினதும் சேவைகளைப் பெறுவதன்மூலம் அப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. டெங்கு கொள்ளைநோயின்போது விடுதிகளையும் சிற்றுண்டிச்சாலைகளையும், அத்துடன் பல்கலைக்கழகத்தின் எல்லாக் கட்டடங்களையும் உள்ளடக்கியதான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டது. டெங்கு கொள்ளைநோய்க் காலப்பகுதிகளில் புகையூட்டித் தூய்மைப் படுத்துவதற்காகப் புதிய புகையூட்டும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது.

கட்டுமானத் தளங்களில் பணிபுரியக்கூடிய பணியாளர்களுக்கான டெங்கு தடுப்புத் தொடர்பான வழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

அட்டவணை 111-1: சிகிச்சைக்கான வரவும் வழங்கப்பட்ட சேவைகளும்

சேவை	சுகாதார நிலையம்- தேஸ்ரன் வீதி			மருத்துவப் பீட சுகாதார நிலையம்			மொத்தம்
	மாணவர்	பணியாளர்	ப.மா.ஆ. ஐஐஎம் பீஜிஐஎம்	மாணவர்	பணியாளர்	ப.மா.ஆ. ஐஐஎம் பீஜிஐஎம்	
சிகிச்சைக்கான வரவு	6942	1120		563	465	141	9231
புதிய நியமனங்களுக்கும் புதிய அனுமதிகளுக்கும் மருத்துவப் பரிசோதனை		93	36				129

மருத்துவச் சான்றிதழ்கள்	48	05		10			63
மருந்து கட்டுதல்	2360	390		20	64	03	2837
பற்சிகிச்சை ஆலோசனை நிரப்பல்கள் பல் பிடுங்குதல் காவி அகற்றல் ஆற்றுப்படுத்தல்கள்	 164 142 11 71 11	 61 135 11 22 06		 02	 05	 02	 234 277 22 93 17
ஆய்வுகூடச் சேவைகள் அ. வழமையான இரத்தப் பரிசோதனை SGPT ESR FBC ஆ. விசேட இரத்தப்பரிசோதனை இ. சிறுநீர்ப் பரிசோதனை ஈ. சிறுநீர் கல்ச்சர் பரிசோதனை உ. மலம் சோதித்தல் ஊ.உண்ணாநிலை/ எழுந்தமான இரத்தச் சர்க்கரை எ. இரத்தச் சர்க்கரைச் சோதனை ECG நெபியுலைசிங்	 01 09 124 01 19 02 03 03	 91 19 08		 19 04	 24 03 02 13 47 -		 44 09 124 01 26 02 106 69 11
களப் பயணங்களுக்கு முதலுதவி மருந்து வழங்கல் ஆராய்ச்சி	03						03

பிணிஆய்வு நிலையங்களுக்கு ஆற்றுப்படுத்தல்கள்

இல.	பிணி ஆய்வு நிலையம்	சுகாதார நிலையம்- தேஸ்ரன் வீதி	மருத்துவபீட சுகாதார நிலையம்	மொத்தம்
01	விபத்துச்சேவை	04	02	06
02	இதய நோயியல்	01	01	02
03	மார்புச் சிகிச்சை நிலையம்	02	-	02
04	தோல்நோயியல்	02	06	08
05	கண் மருத்துவமனை	03	05	08
06	நரம்பியல் சிகிச்சை நிலையம்	03	-	03
07	ஓ.பீ.டி தேசிய மருத்துவமனை	04	-	04
08	ஓபீடி மருத்துவச் சிகிச்சை நிலையம்	16	01	17
09	ஓபீடி அறுவை மருத்துவச் சிகிச்சை நிலையம்	12	06	18
10	எலும்புமுறிவுச் சிகிச்சை நிலையம்	01	01	02
11	மகப்பேற்றியல், பெண்ணோயியல்	-	-	-
12	மனநோய்ச் சிகிச்சை நிலையம்	-	-	-
13	வாதநோய்ச் சிகிச்சை நிலையம்	04	01	05
14	சிறுநீர்த்தொகுதி நோயியல்	01	-	01

15	ஏ.ஆர்.வி.	-	-	-
16	ஈ.என்.ரி. சிகிச்சை நிலையம்	06	01	07
17	பல் மருத்துவ நிறுவகம்	02	-	02
	மொத்தம்	**61**	**24**	**85**

2.16 தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையம் (நேசுநுஊ)

நோக்கு

ஆராய்ச்சி, மதிப்பீடு, அபிவிருத்தி, பரப்புதல் நடவடிக்கைகள் ஆகியவற்றின்மூலம் தேசிய, பிரதேச மட்டத்தில் கல்வியையும் பயிற்சியையும் முன்னேற்றுதலும் கல்வித் தகவற் சேவைகளை வழங்குதலும்.

பணி

தேசிய, பிரதேசத் தோற்றப்பாடுடைய ஆற்றல்மிக்கதும் முற்போக்கானதுமான கல்விசார் ஆராய்ச்சி, மதிப்பீடு, சோதனை, பயிற்சி நிறுவனமொன்றைத் தாபித்தல்.

அறிமுகம்

தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையம் (NEREC) கொள்கை வகுப்பதற்கு ஆராய்ச்சி அடிப்படையிலான காண்புகளை வழங்குகின்ற குறிக்கோளுடன் 2000ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. எனவே, அது தாபிக்கப்பட்ட திறத்தின் நிமித்தம் தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையம் இலங்கையில் கல்விக் கொள்கையும் மாணவர் அடைவும் தொடர்பான ஆராய்ச்சி, மதிப்பீட்டு ஆய்வுகளைத் தொடக்குவதற்கும் நடத்துவதற்குமான ஈடுபாட்டுக் கடப்பாட்டைக் கொண்டுள்ளது. ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையமானது கல்வி அமைச்சினதும் (MoE), உலக வங்கியினதும் கலந்தாலோசனையுடன், பல்வேறு தரங்களைப் பூர்த்திசெய்கின்ற மாணவர்களின் அடைவு பற்றிய தேசிய மதிப்பாய்வுகளை நடத்தியுள்ளது. தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையத்தின் சேவைகள் கல்வி, மதிப்பீட்டுடன் தொடர்புடைய கருத்தரங்குகள், செயலமர்வுகள், ஆற்றல் அபிவிருத்திப் பயிற்சி அமர்வுகள், ஆராய்ச்சி என்பவற்றின்மூலம் அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய இரண்டுக்கும் கிடைக்கின்றன. எனவே, தேசியக் கல்வி ஆராய்ச்சி, மதிப்பீட்டு நிலையம் கல்வி ஆராய்ச்சியின்பால் அர்ப்பணிப்புமிக்க துடிப்பான ஆராய்ச்சிச் சமூகமொன்றை உருவாக்கும் ஈடுபாட்டைக் கொண்டுள்ளது.

2016ஆம் ஆண்டில் தரம் 08ஐ நிறைவுசெய்கின்ற மாணவர்களின் அடைவின் தேசிய மதிப்பீடு நிறைவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வி ஆணைக்குழு, உலக வங்கி ஆகியவற்றின் அதிகாரிகள் அடங்கலாகத் தொடர்புடைய பங்கீடுபாட்டாளர்களுக்குக் காண்புகளைப் பரப்புதல் 2017 நவம்பர் 13ஆந் தேதியன்று கல்விப் அமைச்சில் இடம்பெற்றது. உலக வங்கியால் நிதியுதவி வழங்கப்பட்ட இக்கருத்திட்டத்தைக் கல்வி அமைச்சு செயற்படுத்தியது.

எதிர்காலத் திட்டங்கள்

2003 ஆய்வின் பிரதிபலிப்பான குடியியல் கல்வி – 2017 தற்போது நிறைவேற்றப்பட்டு வருவதுடன் GIZ இதற்கு நிதியுதவி வழங்குகிறது. 'எட்டாம் வகுப்பினை முடிக்கும் மாணவர்களின் இரண்டாம் தேசிய மொழித் தொடர்பாடல் திறன்களை மதிப்பிடல்' எனும் இன்னொரு ஆய்வு 2018 பெப்ரவரியில் தொடங்கவிருக்கிறது.

கல்விசாராப் பணியாளர்

01 அலுவலக முகாமையாளர் (ஒப்பந்த அடிப்படையில்)
01 அலுவலக உதவியாளர்

2.16.1 ஆராய்ச்சி, புத்தாக்கம், வெளியீடுகள்

விடயம்	வெளியிடப் பட்டவை		வணிகமயப்படுத்தப் பட்டவை		சமர்ப்பிக்கப்பட்டவை	
	2016	2017	2016	2017	2016	2017
அ. ஆராய்ச்சிகளின் எண்.	02	01			02	01
ஆ. புத்தாக்கங்களின் எண்.						
இ. குறிப்பேடுகளின் எண்.						
ஈ. நூல்களின் எண்.	01	01			01	01
உ. கட்டுரைகளின் எண்.	01					
ஊ. ஏனையவை						
மொத்தம்	**04**	**02**			**03**	**02**

2.16.2 மீண்டுவருஞ் செலவினம்

விடயம்	2016 ரூ.	2017 ரூ.
அ. ஆளணி ஊதியங்கள்	756,303.89	666,890.33
ஆ. பயணம்		
இ. வழங்கல்கள்	91,036.82	255,735.42
ஈ. பராமரிப்பு	13,875.00	14,375.00
உ. ஒப்பந்தச் சேவைகள்		
ஊ. ஏனையவை		
மொத்தம்	**861,215.71**	**937,000.75**

2.16.3 மூலதனச் செலவினம்

விடயம்	2016 ரூ.	2017 ரூ.
அ. தளபாடம், அலுவலக உபகரணங்கள் கையேற்பு	-	-
ஆ. இயந்திரசாதனங்கள் கையேற்பு	800,415.00	-
இ. கட்டடங்கள், கட்டமைப்புகள் கையேற்பு	-	-
ஈ. ஏனையவை	-	-
மொத்தம்	**800,415.00**	**-**

2.16.4 கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடல்)

பெயர், விவரம்	கடன்/மானியம்	நிதியிடும் முகவர் நிறுவனம்	மொத்தப் பாதீடு
இலங்கையில் 2016இல் தரம் 08ஐ நிறைவுசெய்கின்ற மாணவர்களின் அடைவு பற்றிய தேசிய மதிப்பீடு	மானியம்	உலக வங்கி	Rs. 9,996,300.00
குடியியற் கல்வி ஆய்வு - 2017	மானியம்	GIZ	Rs. 5,930,760.00

2.17 பணியாளர் அபிவிருத்தி நிலையம்

1. அறிமுகம்

கொழும்புப் பல்கலைக்கழகப் பணியாளர் அபிவிருத்தி நிலையம் (SDC) நிறுவப்பட்டதிலிருந்து அதன் இருபதாவது ஆண்டை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளது. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் திட்டமிட்ட பணியாளர் அபிவிருத்தியைத் தொடங்குவதற்கும் நிறுவுவதற்குமான தேவையின்நிமித்தம் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலையம் இலங்கையில் தேசியப் பல்கலைக்கழக முறைமையினுள் முதலாவது பணியாளர் அபிவிருத்தி நிலையமாக 1997இல் தொடக்கிவைக்கப்பட்டது.

பணியாளர் அபிவிருத்தி நிலையத்தின் பணி "இலங்கையில் பொதுவிலும், குறிப்பாகக் கொழும்புப் பல்கலைக்கழகத்தினுள்ளும் உயர் கல்வி முறைமையினுள் பணியாளராலும் மாணவர்களாலும் மேற்கொள்ளப்படும் கல்விசார் செயற்பாட்டின் தரத்தை மேம்படுத்துதல்." இக்குறிக்கோளை அடையும்பொருட்டு ப.அ.நி பல்கலைக்கழகத்தின் கற்றல்/கற்பித்தலை கூடிய பயனுறுதியுள்ளதாகவும் கூடிய பொருத்தமானதாகவும் மாணவர்முகப்படுத்தப்பட்டதாகவும் பன்னாட்டு உயர் தரங்களைக் கொண்டதாகவும் மேம்படுத்தி முன்னேற்றுவதற்கான வசதிகளை வழங்குவதோடு ப.அ.நிலையமானது கல்விசார், கல்விசாராப் பணியாளர் உட்படப் பல்கலைக்கழகப் பணியாளர் தொகுதியின் அனைத்து உறுப்பினர்கள் மத்தியிலும் கூடிய பயனுறுதியுள்ளதும் திறமையானதுமான செயல் நிறைவேற்றத்துக்கு அவசியமான தேர்ச்சித் திறன்களையும் ஆற்றல்களையும் விருத்திசெய்கிறது. அதற்குத் தரப்பட்டுள்ள நிதி, மனிதவள மட்டுப்பாடுகளினுள் அது பணியாளருக்குத் தொழில் அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும்/செயலமர்வுகளையும் நடத்துகிறது.

2. ப.அ.நிலையத்தின் குறிக்கோள்களும் எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளும்

1. பாடவிதானத்தைத் தயாரித்தல் திருத்துதல் என்பவற்றோடு கற்பித்தல், ஆராய்ச்சிசெய்தல் போன்ற கல்விசார் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பல்வேறு திறன்களை விருத்தி செய்வதிலும் மேம்படுத்துவதிலும் கல்விசார் பணியாளருக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்குதல்.
2. பல்வேறு கல்விசார் துணையாதரவுச் சேவைகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான திறன்களை விருத்திசெய்வதிலும் மேம்படுத்துவதிலும் கல்விசாராப் பணியாளருக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்குதல்.
3. கல்விசார் நிருவாகப் பதவிகளில் (துறைகளின் தலைவர்கள், பீடங்களின் பீடாதிபதிகள், நிறுவகங்கள், கல்விக்கூடப் பணிப்பாளர்கள், முதல்வர் ஆகிய) ஏற்கனவேயுள்ள அல்லது அத்தகைய பதவிகளை எய்துகின்ற ஆவலுடைய கல்விசார் பணியாளருக்குக் கல்விசார் நிருவாகத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆற்றல்களையும் தேர்ச்சித் திறன்களையும் எய்துவதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்குதல்.
4. கற்பித்தல் துறைகள், கல்விசார் அலகுகள், கல்விநெறிகள், நிகழ்ச்சித்திட்டங்கள், பீடங்கள் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்வதிலும் மீளாய்வதிலும் தனிப்பட்டவர்களுக்கும் குழுக்களுக்கும் ஆதரவு வழங்குதல்.
5. பல்கலைக்கழகத்தில் கற்பித்தலினதும் கற்றலினதும் தரத்தை மேம்படுத்தும் நோக்குடைய கருத்திட்டங்களில் பல்கலைக்கழகமெங்கிலுமுள்ள தனிப்பட்டவர்களுடனும் குழுக்களுடனும் கூட்டுழைத்தல்.
6. வேண்டுகோளின்பேரில் ஆசிரியர்களுக்கு புறவயமான மாணவர் பின்னூட்டற் சேவைகளை வழங்குதல்.
7. பல்கலைக்கழகத்தினுள் கற்பித்தலுடனும் கற்றலுடனும் தொடர்புடைய கொள்கைகளுக்கும் பொதுவான நடைமுறைகளுக்கும் பங்களிப்புச் செய்தல்.
8. உயர் கல்வியுடன் தொடர்புடைய பரந்த ஆராய்ச்சி, புலமைத்துறைக்குப் பங்களிப்புச் செய்தல்.
9. கொழும்புப் பல்கலைக்கழகத்தினுள்ளும் ஏனைய உயர் கற்றல் நிறுவனங்களிலும் பயன்படுத்துவதற்கு, குறிப்பாகக் கற்பித்தலிலும் கற்றலிலும் பொதுவாகப் பல்கலைக்கழகப் பணியாளர் அபிவிருத்தியிலும் வெளியீடுகளை மேற்கொள்ளுதல்.

10. ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பணியாளர் அபிவிருத்தி அமைப்புக்களுடன் தொடர்புகளை வளர்த்துக்கொள்ளல்.

11. பல்கலைக்கழகத்தால் அதன் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்ட வளங்கள் போதாதவையாகக் காணப்பட்டால், அதன் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குப் பல்கலைக்கழகப் பேரவையின் அங்கீகாரத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களினூடாக நிதிகளைத் திரட்டுதல்.

12. பல்கலைக்கழகக் கல்விநெறிக் கட்டமைப்புகள், பாடவிதான மாற்றங்கள், பல்கலைக்கழகக் கற்பித்தலும் கற்றலும் ஆராய்ச்சியும் பற்றிய முறையியல் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் வள, தகவல் மையமொன்றைக் கட்டியெழுப்புதல்.

கல்விசார் பணியாளரை இலக்காகக்கொண்ட பிரதான கல்விநெறி CTHE (உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ்) ஆகும். இது பணியாளர், கல்வி அபிவிருத்திச் சங்கத்தாலும் (யுகே), அவ்வாறே இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பணியாளர், கல்வி அபிவிருத்திச் சங்கத்தால் (யுகே) அங்கீகரிக்கப்பட்ட இன்னொரு ப.அ.நிலையத்தின் கல்விநெறியாக ASTHE (உயர் கல்வியில் முதுநிலை ஆசிரியர்களுக்கான அங்கீகாரம்) விளங்குகிறது. முதுநிலை சல்விசார் பணியாளர்களுக்கு இக் கல்விநெறியை நடாத்துவதற்குத் தகுதிவாய்ந்த ஒரு வளவாளர் கிடைத்ததன்பயனாக பத்து ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் இக் கல்விநெறி இவ்வாண்டு மீண்டும் தொடங்கப்பட்டது. (பணியாளர் மட்டுப்படுத்தல் காரணமாக) இக் கற்கைநெறி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்படுவதால் இம்மீளாய்வாண்டில் நடத்தப்படவில்லை. பல்கலைக்கழக ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் தொடர்பான ப.அ.நிலையத்தின் மூன்றாவது கல்விநெறி ஆசிரியர்களை வினைத்திறனுள்ளவர்களாக்குவதிலான (MaTE2017) குறுங் கல்விநெறியாகும். இக் கற்கைநெறி பல்கலைக்கழகத்தின் ஆகக் குறைந்த வயதுடைய இளநிலைக் கல்விசார் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் ஆங்கில மொழியாற்றல் (இரண்டு மட்டங்களில்), தொடக்க நிலையினருக்கான தமிழ் மொழி, எழுத்தர் திறன் கற்கைநெறி, கூட்ட அறிக்கைக் குறிப்பெடுத்தற் கற்கைநெறி சல்விசார் பணியாளர்களை IELTS பரீட்சைக்குத் தயார்ப்படுத்தல் முதலான குறுங் கல்விநெறிகளும் பல்கலைக்கழகப் பணியாளர்களுக்காக ப.அ.நிலையத்தில் நடாத்தப்பட்டன. மேலும், ப.அ.நிலையத்தின் கல்விசார், கல்விசாராப் பணியாளருக்குப் பல செயலமர்வுகளை நடாத்தியது. கற்பித்தலையும் தொடர்புடைய ஏனைய சேவைகளையும் கூடிய பயனுறுதியுள்ளவையாக்குகின்ற குறுகிய கல்விநெறிகளும்/செயலமர்வுகளும் எல்லா வகுதிகளையுஞ் சேர்ந்த பல்கலைக்கழகப் பணியாளருக்கு வழங்கப்பட்டன. கொழும்புப் பல்கலைக்கழகம் தவிர ஏனைய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்வியாளர்களும் இப் பயிற்சிநெறிகளில் கலந்துகொண்டனர்.

ப.அ.நிலையமானது கொழும்புப் பல்கலைக்கழகத்தினது மட்டுமன்றி இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களினது கல்விசார், கல்விசாராப் பணியாளரின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றுகின்றது. 2017ஆம் ஆண்டின்போது அரச பல்கலைக்கழகங்களுடன் தம்மை உடனே இணைத்துக்கொண்ட தனியார் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்தும் வருகைதந்த வெவ்வேறு பணியாள் வகுதிகளைச் சேர்ந்த 759 பணியாளர்களுக்கு வெற்றிகரமாகப் பயிற்சியளித்துள்ளது.

ப.அ.நி கொழும்புப் பல்கலைக்கழகத்திலுள்ள அதன் அலுவலகத் தொகுதியிலிருந்து செயற்படுகின்றது.

பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழ் (CTHE)கல்விநெறி

பல்கலைக்கழகப் பணியாளருக்கு 20ஆவது உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழ் (CTHE) கல்விநெறியை ப.அ.நி வெற்றிகரமாக நிறைவுசெய்தது. இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 81 கல்வியறிவாளர்கள் இக் கல்விநெறியைத் தொடர்ந்திருந்தனர். (கொழும்புப் பல்கலைக்கழகம், ஸ்ரீபாளி வளாகம், உண்ணாட்டு மருத்துவ நிறுவகம், (ITUM அடங்கலாக) மொரட்டுவப் பல்கலைக்கழகம், இராஜரட்டைப் பல்கலைக்கழகம், வயம்பப் பல்கலைக்கழகம், கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், தகவற் தொழினுட்ப நிறுவகம் (பட்டம் வழங்கும் தனியார் பல்கலைக்கழகம்)

கற்பித்தலைப் பயனுறுதியுள்ளதாக்குவதில் குறுகிய கல்விநெறி (MaTE 2017)

கொழும்புப் பல்கலைக்கழகம் உட்பட உயர்கல்வி நிறுவனங்களின் தற்காலிகக் கல்விசார் இளநிலைப் பணியாளரை (எ.கா: உதவி விரிவுரையாளர்கள், தனிமுறைப் போதனாசிரியர்கள், செய்முறை விளக்குநர்கள்) இலக்குவைத்து கற்பித்தலைப் பயனுறுதியுள்ளதாக்குவதில் குறுகிய கல்விநெறி நடத்தப்பட்டது. இக்கல்விநெறி மொரட்டுவைப் பல்கலைக்கழகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், தகவற் தொழினுட்ப நிறுவகம் ஆகிய உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளரையும் கவர்ந்ததோடு 29 கல்வியறிவாளர்கள் இக்கல்விநெறியைத் தொடர்ந்திருந்தனர்.

2017ஆம் ஆண்டில் CTHE, மற்றும் MaTE 2017 கல்விநெறிகளுக்கு மேலதிகமாக ப.அ.நி பல்கலைக்கழகப் பணியாளருக்கு ஆங்கிலமொழி, தமிழ்மொழிக் கல்விநெறிகளையும் அலுவலக நடைமுறையின் ஓரங்கமாக எழுத்தர் திறன்விருத்திக் கற்கைநெறி, கூட்ட அறிக்கைக்கான குறிப்பெடுத்தற் கற்கைநெறி, மதிப்பீடு, கற்றல் என்பவற்றை மேம்படுத்தும்பொருட்டு கற்பித்தலுக்கு உதவுதல் முதலான கல்விநெறிகளையும் 18 வெவ்வேறு செயலமர்வுகளையும் ப.அ.நிலையத்துக்கு வெளியிலான வளவாளர்களினதும் பங்களிப்புடன் நடத்தியது. கல்விசார், நிருவாக, துணையாதரவுப் பணியாளர் பல்கலைக்கழகத்தால் எதிர்பார்க்கப்படும் இலக்குகளையும் குறிக்கோள்களையும் எய்தும்பொருட்டு அவர்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் பயனுறுதியுள்ளமுறையில் நிறைவேற்றக்கூடியதாக அவர்களின் செயலாற்றலையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கும் அதிகரிப்பதற்குமாக இச்செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

ப.அ.நிலையமானது விசேட வேண்டுகோள்களின் அடிப்படையில் பயிற்சிகளையும் செயலமர்வுகளையும் நடாத்துவதன்மூலம் பல்கலைக்கழகத் தேவைகளை நிறைவேற்றியது. இதனடிப்படையில் ப.அ.நி கற்பித்தல் மேம்பாடுகள், சகல அலுவலகப் பணியாளர்களது தொழிற்பாடுகள் என்பன தொடர்பில் செயலமர்வுகளை நடத்தியது. கற்பித்தல் மேம்பாடுகள் வகுதியில் கலைப்பீடத்துக்கு 03 செயலமர்வுத் தொடர்களும் ஸ்ரீ பாளி வளாகம், ஆங்கிலக் கற்பித்தல் துறை போன்றவற்றுக்கு மேலதிகமான செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன. 'சகல அலுவலகப் பணியாளர்களது மேம்பட்ட தொழிற்பாடுகள்' என்ற வகுதியின்கீழ் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பரீட்சைக் கிளையின் சகல பணியாளர்களுக்குமான பயிற்சி அமர்வு நடாத்தப்பட்டது.

2017ஆம் ஆண்டின்போது SDC நடத்திய செயலமர்வுகள், கல்விநெறிகள், மாநாடுகளின் நிரலொன்று கீழே சமர்ப்பிக்கப்படுகின்றது:

#	கல்விநெறி/செயலமர்வு	திகதி(கள்)	வளவாளர்கள்
1	உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ் (CTHE – அணி 20)	2017 மார்ச் தொடக்கம் ஒக்ரோபர் வரை	பேரா. சுகி ஏக்கரத்ன, ஆலோசகர், பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம் கலா. ஷிரினிகா வீரக்கோன், பணிப்பாளர், பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம்
2	கற்பித்தலைப் பயனுறுதியுள்ளதாக்குதலில் குறுகிய கல்விநெறி (MaTE2017)	2017 யூலை தொடக்கம் செப்ரெம்பர் வரை	பேரா. சுகி ஏக்கரத்ன, ஆலோசகர், பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம் கலா. ஷிரினிகா வீரக்கோன், பணிப்பாளர், பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம்
3	ஆங்கிலக் கல்விநெறி 'அ' மட்டம் 1	2017 ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரை	திருவாட்டி சாவித்திரி டயஸ் பணிப்பாளர் / ஆங்கில மொழிக் கற்கைகள் துறை (DELT) கொழும்புப் பல்கலைக்கழகம்

4	ஆங்கிலக் கல்விநெறி 'அ' மட்டம் 2	2017 ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரை	திருவாட்டி சந்திம நானாயக்கார வருகைதரு விரிவுரையாளர் / DELT கொழும்புப் பல்கலைக்கழகம்
5	தொடக்கநிலைத் தமிழ்க் கல்விநெறி	2017 ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரை	திரு. ஏஆர்எம். நிஸாம், விரிவுரையாளர்
6	ஆங்கிலக் கல்விநெறி 'ஆ' மட்டம் 1	2017 ஓகஸ்து தொடக்கம் ஒக்ரோபர் வரை	திருவாட்டி சாவித்திரி டயஸ் பணிப்பாளர் / ஆங்கில மொழிக் கற்கைகள் துறை (DELT) கொழும்புப் பல்கலைக்கழகம்
7	ஆங்கிலக் கல்விநெறி 'ஆ' மட்டம் 2	2017 ஓகஸ்து தொடக்கம் ஒக்ரோபர் வரை	திருவாட்டி யாமினி சின்னென் வருகைதரு விரிவுரையாளர்/ DELT கொழும்புப் பல்கலைக்கழகம்
8	அலுவலக நடைமுறையின் ஓரங்கமாக எழுத்தர் திறன்விருத்திக் கற்கைநெறி 2017	2017 பெப்ரவரி தொடக்கம் மே வரை	தேசிய ஏற்றுமதிகள் நிறுவகம் கொழும்பு 3
9	IELTS தயார்ப்படுத்தற் கற்கைநெறி	2017 மார்ச் தொடக்கம் மே வரை	திரு ஆனந்த ஜயரத்ன, வருகைதரு விரிவுரையாளர், மானுடவியல், சமூக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்
807,160	216,117	56,000			430,025	4,656,698	118,226
32,756	-	-			6,594	32,974	63,332
-	-	-			63,050	-	-
-	-	-			-	-	-
39,835	-	-			3,350	91,230	-
-	-	-			-	-	-
-	-	-			-	-	-
-	12,655,397	-			269,906	2,172,771	44,904
14,890,137.26	14,674,142.88	475,830.60			2,722,539.78	15,902,424.42	1,259,581.68

ஏலவை	ஒத்தி வைத்தல், அறிவிப்பாணை நிறுத்துதல்	ஓர் எல்லைக்குள் வரையறை செய்தல், வரிசைப்படுத்துதல்	வரி, கட்டணம் ஆகியவற்றை நீக்குதல்	சுருக்கமாக விளக்குதல்	நீர்	பாதுகாப்புச் சேவைகள்	மதிப்பாய்வு
14,149	119,698	-	-	5,386,057	-	-	-
-	90,876	-	-	3,175,850	-	107,559	-
-	59,461	-	-	3,591,300	-	-	-
3,200	750	49,132	3,416,469	5,837,242	1,699,394	-	17,812,019
33,224	22,635	-	-	4,587,108	246,417	-	-
-	673,237	-	60,762	4,632,485	-	-	-
-	1,458,444	-	1,900,000	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
1,977,878	404,197	10,959	16,010	2,557,225	1,126,954	4,182,725	5,158,280
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	-	-	-	-	-	-
-	-	4,467,888	-	-	1,377,100	-	-
2,028,450.21	2,829,297.71	4,527,979.47	5,393,240.82	29,767,267.60	4,449,864.84	4,290,284.24	22,970,299.02

பயிற்சி/சேவை உரிமம் (பதவிப்பெயர்)	சுகவிசாரணை அறிக்கை	சொத்துவரிகள், கூடுதல் கட்டணங்கள்	வரிகள், சேவைகள்-குறிப்பிடப்படாதவை, ஏனையவை	வரிகள் சேவை-இறுக்கங்கள்	பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான பயிற்சி	பிற சேவைகள்	
46,225	-	10,000	-	1,875	-		
393,546	-	188,758	98,250	1,750	-		
300,000	-	20,730	-	-	-		
832,928	-	-	-	-	270,473		
1,528,500	-	-	3,000	952,639	-		
94,500	97,704	32,682	-	78,187	-		
-	-	-	1,564,155	362,500	-		
-	-	-	-	-	-		
-	-	-	1,004,800	-	-		
-	-	-	-	-	-		
223,173	-	195,589	-	61,580	-		
604,500	-	171,662	501,400	25,200	-		
-	-	-	-	95,473	-		
1,000,000	-	942,835	-	-	-		
-	-	50,682	-	-	-		
160,000	2,338,001	144,304	20,600	-	80,000		
-	-	-	-	-	-		
-	-	31,288,221	-	-	-		
5,183,372.02	2,435,705.11	33,045,462.51	3,192,204.79	1,579,203.54	350,473.23		

பட்டயதாரர் ஆராய்ச்சி படிப்பு	கல்வியாளர் கற்றல் தர மதிப்பீடுகள்	மாணவர். ஆலோ. முடிவுகள்- தொழில் சேவை	பல்கலைக்கழக ஒத்துழைப்பு - தொழில் நிர்வாகம்	மாணவர் நலன், வளர்ச்சி மாணவர் கலந்தாலோசனை	விரிவுரை ஆலோசனை	விரிவுரையாளர் சேவைகள்
-	-	60,085	-	-	320,180	2,635,096
31,591	65,000	-	-	-	200,630	301,371
-	-	-	-	-	33,140	572,410
-	-	-	-	-	851,560	977,423
-	-	154,527	-	-	81,390	-
-	-	3,540,541	-	-	407,570	445,534
-	-	-	980	-	-	81,200
-	-	-	-	-	-	-
-	-	-	-	-	69,850	53,719
-	-	-	-	-	-	-
-	1,254,127	-	-	-	110,410	270,079
-	-	-	-	-	-	185,130
116,000	-	-	-	-	-	1,131,799
-	-	-	-	-	-	-
-	-	-	-	80,000	18,045	32,657
-	-	-	-	-	-	1,645,217
-	2,450,000	-	-	-	-	-
-	-	-	-	-	-	2,518,956
147,591.00	3,769,127.20	3,755,152.10	980.00	80,000.00	2,092,775.00	10,850,588.70
-	-	-	-	-	-	45,066.32

	ஆடுகளுக்கடன் மீது வட்டி மானியம்	விதை உதவித்தொகை	ஏனையவை	பயிர் காப்பீட்டுத் தொகைகள்	பட்டமானியம்	உதவித்தொகை, உறுப்பினர்களுக்கான கடன்	பரிசுகள், இழப்பீடுகள்/ அறக்கொடைகள்
	1,913,927	2,400,000	790,762	7,103,420	6,000	44,727	-
	345,388	-	401,984	1,187,138	-	-	17,000
	549,975	-	131,151	1,345,915	-	-	16,000
	-	93,405	1,020,000	3,554,777	-	-	-
	1,026,778	-	1,311,737	5,097,455	-	132,360	-
	636,005	-	575,355	7,431,438	-	-	98,000
	-	-	1,878,824	15,600	-	-	-
	-	-	-	-	-	-	-
	98,803	-	100,470	1,909,084	5,928,567	-	-
	97,239	-	-	80,060	-	-	-
	605,667	-	264,020	1,455,894	-	102,000	27,500
	-	-	40,527	16,000	-	402,897	-
	-	-	3,683,744	-	-	277,858	-
	-	-	-	-	-	-	-
	-	-	47,085	4,500	-	-	-
	-	-	3,770,059	-	-	-	-
	-	-	-	-	-	-	-
	-	-	11,523,931	31,610,824	-	-	-
	5,273,782.12	2,493,404.70	25,539,648.37	60,812,104.97	5,934,567.00	959,841.97	158,500.00

கல்வி உதவுதொகை	17,039,900	218,400	3,479,000	1,092,500	10,379,100	6,912,400	-	-	-	-	3,893,800	-	-	-	-	-	-	43,015,100.00
மகாபொல	50,688,050	-	24,877,300	11,615,450	23,228,450	14,469,700	-	-	-	-	6,276,500	-	-	-	-	-	-	131,155,450.00
மகாபொல நம்பிக்கைநிதிக் கூறு	42,403,050	-	21,409,600	11,294,900	18,008,900	10,742,500	-	-	-	-	7,376,500	-	-	-	-	-	-	111,235,450.00
மொத்தம்	**579,710,247**	**91,316,858**	**155,351,557**	**665,138,482**	**253,503,647**	**516,736,005**	**18,886,182**	**3,346,866**	**33,790,668**	**12,394,395**	**170,683,218**	**7,073,725**	**24,051,063**	**1,983,635**	**4,277,999**	**13,164,950**	**2,556,648**	**320,999,529**	**2,874,965,672.64**

செலவினக் கூற்று – குறிப்பு 13 – நிகழ்ச்சித்திட்டம் 03 – கற்பித்தல் வளங்கள் 08 - துணை நடவடிக்கைகள்

செலவுத் தலைப்பு	கற்பித்தல் வளங்கள்	விடுதி	மொத்தம்
	03-01	08-01	
101 - 2601 – கட்டடங்கள் (மீண்டுவரும்)	1,905,991	12,246,430	14,152,421
சம்பளங்கள், கூலிகள் - கல்விசார்			
சம்பளங்கள், கூலிகள்	7,437,711	-	7,437,711
ப.சே.நி.	1,264,188	-	1,264,188
ஓய்வூதியம்	1,049,910	-	1,049,910
ஊ.ந.நி.	462,820	-	462,820
கல்விசார் படி	6,855,467	-	6,855,467
வாழ்க்கைச்செலவுப் படி	1,147,959	-	1,147,959
படி	739,400	-	739,400
வேறு படி	69,077	-	69,077
ஆராய்ச்சிப் படி	1,467,375	-	1,467,375
20% படி	1,057,661	-	1,057,661
இடைக்காலப் படி	557,693	-	557,693
சம்பளங்கள், கூலிகள் - கல்விசாரா			
சம்பளங்கள், கூலிகள்	18,945,147	6,569,032	25,514,179
ப.சே.நி.	2,258,817	732,068	2,990,885
ஓய்வூதியம்	1,680,031	543,892	2,223,923
ஊ.ந.நி.	787,770	255,192	1,042,962
மேலதிக நேரம்	3,392,159	350,104	3,742,264
வாழ்க்கைச்செலவுப் படி	5,771,027	1,370,598	7,141,625
படி	2,109	-	2,109
வேறு படி	11,085	485,128	496,213
20% படி	7,674,339	2,557,683	10,232,021
இடைக்காலப் படி	5,111,499	958,873	6,070,372
ஆராய்ச்சிப் படி	152,565	-	152,565
மொத்தம் - ஆளணி ஊதியங்கள்	***67,895,807***	***13,822,569***	***81,718,377***
வழங்கல்கள், தேவைகள்			
எழுதுகருவி, அலுவலகத் தேவைகள்	280,099	131,150	411,249
எரிபொருள், உராய்வுநீக்கி	28,500	200	28,700

சீருடைகள்	48,000	4,075	52,075
ஏனையவை	1,159,600	1,217,393	2,376,993
சொத்துக்களின் பராமரிப்பு			
வாகனங்கள்	10,500	-	10,500
பொறித்தொகுதி, இயந்திரம், உபகரணம்	1,119,961	864,325	1,984,286
கட்டடங்கள், கட்டமைப்புகள்	-	22,832	22,832
ஏனையவை	-	65,100	65,100
ஒப்பந்தச் சேவைகள்			
போக்குவரத்து	7,514	63,112	70,626
தொலைத்தொடர்பு	362,782	417,404	780,186
அஞ்சற் கட்டணம்	39,400	-	39,400
சுத்திகரிப்புச் சேவைகள்	2,642,413	20,635,841	23,278,253
அச்சிடலும் விளம்பரப்படுத்தலும்	-	200,531	200,531
ஏனையவை	-	21,060	21,060
ஏனைய சேவைகள்			
விசேட சேவை-தொழிலாண்மை, ஏனையவை	-	27,349	27,349
செயலமர்வுகள், கருத்தரங்கு, கூட்டங்கள்	37,535	-	37,535
பயிற்சிச் சேவைகள். உள்ளூர் (பணியாளர் அபிவிருத்தி)	164,500	-	164,500
கூட்டுறவுத் திட்டம், ஆட்சியும் பரவலும்	-	10,310	10,310
விடுமுறை ஆணைச்சீட்டுகள	228,980	-	228,980
விருந்தோம்பற் செலவுகள்	34,594	28,313	62,907
வங்கிக் கட்டணங்கள்	1,978	-	1,978
ஏனையவை	112,483	1,023,523	1,136,006
ஆதனக்கடன்மீது வட்டி மானியம்	425,208	41,574	466,782
மொத்தம்	**76,505,846**	**50,843,091**	**127,348,938**

செலவினக் கூற்று – குறிப்பு – 13 – நிகழ்ச்சித்திட்டம் 04 – நலன்புரிச் சேவைகள்

செலவுத் தலைப்பு	**சுகாதார சேவை**	**உடற்கல்வி**	**நலன்புரி**	**மொத்தம்**
	04-01	**04-02**	**04-03**	
சம்பளங்கள், கூலிகள் - கல்விசார்				-
சம்பளங்கள், கூலிகள்	-	366,048	-	366,048
ப.சே.நி.	-	34,332	-	34,332
ஓய்வூதியம்	-	39,237	-	39,237

ஊ.ந.நி.	-	14,714	-	14,714
பதிற்கடமைப் படி	-	27,679	-	27,679
சமப்படுத்தற் படி	85,560	-	-	85,560
வருகைதரு விரிவுரையாளர் கட்டணம்	-	3,003,375	-	3,003,375
வாழ்க்கைச்செலவுப் படி	-	93,600	-	93,600
20% படி	-	145,266	-	145,266
இடைக்காலப் படி	-	75,504	-	75,504
சம்பளங்கள், கூலிகள் - கல்விசாரா				
சம்பளங்கள், கூலிகள்	6,457,326	6,078,985	8,521,417	21,057,729
ப.சே.நி.	1,089,108	850,111	1,142,737	3,081,955
ஓய்வூதியம்	200,921	383,166	552,727	1,136,814
ஊ.ந.நி.	258,006	246,655	350,687	855,348
பதிற்கடமைப் படி	-	13,498	-	13,498
மேலதிக நேரம்	453,533	2,312,015	2,923,099	5,688,647
விடுமுறைக் கொடுப்பனவுகள்	-	115,074	159,511	274,585
வாழ்க்கைச்செலவுப் படி	1,626,032	1,632,280	2,169,650	5,427,961
ஏனைய படிகள்	4,800	14,045	13,372	32,217
சமப்படுத்தற் படி	85,560	-	-	85,560
20% படி	2,549,403	2,423,291	3,385,860	8,358,555
இடைக்காலப் படி	1,297,956	1,355,493	1,719,548	4,372,998
ஆராய்ச்சிப் படி	-	-	187,719	187,719
மொத்தம் - ஆளணி ஊதியங்கள்	***14,108,205***	***19,224,368***	***21,126,328***	***54,458,901***
பயணம்				
உள்நாட்டு	-	99,558	-	99,558
வழங்கல்கள், தேவைகள்				
எழுதுகருவி, அலுவலகத் தேவைகள்	71,815	206,776	1,104,279	1,382,870
எரிபொருள், உராய்வுநீக்கி	3,485	58,919	-	62,404
சீருடைகள்	35,625	16,275	43,200	95,100
இரசாயனங்கள், நுகர்வுகள்	152,550	-	-	152,550
மருத்துவ வழங்கல்கள்	270,490	185	-	270,675
ஏனையவை	714,218	6,666,714	300,352	7,681,283
சொத்துக்களின் பராமரிப்பு				

பொறித்தொகுதி, இயந்திரம், உபகரணம்	39,488	296,283	52,797	388,568
கட்டடங்கள், கட்டமைப்புகள்	-	4,200	1,770	5,970
ஏனையவை	-	7,848	-	7,848
ஒப்பந்தச் சேவைகள்	-	-	-	
போக்குவரத்து	4,028	18,050	2,182	24,260
தொலைத்தொடர்பு	69,567	39,649	152,069	261,285
அஞ்சற் கட்டணம்	-	5,330	42,474	47,804
பாதுகாப்புச் வேவைகள்	50,322	300,086	-	350,408
நீர்	-	-	40,962	40,962
சுத்திகரிப்புச் சேவைகள்	-	3,673,003	-	3,673,003
வாடகை, கூலிக் கட்டணங்கள்	1,270,499	262,673	8,292,115	9,825,287
உள்ளூர் அதிகாரசபை வரிகள், வீதங்கள்	25,920	-	-	25,920
அச்சிடலும் விளம்பரப்படுத்தலும்	-	276,500	64,418	340,919
ஏனையவை	7,500	-	-	7,500
ஏனைய சேவைகள்				
பட்டப்பின் ஆராய்ச்சி, புலமைப்பரிசுகள்	-	-	6,347,639	6,347,639
மாணவர் அபிவிருத்தி முயற்சிகளும் சமூக உறவுகளும் - பொது	-	-	125,373	125,373
பல்கலைக்கழக விளையாட்டுச் செயற்பாடுகள் - பொது நிருவாகம்	-	1,154,576	-	1,154,576
மாணவர் நலச்சேவை, ஊழியர் நலச்சேவை முாணவர் கவுன்சிலும் சமூகமும்	-	-	2,226,065	2,226,065
விடுமுறை ஆணைச்சீட்டுகள்	5,610	156,260	63,840	225,710
விருந்தோம்பற் செலவுகள்	1,670	17,181	271,505	290,356
உதவுதொகை, உறுப்புரிமைக் கட்டணம்	-	280,800	-	280,800
ஏனையவை	-	-	10,500	10,500
ஆதனக்கடன்மீது வட்டி மானியம்	18,923	46,915	261,870	327,708
	50,316	-	89,181	139,497
மொத்தம்	**16,900,231**	**32,812,149**	**40,618,917**	**90,331,297**

செலவினக் கூற்று – குறிப்பு 13 – நிகழ்ச்சித்திட்டம் 05 – கட்டடப் பராமரிப்பு, வசதிகள்

செலவுத் தலைப்பு	காணி, கட்டடம்	மின்சாரம்	நீர் விநியோகம்	மொத்தம்
	05-01	05-02	05-03	
சம்பளங்கள், கூலிகள் - கல்விசாரா				-
சம்பளங்கள், கூலிகள்	18,222,032	1,026,600	263,400	19,512,032
ப.சே.நி.	2,265,381	178,888	26,559	2,470,829
ஓய்வூதியம்	1,577,056	30,127	30,353	1,637,537
ஊ.ந.நி.	768,488	41,803	11,383	821,673
பதிற்கடமைப் படி	7,806	-	-	7,806
மேலதிக நேரம்	3,909,875	-	-	3,909,875
வாழ்க்கைச்செலவுப் படி	6,174,759	280,800	93,600	6,549,159
படி	1,777	572	-	2,349
ஏனைய படிகள்	125,694	1,332	-	127,026
20% படி	6,815,526	409,546	105,138	7,330,210
இடைக்காலப் படி	5,652,615	235,652	88,344	5,976,611
மொத்தம் - ஆளணி ஊதியங்கள்	***45,521,009***	***2,205,320***	***618,777***	***48,345,106***
பயணம்				
உள்நாடு	2,950	-	-	2,950
வெளிநாடு	116,619	-	-	116,619
வழங்கல்கள், தேவைகள்				
எழுதுகருவி, அலுவலகத் தேவைகள்	480,051	-	-	480,051
எரிபொருள், உராய்வுநீக்கி	51,985	-	-	51,985
சீருடைகள்	29,500	-	-	29,500
ஏனையவை	1,155,825	-	-	1,155,825
சொத்துக்களின் பராமரிப்பு				
பொறித்தொகுதி, இயந்திரம், உபகரணம்	508,038	-	-	508,038
கட்டடங்கள், கட்டமைப்புகள்	11,884,985	-	-	11,884,985
ஒப்பந்தச் சேவைகள்				
போக்குவரத்து	228,902	-	-	228,902
தொலைத்தொடர்பு	79,796	-	-	79,796
மின்சாரம்	-	85,085,667	-	85,085,667
நீர்	-	-	23,334,831	23,334,831
ஏனைய சேவைகள்				

விசேட சேவை – தொழில்வாண்மையும் பிறவும்	34,017	-	-	34,017
பயிற்சி சேவை உள்நாட்டு (பணி. அபிவிருத்தி)	325,384	-	-	325,384
விடுமுறை ஆணைச்சீட்டுகள்	332,700	-	-	332,700
விருந்தோம்பற் செலவுகள்	3,365	-	-	3,365
ஏனையவை	283,765	-	-	283,765
ஆதனக்கடன்மீது வட்டி மானியம்	31,140	-	-	31,140
மொத்தம்	**61,070,029**	**87,290,988**	**23,953,609**	**172,314,626**

ஒவ்வொரு பீடத்திலுமுள்ள மாணவர் எண்ணிக்கையும் ஒரு மாணவருக்கான மீண்டுவருஞ் செலவும் - 2017

பீடம்	மாணவர் எண்.		மீண்டுவருஞ் செலவினம்		நிருவாக மேந்தலை		மூலதனச் செலவு		மொத்த மீண்டுவருஞ் செலவு		மொத்தச் செலவு		மாணவர் ஒருவருக்கான செலவு	
	2016	2017	2016	2017	2016	2017	2016	2017	2016	2017	2016	2017	2016	2017
கலை	2,303	2,181	534,761,102	579,710,247	178,153,234	205,309,014.85	116,785,507	123,163,457.04	712,914,337	785,019,262	829,699,843	908,182,719	228,919	416,407
கல்வி	336	314	75,366,196	91,316,858	25,991,961	29,558,473.48	17,038,615	17,731,923.66	101,358,157	120,875,331	118,396,772	138,607,255	268,982	441,424
விஞ்ஞானம்	1,676	1,626	512,365,931	516,736,005	129,650,378	153,063,942.30	84,990,234	91,821,999.61	642,016,309	669,799,947	727,006,543	761,621,947	275,446	468,402
மருத்துவம்	1,359	1,183	648,638,895	665,138,482	105,128,200	111,362,019.52	68,915,112	66,805,304.76	753,767,095	776,500,502	822,682,207	843,305,806	479,230	712,854
சட்டம்	1,063	998	154,558,280	155,351,557	82,230,520	93,946,995.33	53,904,904	56,358,152.28	236,788,800	249,298,552	290,693,704	305,656,704	164,842	306,269
முகாமை	1,781	1,647	241,347,153	253,503,647	137,772,866	155,040,782.88	90,314,801	93,007,892.59	379,120,019	408,544,430	469,434,821	501,552,322	160,767	304,525
ஸ்ரீ பாளி	637	637	164,382,956	170,683,218	49,276,426	59,964,164.36	32,302,374	35,972,087.18	213,659,383	230,647,383	245,961,757	266,619,470	245,203	418,555
மொத்தம்	9,155	8,586	2,331,420,514	2,432,440,014	708,203,586	808,245,393	464,251,547	484,860,817	3,039,624,100	3,240,685,407	3,503,875,647	3,725,546,224		

நிருவாக மேந்தலைகள்

விடயத் தலைப்பு	செலவினம் 2016	செலவினம் 2017
பொது நிருவாகம்	137,266,968	163,626,766
நிதி நிருவாகம்	35,174,074	43,125,251
வழங்கல்கள்	9,700,141	9,882,086
பாதுகாப்பு	43,615,013	46,552,809
போக்குவரத்து	42,061,869	45,931,885
பரீட்சை	30,261,135	33,790,668
கற்பித்தல் வளங்கள்	66,776,284	76,505,846
சுகாதாரச் சேவை	14,931,800	16,900,231
உடற்கல்வி	28,109,502	32,812,149
நலன்புரி	40,908,065	40,618,917
பராமரிப்பு	166,809,512	172,314,626
விடுதி	50,063,944	50,843,091
ப.அ.நி	5,369,340	7,073,725
ஆராய்ச்சி	31,629,623	37,216,013
தொழினுட்பப் பீடம்	593,802	18,886,182
தாதியியற் பீடம்		3,346,866
தர உத்தரவாதமும் அங்கீகாரமும்		2,556,648
KEID	921,900	1,983,635
மாணவர் அறிவுரையாளர் அலுவலகம்	4,010,615	4,277,999
மொத்தம்	**708,203,586**	**808,245,393**

		ரூ.	ரூ.
		2016	2017
மாணவர் ஒருவருக்கான சராசரிச் செலவ		**382,728**	**433,909**
மொத்தச் செலவு	=	3,503,875,647	3,725,546,224
மாணவர் எண்ணிக்கை		9,155	8,586

**மூலதனச் செலவு = ஆண்டுக்கான தேய்மானம்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. } எச்ஈடீ/பீ/யூஓசீ/6/17/05

මගේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2018 நவம்பர் 09

UNIVERSITY OF COLOMBO
20 FEB 2019
VICE CHANCELLOR'S OFFICE

உபவேந்தர்,
கொழும்பு பல்கலைக்கழகம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

SAB/AC.Pub
DIA 21/2/2019.

RB DIA
20/2

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழங்கள் அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்திற்கு முரணாக மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர் கல்வி அமைச்சரின் விதப்புரையுடன் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி கலம்பு ஸயன்ஸ் அன்ட் டென்னொலொஜி செல் என்ற பேரில் பிணையினால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்று 2013 ஆண்டின் போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட பீடாதிபதி உட்பட 09 விரிவுரையாளர்கள் இக் கம்பனியின் பணிப்பாளர் சபையில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இந்தக் கம்பனியின் தலைமை அலுவலகம் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு சொந்தமான கட்டிடமொன்றில் நிறுவப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாகக் காணப்படும் கணனிகள் துணைக் கருவிகள் உட்பட ஏனைய பௌதீக மற்றும் மனிதவளங்களை பயன்படுத்தியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக ஆதனங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக இணக்கப்பாட்டு உடன்படிக்கை ஒன்றிற்கு உட்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது

பல்கலைக்கழகத்தின் வளங்களை பயன்படுத்தலுக்காக ரூபா 246,144 தொகையொன்று மாத்திரம் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பராமரிப்பு பிரிவின் 2017 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் பட்டியல்களை இணக்கம் செய்யும் போது, அவற்றில் குறிப்பிடப்பட்டிருந்த பொருள் அலகுகளின் விலைகளிடையே வேறுபாடுகளை காணக்கூடியதாக இருந்தது. அதற்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதி மாதிரிக்கு உட்படுத்தப்பட்ட இருப்பின் பெறுமதி ரூபா 9,088,403 இனால் அதிகரித்து கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் அந்த பிரிவின் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 16,819 பெறுமதியான இருப்பானது இறுதி இருப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ பீடத்தினதும் விஞ்ஞான பீடத்தினதும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 10,804,891 தொகையான இருப்பொன்று காணப்பட்டதுடன், அந்த இருப்பானது இறுதி இருப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் தீர்க்கப்பட்டிராத ரூபா 223,050 கூட்டுத்தொகையான முற்பணங்கள் தீர்க்கப்படாத முற்பணங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாது செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) காசுப்பாய்ச்சல் கூற்றினை பரிசோதனை செய்தபோது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த அரச மானியங்களின் பெறுமதிக்கு மேலதிகமாக ஒதுக்கங்கள் மற்றும் நிதியங்களின் கீழ் கணக்குகளுக்கிடையேயான வகைமாற்றமான ரூபா 542,597,096 பெறுமதியான செலவிடப்படாத மூலதன மானியங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசுப் பெறுவனவாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. மேலும், முதலீட்டு நடவடிக்கைகளின் கீழான காசாக நிறுவனத்திற்கு கிடைக்காத

ரூபா 363,760 பெறுமதியான அந்நிய செலாவணி வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) சேமிப்புக் கணக்கில் நிலவிய ரூபா 146,808 தொகையான மீதியானது நிதி நிலைமைக்கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) ஏனைய பெறுவனவுகள் மற்றும் முற்பணங்களின் கீழ் நிதி நிலைமைக்கூற்றின் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த முறையே ரூபா 2,139,915 தொகை மற்றும் ரூபா 174,478,148 தொகை காசுப்பாய்ச்சலினை தயாரிக்கும் போது செயற்பாட்டு மூலதன வேறுபாட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான பீடத்திற்குரிய நானாவித முற்பணப் பதிவேட்டிற்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்க்கப்படாத மீதிகள் ரூபா 298,963 ஆக காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதியானது ரூபா 358,963 ஆனமையால் முற்பணப் பெறுமதியில் ரூபா 60,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) பாடநெறி வருமானங்களை சேகரிக்கும் சேமிப்புக் கணக்கின் மீதியானது 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 690,282 ஆன போதிலும், வங்கி மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அந்த மீதியானது ரூபா 7,091,000 ஆனமையால் ரூபா 6,400,718 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தினால் 15 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,711,000 தொகையான கடன் பணத்தில் ரூபா 1,348,995 தொகையான கடன்

மிதிகள் 02 முதல் 15 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்றதுடன், அந்த மீதியை அறவிட முடியாதிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தில் வருடாந்தம் நடாத்தப்படும் விளையாட்டு விழாவிற்குரிய செலவினங்களை தீர்ப்பதற்காக Amalgamated Club Loan ஆக 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் வழங்கப்பட்டிருந்த முற்பண தொகையில் ரூபா 4,474,645 தொகையான மீதியானது கணக்காய்வு திகதியான 2018 செப்தம்பர் 14 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை	
(i) XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பந்தி	- வீட்டு வாடகைகளை அறவிடும் போது கவனத்திற்கொள்ளப்படும் பிரமாணங்களுக்கு முரணாக பல்கலைக்கழகங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் 2015 யூலை 09 ஆந் திகதி நடாத்தப்பட்ட 496 ஆம் கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தின் போது குடும்ப வீடமைப்பு உத்தியோகத்தர் ஒருவரின் அடிப்படை சம்பளத்தில் 10 சதவீதமும், 2016 மார்ச் 09 ஆந் திகதி நடாத்தப்பட்ட 506 ஆம் கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தின் போது தனியொரு உத்தியோகத்தரின் அடிப்படைச் சம்பளத்தின் 3 சதவீதமுமாக வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது.

	- 7/7/9 ஆம் இலக்க 1,050 கன அடிகள் கொண்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு 2002 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் வீட்டு வாடகை அறவிடாதிருக்க 2014 செப்தம்பர் 10 ஆந் திகதி நடாத்தப்பட்ட 487 ஆம் பல்கலைக்கழக கட்டுப்பாட்டுக் குழு தீர்மானித்திருந்தது.
(ii) XIX ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பந்தி	- ஏதேனுமொரு பதவிக்கு ஒதுக்கப்பட்ட வீட்டினை தவிர ஏனைய அனைத்து வீடுகளினதும் குத்தகை காலமானது 05 வருடங்களாக இருந்த போதிலும் 09 வீடுகளின் உத்தியோகத்தர்கள் 06 முதல் 16 வருடங்கள் வரையான காலமாக குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை	
(i) நிதிப்பிரமாணம் 104 (3) மற்றும் (4)	பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான ரூபா 4,750,000 பெறுமதியான மோட்டார் வாகனம் 2017 சனவரி 03 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்ததுடன், இந்த விபத்து தொடர்பில் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு பொறுப்புகூற வேண்டிய தரப்பினர் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபத்து தொடர்பில் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கையொன்று

		முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.
(ii)	நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை	- முற்பணம் வழங்கும் போது வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய முற்பணத் தொகை ரூபா 100,000 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 130,618 முதல் ரூபா 150,000 தொகையான வீச்சில் ஸ்ரீபாளி மண்டபத்தில் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 412,619 கூட்டுத்தொகையான முற்பணங்களும், பல்கலைக்கழகத்தின் 16 உத்தியோகத்தர்களுக்கு 14 சந்தர்ப்பங்களில் ரூபா 150,422 முதல் ரூபா 369,150 வரையான வீச்சில் ரூபா 4,153,393 கூட்டுத்தொகையான முற்பணங்களும் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு தேகையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.
		- பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் உரிய பணி நிறைவடைந்ததும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், ஸ்ரீபாளி மண்டபத்தில் 06 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 361,540 பெறுமதியான முற்பணங்கள் 2018 சனவரி 10 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிராததுடன், தீர்க்கப்படாத காலவீச்சானது 13 நாட்கள் முதல் 12 மாதங்கள் வரையானது என அவதானிக்கப்பட்டது. மேலும், பல்கலைக்கழகத்தினால் 2012, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 22 சந்தர்ப்பங்களில் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,411,812 பெறுமதியான முற்பணங்கள் கணக்காய்வு திகதியான 2018 ஆகஸ்ட் 17

ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வண்டினுள் பேராசிரியர்களுக்கு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 804,260 தொகை 2018 செப்தம்பர் 14 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவை

(i) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள்

பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா அனைத்து உத்தியோகத்தர்களினதும் உட்வருதல் மற்றும் வெளிச்செல்லல் ஆகிய நேரங்கள் பதிவு செய்ய வேண்டுமெனினும் 821 கல்விசார் உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்தி யிருக்காமையால் சம்பளம் மற்றும் படிகள் என ரூபா 822,509,565 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) XXII ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு

பரிசோதனை உத்தியோகத்தர் இறுதி தீர்மானத்திற்கு வரும் வரையில் கூடியளவு இடைவிடாது கூடி மூன்று மாதங்களினுள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். எவ்வாறெனினும், 2016 ஏப்ரல் 25 ஆந் திகதி பணி நீக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட பேராசிரியர் ஒருவர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் 2018 மார்ச் மாதம் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், 01 வருடமும் 10 மாதங்களும் கடந்திருந்தது.

(iii) XXVI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு		ஸ்ரீபாளி மண்டபத்தில் 2015 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட வாசிகசாலை புத்தக மதிப்பாய்வு அறிக்கைக்கமைய ரூபா 162,311 பெறுமதியான 713 புத்தகங்கள் மற்றும் ஐ.அ.டொலர் 126 பெறுமதியான 06 புத்தகங்கள் காணாமற் பேயிருந்ததுடன், இந்த காணாமற்போன புத்தகங்கள் தொடர்பில் தொடர்புடைய பிரமாணத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	1995 யூலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை	பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடும் போது பரீட்சை நடாத்தப்பட்ட திகதியிலிருந்து 03 மாத காலப்பகுதியினுள் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய போதிலும், ஸ்ரீபாளி மண்டபத்தினால் மீளாய்வாண்டினுள்நடாத்தப்பட்ட 06 பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்காக 05 மாதங்கள் முதல் 12 மாதங்களுக்கிடைப்பட்ட காலம் கடந்திருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 100,339,281 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 176,157,091 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகள் ரூபா 75,817,810 தொகையினால் வீழ்ச்சியடைந்திருந்தது. அரசின் மற்றும் ஏனைய மானியங்கள் ரூபா 143,645,382 தொகையினால் அதிகரித்திருந்த போதிலும் ஊழியர் ஊதியம் ரூபா 274,467,864 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு நிலவிய ரூபா 214,339,468 ஆன மிகையானது தளம்பளுடன் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 100,339,281 ஆகியிருந்தது.

எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசுக்கு செலுத்திய வரிகள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டு ரூபா 1,788,616,882 ஆக காணப்பட்ட நிறுவனத்தின் பங்களிப்பு இடையறாது வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 3,198,399,374 தொகையாகியிருந்தது.

3.2 நிறுவனத்தினால் மற்றும் நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

2000 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கொழும்பு பல்கலைக்கழகம் தொடர்பிலான நிறைவு செய்யப்படாத 37 வழக்கு நடவடிக்கைகள் காணப்பட்டதுடன், இந்த வழக்கு நடவடிக்கைகள் 03 முதல் 17 வருடங்கள் வரையான காலவீச்சிற்கு உரியனவாகும். மேலும், மீளாய்வாண்டிற்கான சட்ட செலவினங்களாக ரூபா 3,373,674 தொகை செலவிடப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

2016 ஆம் ஆண்டு முதல் கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் கட்டிடமொன்று மற்றும் உள்ளபடியான பதவியணி இணைப்பு மையமொன்றிற்காக (VCUC – CC) ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இதற்காக 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி (HETC) செயற்திட்டத்தின் மூலம் 2013, 2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் ரூபா 1,341,239 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணி இணைத்துக்கொள்ளப்படாமையால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் பிக்குகள் விடுதி 2006 ஆம் ஆண்டு முதல் குத்தகை வாடகை அடிப்படையில் தனியார் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன், மாதாந்த வாடகையாக ரூபா 325,000 படி 2017 ஆம்

ஆண்டிற்காக ரூபா 3,900,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. விடுதியின் பழுதுபார்த்தல் நடடிக்கைகள் குத்தகையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற நிபந்தனை 2017 சனவரி 18 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், விடுதியானது பல வருடங்களாக பழுதுபார்க்கப்பட்டிராமையால் குளியலறைகள் மற்றும் மலசலகூடம் ஆகியன பயன்படுத்தமுடியாத நிலைக்கு உள்ளாகியிருந்ததுடன், சுவர்கள் நிறம் மங்கிப்போயிருந்தன. 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்படும் விடுதிக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 25,555,000 தொகையான பணம் வாடகை அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்திற்கு நிரந்தரமாக பிக்குகள் விடுதியொன்று தேவையான போதிலும், இது வரையிலும் அந்த பணி நிறைவடைந்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வாகன பழுதுபார்த்தல் கோவைகளை பரிசோதிக்கும் போது வாகன விபத்துகளாக இனங்காணக்கூடிய பழுதுபார்த்தல்கள் மற்றும் நேரடியாக விபத்துகள் தொடர்பில் பதிவு கோவைகளில் காணப்பட்ட போதிலும், அதற்குரியதாக பல்கலைக்கழகங்கள் தாபனவிதிக் கோவையின் 6 ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபத்துகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்காமையால் விபத்துகள் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிராத நிலமையொன்று காணப்படுவதாகவும், பழுதுபார்த்தல் செலவினங்களுக்காக காப்பீட்டினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் இழக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 சனவரி முதல் நவம்பர் வரையிலும் வழங்குநர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 1,917,285 பெறுமதியான 34 கட்டளைகளுக்குரிய பொருட்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு ஐயவினாவின் பின்னர் அந்த கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) விஞ்ஞான பீடத்திற்காக 515 மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான இயலுமை காணப்பட்ட போதிலும், 2017 ஆம் கல்வியாண்டிற்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 404 மாத்திரமாகும். அதற்கமைய 111 மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) ஸ்ரீபாளி மண்டபம்

(i) மண்டபத்தின் ஆண்கள் விடுதி மற்றும் 3 விரிவுரை மண்டபங்கள் மிகவும் பழமையானவையாக இருந்ததுடன், நீண்ட காலமாக பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருத்தமற்ற நிலையிலிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) நிர்வாக கட்டிடத்தினுள் போதியளவான இடவசதி இல்லாதிருந்தமையாலும், பொது வசதிகள் குறைவடைந்தமையாலும் கட்டிடத்தின் ஒரு பகுதி வெடிப்பிற்குள்ளாகி தாழிறங்கும் அச்சுறுத்தலொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அந்த நிலமையின் அடிப்படையில் மற்றுமொரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2016 ஒக்தோபர் 28 ஆந் திகதி உயர் கல்வி அமைச்சிலிருந்து ரூபா 149.47 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையிலும் கட்டிடத்தின் நிர்மாணத்திற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மண்டபத்திற்கு சொந்தமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக பொருத்தமான கலைக்கூடமொன்னு இல்லாதிருந்ததுடன், மாணவர்களின் பிரயோக பரிசோதனைகளுக்காக வெளிச்சம் காணப்பட வேண்டிய போதிலும், அவர்களுக்கு அந்த வசதிகள் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) விரிவுரை கட்டமைப்பு திட்டம் மற்றும் பாட கால அட்டவணைகளுக்கமைய ஒவ்வொரு விரிவுரையாளராலும் நடாத்தப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் உள்ளபடியாக நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை ஒப்பிடும் போது சில விரிவுரையாளர்களால் நேர அட்டவணையிலுள்ள விரிவுரை மணித்தியாலங்களை நிறைவு செய்யாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(v) கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பரீட்சைகளை நடாத்தும் நாட்கள் காலத் திட்டமொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான உத்தேச திகதிகளின்றி 04 பாடநெறிகளுக்காக 05 பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

4.3 தொழிற்படு செயற்பாடுகள்

நிதிக்கூற்றுக்களுக்கமைய ஏலமிடப்படக்கூடிய பொருட்களின் பெறுமதி ரூபா 2,888,935 ஆக காண்பிக்கப்படுவதுடன், இவற்றுள் ரூபா 1,455,582 பெறுமதியான பொருட்கள் 2014 மற்றும் 2016 ஆகிய வருடங்களில் ஏலமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டவையான போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பொருட்கள் ஏலமிடப்பட்டிருக்கவில்லை.

4.4 உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகள் அத்துமீறப்படுதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 32 பேராசிரியர்களால் உடன்படிக்கை மீறப்பட்டமையால் ரூபா 43,349,296 தொகையான பணம் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அவற்றுள் 10 பேராசிரியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 18,358,698 தொகையான மீதி 21 முதல் 40 வருடங்கள் கடந்திருந்த போதிலும், எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

4.5 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் பதவியணி

கல்விசார் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 753 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 190 ஆகும். இவற்றுள் சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் பேராசிரியர் பதவிகளின் 30 வெற்றிடங்கள் நிலவியதுடன், 2017 ஆம் ஆண்டின் போது வெளி விரிவுரையாளர்கள் 263 பேர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 143,602,216 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கல்விசாரா பதவியணி

(i). கல்விசாரா பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1,119 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 278 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட 301 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் 66 பதவிகள் வெற்றிடமாக இருந்ததுடன், உயர் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்படும் பெயர்ப்பட்டியல் மூலம் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேர்கின்றமையால் தாமதங்கள் நிலவுவதாக உபவேந்தரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii). தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தகவல் தொடர்பாடல்) பதவிகள் முறையே 05 மற்றும் 19 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தகவல் தொடர்பாடல்) பதவிகளுக்காக ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று வெளியிடப்பட்டிராமையால் அதன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்ததாக உபவேந்தர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(iii). அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத சிரேஷ்ட சட்ட ஆலோசகர் பதவிக்காக 2015 செப்தம்பர் 9 ஆந் திகதி நடாத்தப்பட்ட 499 ஆம் கட்டுப்பாட்டு சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அவரது கடமைகளுக்கு மேலதிகமாக நியமிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது நிர்வாக நிதியத்தில் அவருக்கு ரூபா 12,000,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

4.6 வாகனப் பயன்பாடு

2015 செப்தம்பர் 18 ஆந் திகதிய 13/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கமைய பல்கலைக்கழகமொன்றின் உபவேந்தர், பதிவாளர், பிரதம நிதியாளர், நூலகர், பீடாதிபதி போன்ற பதவிகள் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு உரித்துடைய பதவிகளாகும். அவர்களுக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள வாகனங்களுக்கான எரிபொருள் படிகள் மாதாந்த சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டு செலுத்தப்பட வேண்டிய போதிலும், குறித்த எந்தவொரு உத்தியோகத்தருக்கும் எரிபொருள் படிகளாக செலுத்தாது ஒதுக்கப்பட்டுள்ள

வாகனங்களுக்காக பல்கலைக்கழக எரிபொருள் கட்டளைகள் மூலம் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய எரிபொருள் கட்டளைகள் மூலம் மாதாந்த எரிபொருள் படியினை மிகைத்து எரிபொருள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 07 உத்தியோகத்தர்களுக்காக 2017 சனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலும் செலுத்த வேண்டிய எரிபொருள் படிகள் ரூபா 1,053,540 ஆன போதிலும், கட்டளைகள் மூலம் வழங்கப்பட்டிருந்த எரிபொருள்களின் பெறுமதியானது ரூபா 2,345,437 ஆகும். அதற்கமைய உரிய எரிபொருள் படியினை மிகைத்து ரூபா 1,291,897 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5. நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 "கொள்கைத் திட்டம்" தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகம் அறிந்திருந்ததுடன், அதன் பணிகளுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைவதற்கான மைல்கற்களும் இலக்கினை அடைந்தமையை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது வறுமையை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல், பாலினை அடிப்படையாக கொண்ட பாதீடு, ஊனமுற்றோரை பலப்படுத்தல், சூழல் பேணுகையை அதிகரித்தல் மற்றும் நீர் மற்றும் சக்திப் பாதுகாப்பு போன்ற நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

20 மீண்டெழும் செலவின விடயங்களின் பாதீட்டுச் செலவு மற்றும் உள்ளவாறான செலவு ஆகியவற்ஈற ஒப்பிடும் போது 40 சதவீதம் முதல் 153 சதவீதம் வரையான விலகல்கள் நிலவின. மூலதன மானியங்களின் கீழ் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், பல்கலைக்கழகத்தினை சர்வதேசமயப்படுத்தல், அறிவினை மேம்படுத்தல் மற்றும் நிறுவன அபிவிருத்தி, மனிதவள மூலதன செயற்திட்டம் என்பவற்றுக்காக திறைசேரியிலிருந்து கிடைத்த நிதியேற்பாடான ரூபா 52,902,908 தொகையானது ஆண்டினுள் கட்டிட மேம்படுத்தல் மற்றும் நிலையான சொத்துக்களை சுவீகரிக்கும்

செலவின விடயங்களுக்கு வகைமாற்றம் செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய பாதீடாது தயாரிக்கப்பட்டு அவ்வப்போது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு நடைமுறைச்சாத்தியமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் எடுக்கப்பட வேண்டும்.

	முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு	அவதானிப்புக்கள்
(அ)	செயற்படு நிருவாகம்	விடுதியில் உள்ள மாணவர்களுக்கு கல்வி விடயங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான முறையில் விடுதிகளை பேணாமை மற்றும் வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்காமை.
(ஆ)	பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்	மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமை.
(இ)	பதவியணியினர் நிருவாகம்	ஆர்சேர்ப்பு நடைமுறையை துரிதப்படுத்ததாமை மற்றும் கல்விசார் பதவியணியினரின் உள்வருதல் பதிவு செய்யாமை.
(ஈ)	நூலக நிருவாகம்	காணாமற் போதல் தொடர்பான பதிவேடுகள் முறைப்படி பேணப்படாமை.
(உ)	களஞ்சியக் கட்டுப்பாடு	சரியான தகவல்கள் உள்ளடங்கிய பதிவேடுகள் பேணப்படாமை.

(ஊ) வாகனப் பயன்பாடு

வாகன விபத்துகள் தொடர்பில் அறிக்கையிடாமை

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

28.12.2018

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்புப் பல்கலைகழகத்தின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டு தொடர்பான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கப் பல்கலைகழகங்கள் சட்டத்தின் 108 (1) சரத்திற்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பான பதில்கள்.

2.2		கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்
2.2.1		இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக 2017 ஜூலை மாதம் 04 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு செயற் குழுக்கள் கூட்ட அறை இலக்கம் 05 இல் நடைபெற்ற 93 வது பொது அலுவல்கள் தொடர்பான கூட்டத்தில் அமைச்சின் செயலாளருக்கு இது பாரப்படுத்தப்பட்டு உள்ளது.
2.2.2		
(அ)		2018 ஜூன் மாதத்தில் அளத்தல் அலகு திருத்தப்பட்டதன் மூலம் இருப்புப் பெறுமதி திருத்தப்பட்டது.
(ஆ)		இந்த இருப்பு இரசாயனத் திரவியங்கள் தொடர்பானது ஆகும். 2018 ஆம் ஆண்டில், இருப்பு மெய் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இதனைக் கணக்கில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.
(இ)		2018 ஆம் ஆண்டில் இந்த தவறு மீண்டும் ஏற்படாது இருக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஏற்படுத்தப்பட்டு உள்ளது.
(ஈ)		
(i)		ஏற்றுக் கொள்ளவில்லை. இது கணக்குகளுக்கு இடையிலான ஒரு பணப் பரிமாற்றம் அல்ல, ஆனால் அது

		காசுப் பெறுதியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட காரணத்தினால், அரசாங்க மானியங்களில் உள்ளடக்கப்பட்டு இருந்தது. இந்த வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற இலாபம் ரூ. 363,760/-, செயற்பாட்டு மூலதனத்திற்கு கைவரப் பெறாத நயமாக காசுப் பாய்வுக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்ற போது பதிவு செய்யப்பட்டன.
(i)		பிரதான அறக்கட்டளை நிதியிங்களில் இருந்து பெறப்பட்ட வருமானத்தில் இருந்து 25% இனை மாற்றுவதற்காக இந்த சேமிப்புக் கணகுகள் திறக்கப்பட்டன. சேமிப்புக் கணக்குகளுக்கு வட்டி வருமானம் கிடைக்கப் பெறுகின்றமையால், இது முதலீடுகளின் கீழ் காட்டப்படுகின்றன. எவ்வாறாயினும், 27.12.2018 அன்று இந்தக் கணக்குகள் மூடப்பட்டு நிலையான வைப்புக் கணக்குகள் திறக்கப்பட்டன.
(iii)		செயற்படு மூலதனத்தைக் கணிக்கின்ற போது, தற்பொது நடைமுறை அல்லாத சொத்துக்களாகக் காட்டப்பட்ட மூலதன முற்பணங்கள், 2018 ஆம் ஆண்டில் இருந்து காசுப் பாய்வுக் கூற்றுக்கள் தயாரிக்கின்ற போது மூலதனச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்படும்.
2.2.2	**விளக்கப்படாத வித்தியாசங்கள்**	
(அ)		இது கணக்கியல் மென்பொருளின் மூலம் தலைகீழ் உள்ளீடுகளை உள்ளீடு செய்வதில் ஏற்பட்ட ஒரு தவறு என்பதுடன் 2018 ஆம் ஆண்டில் இதனைத் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஆ) (b)		2018 ஆம் ஆண்டில் குறித்த மொத்த சேகரிப்புக் கணக்கு நிலுவையை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
2.3	**வருமதி மற்றும் சென்மதிக் கணக்குகள்**	

(அ)			கடன் உடன்படிக்கைக்கு இணங்க, அவர்களுடைய பல்கலைகழகங்கள் சேமலாப நிதியிலிருந்து இந்தப் பணத்தினை அறவிடுமாறு எமது 13.09.2018 மற்றும் 20.09.2018 திகதிய (மருத்துவ பீடம்) கடிதங்களின் மூலம் முறையே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறித்த ப.சே.நி. மீள்கொடை கோரிக்கைப் படிவங்களை பெறுகின்ற வரையில் இந்தத் தொகையினை அறவிட முடியாது எனச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. [இணைப்பு 2.3 (அ)]
(ஆ)			2018 ஆம் ஆண்டில் இந்த தீர்க்கப்படாத முற்பணங்கள் பணமான ரூ. 1,300,000.00 இனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது. (பேரேட்டு இல. ஆர்.எம்.யூ./2018/102) மீதமிருக்கும் நிலுவையைச் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டு இருக்கின்றது.
2.4	**சட்டங்கள், ஒழுங்குவிதிகள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**		
(அ)			
			பல்கலைக்கழகத்தின் பேரவை 14.06.2018 அன்று நடைபெற்ற அதன் 538வது கூட்டத்தில் பல்கலைக்கழக வதிவிட வாடகைகளை அறவிடுவதற்கு பரிந்துரைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு உப- குழுவினை நியமித்தது. இந்த உப- குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு இணங்க, முதல் மூன்று (3) வருடங்களுக்கு, குடும்ப விடுதிகளுக்கு அடிப்படைச் சம்பளத்தில் 10% உம் பிரமச்சாரிகள் விடுதிகளுக்கு அடிப்படைச் சம்பளத்தில் 3% உம் விதிக்கப்பட வேண்டும் மற்றும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு விலைமதிப்புத் திணைக்களத்தில் இருந்து

			பெறப்பட்ட விலைமதிப்பிற்கு இணங்க அறவிடப்பட வேண்டும். அதற்கிணங்க, விலைமதிப்புத் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட விலைமதிப்பு மற்றும் துணை வேந்தரினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் 16.08.2018 அன்று நடைபெற்ற முகாமைத்துவக் குழு கூட்டத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டது. முகாமைத்துவ குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். கொழும்புப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுதிக்கான வாடகை 2001 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டது. பல்கலைக்கழகப் பேரவை 10.09.2014 அன்று நடைபெற்ற அதன் 487வது கூட்டத்தில் அதனைப் பதிவாளரின் உத்தியோகபூர்வ வதிவிடமாக ஒதுக்குவதற்குத் தீர்மானிதது அந்த வதிவிடம் தொடர்பில் வாடகை அறவிடுவது இல்லை எனத் தீர்மானித்தது. ஆகையால், பதிவாளரின் உத்தியோக பூர்வ வதிவிடத்திற்கான வாடகை 01.12.2014 இலிருந்து அறவிடப்படுவது இல்லை. [இணைப்பு 2.4 (அ), (i) ()]
			14.06.2018 அன்று துணை வேந்தரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு, உத்தியோக பூர்வ விடுதிகளில் ஐந்து (05) வருடங்களுக்கு மேலாக தங்கி இருப்பபவர்கள் மூன்று மாத அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னர் வெளியேற்றப்பட வேண்டும். இந்தப் பரிந்துரை 14.08.2018 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக முகாமைத்துவக் குழுவின் முன் முன்வைக்கப்பட்டது. முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஆ)			
			KR-2293 வாகனத்தினைச் செலுத்திய சாரதிக்கு எதிராக பூர்வாங்க விசாரணை நடாத்தப்பட்டது. அதற்கிணங்க, இந்தப் பூர்வாங்க விசாரணை அறிக்கை மற்றும் பொலிஸ்

			அறிக்கையின் அடிப்படையில், சாரதியின் சம்பள ஏற்றம் ஏற்கனவே இடைநிறுத்தம் செயப்பட்டுள்ளதுடன் வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்கான செலவு தொடர்பில், வாகனக் காப்புறுதியாளரான, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 26.11.2018 திகதிய அதன் 662672 இலக்கக் காசோலை மூலம் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையாக ரூ. 3,596,050.00 கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தி இருந்தது.
